# வளன் சோலை


## யா/ சென். ஜோசப்ஸ் வித்தியாலயம்

கொலம்பகம்

## 150 ஆவது ஆண்டு நிறைவு

# சிறப்பு மலர்

2011




1861

# வளன் சோலை

கொலம்பகம்

## யா / சென் ஜோசப்ஸ் வித்தியாலயம்

## 150ஆவது ஆண்டு நிறைவு

## சிறப்பு மலர்

# பாடசாலைக் கீதம்

நீழ்புகழ் யாழ்நகர் நித்திலத் திருவாய்
ஆழி எழில் தரு கொலம்பகச் சோலை
மாபெரும் புனித வளன்கலை மாடம்
மங்காச் சிறப்புற வாழியவே!

இயல் இசைநாடகம் முத்தமிழ் செல்வம்
எண்ணமுத்திரு கண் மணி ஒளிர
நிலமிசை விண்ணின் வளர்பிறை அன்ன
நிலவுறு கலையகம் வாழியவே!

அறிவுடன் ஆற்றல் வளமுற வாழ்வில்
ஒழுக்கமும் உயிரென ஓம்பிடவே
இங்கு நற்கல்வி கொடையருளாளர்
எமதரும் குரவரும் வாழியவே!

பலகலை ஞானம் பண்பு மெய்ஞானம்
பணிவொடு நிறைமதி வாணர்களாய்
உறவினில் ஒருதாய் மைந்தர்களாய் - நாம்
உலவிடும் திருமனை வாழியவே!
வாழியவே! வாழியவே!

# வரவேற்புப் பாடல்

## பல்லவி

வருகவே வருகவே வருகவே - உம்மை
இருகரம் கூப்பி சிரமது தாழ்த்தி
வரவேற்றோம் மனம் பூத்தோம் - வருகவே.

## சரணம்

1. இறையருள் பாவலன் எங்களின் காவலன்
தூயநல் வளனவர் பெயர்பெறு சோலையின்
ஆண்டுநூற் றைம்பதின் நிறைவினில் மகிழ்ந்திட
வேண்டியே வந்தநல் உறவுகள் நீரின்று - (வரு)

2. தேவனின் திருமறை பாரினில் ஓங்கிட
ஆனநற் பணிபரி ஆயராம் மேன்மைகொள்
தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை
பிரதம விருந்தின ராகவே அமர்ந்திட - (வரு)

3. கல்வியின் திணைக்களத் துயர்பணி புரிபுகழ்
செல்வரத் தினமுடன் பாஷையூர் பங்கிதன்
தந்தைறோய் பேடினன் உடன்மண்ணின் மைந்தர்கள்
அருட்பணி பிலிப்புடன் நேரியோ அடிகளும் - (வரு)

4. ஆண்டுநூற் றைம்பது காணுமெம் பள்ளியின்
நீண்டிடு புகழ்தனை பாடிட வந்தநல்
பெற்றவர் பெரியவர் உற்றவர் உறவுகள்
இத்தின நிகழ்வினில் மகிழவுடன் இணையவே - (வரு)


## எமது வித்தியாலயத்தின் ஸ்தாபகர்



பேரருட்திரு. கி. பொஞ்ஜீன் (அ.ம.தி)

(1861)

# கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலயம் தனது 150 ஆவது ஆண்டை நிறைவு செய்யும் வேளை யாழ் ஆயரின் ஆசிச் செய்தி



"இத்தகைய சிறுபிள்ளைகளுள் ஒன்றை என் பெயரால் ஏற்றுக் கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக் கொள்கின்றார்" (மாற்கு 9:37a)

கத்தோலிக்க விசுவாசம் யாழ் மண்ணில் வேரூன்றிய காலம் தொடக்கம் அருட்பணியாளர்களின் உந்துதலால் சிறுவர்களின் கல்வியைக் கருத்தாகக் கொண்டு அமைக்கப்பட்ட கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலயம் ஆனது, இன்று தன் கல்விச் சேவையில் 150 ஆண்டுகளை வெற்றியுடன் நிறைவு செய்து மகிழும் வேளை நானும் மகிழ்வடைகின்றேன்.


முன்னைய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அண்மையில் அமைந்த இப்பாடசாலை பல கத்தோலிக்க ஆசிரியர்கள் தமது செய்முறைப் பயிற்சிகளை பெற்றுக் கொள்ள உதவியிருக்கின்றது.

எம் இளம் தலைமுறையினர் கல்வி வாழ்விலும், ஒழுக்க வாழ்விலும் முன்னேற இப்பாடசாலை பல சேவைகளை ஆற்றியுள்ளது. கத்தோலிக்க திருச்சபைக்கு பல வழிகாட்டிகளை உருவாக்கித் தந்துள்ளது. எனவே எம் பிள்ளைகளின் கல்வி வாழ்வில் ஒளியூட்டிவரும் இப்பாடசாலை தன் பணியினால் மென்மேலும் முன்னேறவும், இப்பாடசாலை வரலாற்றில் பங்கெடுத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் இறை ஆசீரையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

நன்றி

மேதகு. இ. தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்
02.03.2011

**MESSAGE FROM THE HON, GOVERNOR, NORTHERN PROVINCE MAJOR GENERAL GA CHANDRASIRI**



I am delighted to learn that St.Joseph's Vidyalayam, Colombuthurai has a long history of its development starting from 1861. Since, then it enjoyed the partronage of eminent learned people, missionary and public and developed bit by bit for a period of over a century and got into today's shape. It produced enormous numbers of disciplined learned citizens and contributed to the development of teaching community through its training quality.

I am privileged in extending my well wishes to this school on the eve of celebrating its 150th anniversary.

I wish all the best to the Management, Teachers and Students of this School.

GA Chandrasiri,
Governor,
Northern Province.

# தொழிற்பயிற்சியுடன் கல்விப் பயிற்சி வழங்கிய பாடசாலை

அருட்தந்தையர்களால் 150 ஆண்டுகளுக்கு முன்பு தாபிக்கப்பட்ட இவ் வித்தியாலயம் இப்பகுதியின் ஏழைச் சிறுவர்களின் அறிவுக்கண்களைத் திறந்து, இச்சமூகத்தினை சிறந்த உறுப்பினர்களாக்க உதவியது என்றால் மிகையாகாது. தற்போதைய நவீன யுகத்திற் தொழிற்பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதை 150 ஆண்டுகளுக்கு முன்பே தீர்க்கதரிசனமாக உணர்ந்து தொழிற்பயிற்சிக் கூடமாக ஆரம்பிக்கப்பட்டு நாளடைவில் பாடசாலையாக மாறியுள்ளது. இப்பாடசாலை கத்தோலிக்கத் திருச்சபையின் நிர்வாகத்தில் இயங்கி மாணவர்களுக்கு ஒழுக்கத்தையும் சமய விழுமியங்களையும் போதித்துள்ளது. அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டதும் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை உருவாக்கப்பட்டது. இவ்வாசிரிய கலாசாலையிற் பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கு கற்பித்தற் பயிற்சி வழங்கியும் வந்துள்ளது. தற்போது இடைநிலைக் கல்வி வரை கல்வி போதிக்கப்படுவதால் விஞ்ஞானம், கணிதம் போன்றவற்றையும் மாணவர்கள் கற்கக் கூடியதாக உள்ளது. இப்பாடசாலை பொதுப் பரீட்சைகளிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் உயர்ந்து மேம்பாடடைய வேண்டும். இத்தகைய மேம்பாட்டினை வழங்கும் அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டுவதுடன் இனி வரும் காலங்களிலும் சகல மனித, பௌதீக வளங்களையும் பெற்று கல்வித் தொண்டாற்ற எனது வாழ்த்துக்கள்.

இ.இளங்கோவன்
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம்.

# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணத்தில் உள்ள கொழும்புத்துறை சென் ஜோசப்ஸ் வித்தியாலயம் தனது 150ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் முகமாக வெளியிடும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

தூரநோக்கு சிந்தனையுடன் நைற் சவரிமுத்து சந்திரசேகரமுதலியார் என்பவரால் கொழும்புத்துறை கடற்கரைப்பகுதியில் வாங்கப்பட்ட நிலம் 'கொலம்பகம்'' என பெயர் சூட்டப்பட்டு, பாடசாலை ஒன்றை அமைத்து பிரதேச வாழ் மக்களின் வாழ்வாதாரக் கல்வியை வழங்க முன்வந்தமை ஸ்தாபகரின் நல்லெண்ணத்தை துல்லியமாகப் புலப்படுத்துகின்றது. இதற்கு "கொலம்பகம் கைத்தொழிற் பாடசாலை எனப் பெயரிட்டமை அதன் நோக்கத்தை தெளிவு படுத்துகின்றது.

தொழிற் கல்வியுடன் மட்டும் நின்று விடாமல் பாலர் கல்வி, ஆசிரியர் கல்வி, போன்ற சமூகத்துக்குத் தேவையான கல்வித்துறைகளை இனங்கண்டு வளப்படுத்த முனைந்தமையும் காலவோட்டத்தின் இழுவிசைக்குத்தக பாடசாலையை இசைவாக்கம் செய்து சமூக சேவையில் முன்னணியில் நின்ற போக்கினையும் எடுத்தியம்புகின்றது. ஆன்மீக வளர்ச்சிக்கும் ஈடுகொடுக்கும் வகையில் 'புனித சூசையப்பர் துறவறசபை' இப்பாடசாலையின் வளர்ச்சிப்போக்கில் ஒரு மைல் கல் என்றால் மிகையாகாது.

ஆசிரியர் கல்வி, மாணவர் கல்வி என்பன தனித்தனி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டமை அரசாங்கம் இப்பாடசாலையை பொறுப்பேற்ற பின்னர் நிகழ்ந்த வரவேற்கத்தக்க ஒரு செயற்பாடாகும்.

காலப்போக்கில் பௌதிக சூழல், கல்விப்பரிமாணம் என்பவற்றில் வளர்ச்சி கண்ட போதிலும், பல இடர்பாடுகளை எதிர்கொண்டு அவற்றையெல்லாம் சவாலாக ஏற்றுக்கொண்டு வீறுநடைபோட்டு, இன்று தனது நூற்றியைம்பதாவது அகவையை சிறப்பாகக் கொண்டாடும் நிலைமை எனக்கு மிகவும் உள்ளப்பூரிப்பை ஏற்படுத்துகின்றது.

அழியாச் செல்வமாகிய கல்வியை பிரதேச மக்களுக்கு வழங்குவதில் 'தனக்கு இணை தானே' என்று செயற்படும் யா/சென்ஜோசப் வித்தியாலயம் மேலும் மேலும் பல சிறப்புக்கள் கண்டு பல்லாண்டு காலம் வாழ இறைவன் என்றும் துணைநிற்பாராக.

வாழிய பல்லாண்டு.

மாகாணக்கல்வித்திணைக்களம்
வடமாகாணம்.
29.08.2011

ப. விக்னேஸ்வரன்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்

# ஆசிச்செய்தி



கொழும்புத்துறை புனித வளனார் பாடசாலை 150வது ஆண்டு நிறைவை எதிர்வரும் புரட்டாதி மாதம் மகிழ்வுடன் கொண்டாட இருப்பதையிட்டு நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். நீண்ட காலமாக கல்விப் பணியில் ஈடுபட்டு, இந்த பாடசாலையில் கடமையாற்றிய, கடமையாற்றிக் கொண்டிருக்கும் அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் இறையாசியுடன் வாழ்த்தி நிற்கின்றேன்.

அருட்தந்தை பொஞ்சின் அடிகளாரால் (பின் யாழ் ஆயராக இருந்தவர்) 1861இல் ஏழை, அனாதைப் பிள்ளைகளுக்கு கல்வியூட்டும் நல்லெண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இச்சிறிய பாடசாலையானது காலப்போக்கில் தச்சுத்தொழில், அச்சுத்தொழில், விவசாயம், தையல், கயிற்றுத்தொழில் என்பனவும் கற்பிக்கப்பட்டு "கொழும்புத்துறை கைத்தொழில் பாடசாலை" எனவும் அழைக்கப்பட்டது. அதன் பின்னர் இப்பாடசாலை, ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் கலாசாலையாகவும் வளர்ந்து மேற்றிராசனத்திலே இருந்த ஆரம்ப பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை வழங்கிய கலாசாலையாகவும் காணப்பட்டது.

1961ம் ஆண்டு இப்பாடசாலை அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட பின் ஆசிரியர் கலாசாலை வேறாகப் பிரிந்து இயங்கத் தொடங்கியது. இருந்தும் புனித வளனார் பாடசாலையானது தொடர்ந்தும் அப்பிரதேச மக்களுக்கு அரும்பணி ஆற்றியதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த சில ஆண்டுகளாக இப்பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்குவது பெருமைக்குரிய விடயமாகும். விசேட விதமாக உதைப்பந்தாட்டத்தில் சாதனை படைத்ததையிட்டு நான் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

போரின் விளைவாக இப்பாடசாலை நலிவுற்ற நிலையில் காணப்பட்டாலும் தற்போதைய அதிபர், ஆசிரியரின் முயற்சியினால் உயர்ந்து கல்விப் பணியை திறம்பட ஆற்ற வேண்டுமென்று ஆசித்து இதற்கு பெற்றோர், பழைய மாணவர்கள் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் எதிர்பார்த்து நிற்கின்றேன். எதிர்வரும் காலங்களிலும் இப்பாடசாலை கல்வியறிவை, சமய அறிவை உற்சாகத்தோடு முன்னெடுத்துச் செல்ல இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

அருட்பணி. ஜஸ்ரின் B.ஞானப்பிரகாசம்
குருமுதல்வர்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

# பாடசாலைக் கல்விச் சமூக ஒத்துழைப்பு

# தேவையான ஒரு கலாலயம்

மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
18.03.2011.

கொழும்புத்துறையில் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை, கத்தோலிக்க குருமாரின் கல்விப் பீடம் ஆகியன அமைந்துள்ள ஒரு கல்விக் கவிவு நிலை, கல்விச் சூழல், கல்விச் சுவாத்தியத்தின் மத்தியில் அமைந்து 150 வருடங்கள் ஏழைச் சிறார்களின் அறிவுக் கண்களைத் திறந்து பெரும் தொண்டாற்றியுள்ளது யா/சென். ஜோசப்ஸ் வித்தியாலயம். 100 ஆண்டுகள் மனிதன் வாழ்வது அரிது. ஆனால் மனிதர்களால் நடாத்தப்படும் தாபனம் 150 ஆண்டுகளுக்கு மேல் சேவையாற்றுகிறது. எனவே இத் தாபனத்தில் சேவையாற்றி ஓய்வு பெற்ற அதிபர், ஆசிரியர்களின் கடமையுணர்வினை நினைவு கூர்ந்து அவர்களுக்கு எமது தலைசாய்ந்த வணக்கத்தினைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். இப் பாடசாலையிற் கல்வி கற்கும் மாணவர்கள் நல்ல உடற்றகவு உள்ளமையாலும், கழகங்களிற் பயிற்சி பெறுவதாலும் விளையாட்டுப் போட்டிகளிற் சிறப்பான இடத்தைப் பெறக் கூடியதாக உள்ளது. இப்பாடசாலையிற் கல்விப் பெறுபேறுகள் அதிகரிக்கப்படவேண்டும். இதற்காக இப்பாடசாலைக் கல்விச் சமூகம் உழைக்க வேண்டும். இப்பாடசாலை கல்விச் சமூக அங்கத்தவர்களான பெற்றோர்களும் பழைய மாணவர்களும் தமது ஒத்துழைப்பை வழங்கிப் பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தியாக்க உதவவேண்டும். எல்லோருக்கும் கல்வி எனும் வாசகம் முற்றுப்பெற இச்சூழலில் உள்ள சகல பிள்ளைகளும் இப் பாடசாலையிற் சேர்ந்து கல்வி கற்று க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற உதவ வேண்டும். அத்துடன் மறைக்கல்வி, ஒழுக்கம் என்பவற்றையும் மேம்படுத்த உதவ வேண்டும். இப் பாடசாலையிற் தற்போது கடமையாற்றும் அதிபர்.திரு.பா.வின்சென்ற் அவர்களுக்கும், அவரோடு சேர்ந்த ஆசிரிய குழாம் செய்யும் கல்வித் தொண்டிற்கும் எனது வாழ்த்துக்கள். நூற்றைம்பது ஆண்டு விழாக்காணும் இப்பாடசாலை வருங்காலத்தில் சகல வளங்களையும் பெற்று, மாணவர்கள் கல்வியை மேம்படுத்த எனது வாழ்த்துக்கள்.

வே.தி.செல்வரத்தினம்
பிரதி செயலாளர்,
கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை
அமைச்சு - வடமாகாணம்.

# வாழ்த்துச் செய்தி

"தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

கற்றறிந்தோர், தாம் கல்வியினால் இன்புறுவதோடு உலகமக்களும் இன்புறுவதைக் கண்டு மென்மேலும் கற்கவும் கற்பிக்கவும் விரும்புவர். உலகப் பொதுமறையாம் திருக்குறளின் வழி யா/ சென் ஜோசப் வித்தியாலய சமுகத்தினர் நூற்றைம்பது ஆண்டு நிறைவையொட்டி விழா எடுத்து மலர் வெளியிடுவதையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன்.

யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் மிஷனரிமார்களின் பங்கு அளப்பரியது. இவ்வகையில் யா/சென் ஜோசப் வித்தியாலயமானது 1861ம் ஆண்டு புரட்டாதி மாதம் எட்டாம் திகதி "கொலம்பகம் புனித சூசையப்பர் சாதனாக் கழகம்" என்ற பெயருடன் தொழிற்கல்வி பெறும் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு இந்த நூற்றைம்பது ஆண்டு காலத்தில் பல்வேறு பரிமாணங்களுடன் புத்துயிர் பெற்று தற்போது கொழும்புத்துறையில் ஒரு சிறந்த பாடசாலையாக பாரிய வளர்ச்சியும், அமைப்பும் கொண்டு விளங்குகிறது.

நூற்றைம்பது வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தனியே சமயத்தை மட்டும் போதிக்கவில்லை. கல்வியையும் அக்கறையுடன் வளர்த்து வந்துள்ளது. "ஒரு பணி சிறக்க நல்லதோர் அர்ப்பணம் வேண்டும். ஆழமான அர்ப்பணத்தினாலேதான் உயர்வான சாதனைகள் செய்ய முடியும்" இவ்வகையில் இப்பாடசாலையை பதினைந்து தசாப்தங்களாக தொய்வின்றி, சோர்வின்றி, விறுவிறுப்புடன் உற்சாகமாக வளர்த்து வந்த பெரியார்கள், குருமார்கள், நன்றியுடன் வாழ்த்தப்பட வேண்டியவர்கள், கல்விக்கண் திறந்து தியாகம் படைத்த அதிபர்கள், ஆசிரியர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். மேலும் அண்மைக் காலமாக புத்தூக்கம் கொடுத்து புதிய திட்டங்களுடன் பாடசாலையை வழி நடத்திவரும் அதிபர், ஆசிரியர்களின் பணி மென்மேலும் சிறப்புறத் தொடரவேண்டும் எனவும் விழா சிறப்புறவும் இறைவனை வேண்டுவதுடன் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யோ. ரவீந்திரன்
வலயக்கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



## "சென்.ஜோசப்ஸ் வித்தியாலயத்தின் தோற்றம்" — பாரம்பரிய கல்வி மரபில் மீள் சீரமைப்பிற்கான ஒரு தொடக்கப்புள்ளி.

கொழும்புத்துறை சென்.ஜோசப்ஸ் வித்தியாலயம் தனது 150 அகவையைப் பெருமையோடு நிறைவு செய்வதை நினைவுகூர்ந்து வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டுப் பெரும் மகிழ்வடைகிறேன். ஒரு பாடசாலை 150 ஆண்டுகள் நிறைவு செய்கின்ற வரலாற்றுச் சாதனைகளுக்குப் பின்னால் அப்பாடசாலையைப் பின்புலமாகக் கொண்டு வளர்ந்த சமூகத்தின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சியும், மாறுதல்களும்,சமூக ஈடேற்றமும் அடங்கியுள்ளதென்பதில் ஐயமில்லை. அதை இப்பாடசாலைக்கும் அதைச் சார்ந்த சமூகத்திற்கும் குறிப்பாக கொழும்புத்துறை மக்களுக்கும் இடையிலான உறவையும், தொடர்பையும் கொண்டு உணரமுடிகிறது.

பண்டைய சிங்கள இலக்கியங்களில் கொலம்ப எனவும், தமிழ் இலக்கியங்களில் கொழும்புத்துறை எனவும் அழைக்கப்பட்ட பாடசாலை அமைந்துள்ள இப்பிரதேசமே ஆனையிறவுப் பாதை திறப்பதற்கு முன்னர் பண்டைய காலத்தில் யாழ்ப்பாணத்திற்கும், தென்னிலங்கைக்கும் (கொழும்புக்கும்) இடையிலான தரைவழிப்பாதையின் மையமாகத் திகழ்ந்தது. அதனால்தான் இவ்விடம் கொழும்புத்துறை என்ற பெயரைப் பெற்றது. 16ஆம் நூற்றாண்டு யாழ்ப்பாணம் வந்த போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராசதானியின் தலைநகரான சிங்கைநகரின் பிரதான அரசமாளிகைக் கட்டிடத் தொகுதி ஒன்றைத் கொழும்புத்துறையில் கண்டதாக தமது ஆவணங்களில் கூறியுள்ளனர். அத்தகைய வரலாற்றுப் பழமைவாய்ந்த கொழும்புத்துறையை மேலும் பெருமைப்படுத்தும் நோக்கில் 1861 இல் முதன் முதலாக "கொலம்பகம் புனித சூசையப்பர் சாதனாக் கழகம்" என்ற பெயரில் தொடங்கப்பட்ட பாடசாலையே 1961 இல் அரச நிர்வாகத்தின் கீழ் கொழும்புத்துறை சென்.ஜோசப்ஸ் வித்தியாலயம் என்ற பெயரில் மலர்ந்துள்ளது. தொழில்சார் கல்வியை அறிமுகப்படுத்தும் நோக்கில் "கொலம்பகம் கைத்தொழில் பாடசாலை" என்ற பெயரில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி காலப் போக்கில் பாடவிதானத்திலும், பாடசாலைக்கான மூலவளத்திலும், ஆசிரிய மாணவ எண்ணிக்கையிலும், கல்லூரிக்கான புதிய கட்டிடங்களிலும் பல மாற்றங்கள், அபிவிருத்திகள் ஏற்பட்டு ஒரு முன்னணிப் பாடசாலையாக, சில காலங்களில் ஆசிரியர் பயிற்சிப் பாடசாலையாகவும் வளர்வதற்கு ஏறத்தாழ 14 அதிபர்களினதும், பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்களினதும் அர்ப்பணிப்பான சேவையே காரணமாகும். அவர்களுள் பாடசாலையின் உருவாக்கத்திற்கும், அதன் தொடக்ககால வளர்ச்சிக்கும் முன்னோடிக் காரணகர்த்தாவாக இருந்து செயற்பட்ட நைற் சவரிமுத்து சந்திரசேகர முதலியார், அருட்திரு பொஞ்சின் அடிகளார், வண. போசோக் சுவாமிகள், வண. பிளானிக் சுவாமிகள் ஆகியோரின் சேவைகளையும், பணிகளையும்

இம்மலரில் நன்றியோடு நினைவுபடுத்திக் கொள்வதில் இம்மலர் மேலும் பெருமை பெறுகிறது. அவர்கள் இக்கல்லூரிக்கு ஆற்றிய தொடக்ககாலப் பணிகளே பிற்காலத்தில் அதிபர்களாகப் பதவிவகித்த பலருக்கும் உந்துசக்தியாக இருந்ததெனக் கூறலாம். கடந்த கால அசாதாரண சூழ்நிலைகளில் இப்பிரதேச மக்கள் தென்மராட்சிக்கும், மானிப்பாய்க்கும், யாழ்ப்பாணத்தின் ஏனைய பல இடங்களுக்கும் புலம்பெயர நேரிட்ட போதும் அங்கெல்லாம் இப்பாடசாலை இயங்கியமை அப்பிரதேச மக்களின் கல்வியில் இப்பாடசாலை கொண்டிருந்த அக்கறைக்குச் சான்றாகும். 2006 ஆம் ஆண்டு இப்பாடசாலையின் புதிய அதிபராக திரு.பா.வின்சென்ற் பதவியேற்றதைத் தொடர்ந்து இப்பாடசாலை புதுவேகத்துடன் வளர்ந்து செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது. தற்போது ஏறத்தாழ 170 மாணவர்களையும், 18 ஆசிரியர்களையும் கொண்ட ஆண்களுக்கான இப்பாடசாலை கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் அதீத அக்கறை காட்டி வருவதுடன், கல்விச் செயற்பாடுகளுக்கு அப்பால் கலை, விளையாட்டு ஆகிய துறைகளில் அதிக முன்னேற்றம் ஏற்பட்டு வருவது மகிழ்ச்சி தருவதாக உள்ளது. கல்லூரியின் வளர்ச்சியில் அதீத அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வரும் தற்போதைய அதிபர், மேலும் அதை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல பெற்றோரின் பங்களிப்பை நாடி, தனது நிர்வாகத்தை விரிவாக்கம் செய்திருப்பது பாடசாலை வளர்ச்சிப் பாதையில் புதிய காலகட்டத்தைக் குறித்து நிற்கிறது. தமிழர் வாழ்வியலில் கல்வி நிலையான சொத்தாகும். காலமாற்றத்திற்கு ஏற்ப சமகாலக் கல்வியில் ஏற்படும் மாற்றங்களை நாம் உள்வாங்கிக் கொள்வது தவிர்க்கவியலாது. அவை எமது எதிர்கால சமூக வளர்ச்சிக்கும் அவசியமானது. அதேவேளை அக்கல்விதான் எமது மரபுரிமைகளை, பண்பாட்டு விழுமியங்களை கண்டறிந்து பாதுகாக்கவும் உதவுகின்றன. அப்பணியைச் செய்து வரும் கொழும்புத்துறை சென்.ஜோசப்ஸ் வித்தியாலயம் எதிர்காலத்திலும் அப்பணியைச் சிறப்புறச் செய்ய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

பேராசிரியர். ப. புஷ்பரட்ணம்,
தலைவர்,
வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# வாழ்த்துச்செய்தி



யா/கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலயம் தனது நீண்ட காலக் கல்விப்பணியில் பல தசாப்தங்களைக்கடந்து சாதனைத்தடம் பதித்து இன்று 150வது ஆண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுகின்ற இவ்வேளையில், வெளிவரும் மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

யாழ்ப்பாணத்தின் கல்வி வரலாற்றுப் பயணத்தில் உயர்தரமான கல்வியை வழங்கி, சீரிய ஒழுக்க நெறிகளை உருவாக்க கிறிஸ்தவப் பாடசாலைகள் ஆற்றிய பணியை மறுக்க முடியாது. மேற்குலகப் பாடசாலைக்கல்வி முறைமையை இந்நாட்டில் அறிமுகம் செய்து அதன்மூலம் அவர்கள் ஊன்றிய வித்து ஆழ வேர்விட்டு, கிளை பரப்பி, வளர்ந்து பல கல்வியியலாளர்களையும், நற்பிரசைகளையும் உருவாக்கியது. அந்த வகையில் எம்மண்ணுக்கு வளம்சேர்த்த பெருமை இவ்வித்தியாலயத்துக்கும் உண்டு. நீண்ட வரலாற்றுடன் இவ்வித்தியாலயம் தேவாலயம், குருத்துவக்கல்லூரி முன்பு ஆசிரியர்கலாசாலை, அனாதை இல்லம், வடக்கே நீண்ட கடற்கரை என தெய்வீகச் சூழலினை அமைவிடமாகக் கொண்டிருப்பது மகிழ்வினைத் தரும் விடயமாகும்.

இத்தகைய பெருமையினைக் கொண்ட இப்பாடசாலை நவீன கல்விச் செல்நெறியில் தடம் பதித்து, மாணவர் தம் ஆளுமை ஒழுக்க விருத்தி மேம்பாட்டுக்கு பங்களிப்பினை வழங்க வேண்டும்.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக கல்விப் பணிபுரியும் அதிபர் திரு.P.வின்சென்ற் அவர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவரையும் இந்த மகிழ்வான வேளையில் பாராட்டுகின்றேன்.

திருமதி. அ. வேதநாயகம்
முன்னாள் வலயக்கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

# முன்னாள் துணைவேந்தரின் வாழ்த்து

கல்வியே எங்களின் பெருநிதியம். கல்வியின் வழியாகவே எங்கள் வாழ்வின் மேன்மைகளும் சமூகத்தின் மேம்பாடும்.

இந்தவகையில் எங்கள் புலத்து நிலைபேறான கல்விப் பணியின் 150 ஆண்டுகால சாதனைகளை யாழ்.சென்ஜோசப் வித்தியாலயம் கொண்டாடும் இவ்வேளை பெறுமதியானது.

இந்தப் பெறுமதியான பொழுதில் கூடுகின்ற எல்லோரும் 'அனைவருக்கும் கல்வி' என்ற இலட்சியத்தினை நிதர்சனமாக்கும் உறுதியினை எடுத்துக் கொள்வோம்.

எங்கள் பண்பாட்டின் புகழ்பூத்த நடனக்கலைஞரான வின்சென்ற் அவர்களின் தலைமைத்துவத்தில், இதயமும் அறிவும் இணைந்த நிர்வாகத்தில், வித்தியாலயத்தின் புகழ் மென்மேலும் ஓங்கவும், எங்கள் சமுதாயத்தின் கல்விக் கனவுகள் பலிதமாகவும் ஆண்டவனின் அருளாசி நிறைவதாக.

இந்நாளின் வைபவத்தின் அழகு காக்கும் அதிபர், ஆசிரியர், மாணவர் மற்றும் வித்தியாலய சமூகத்தினர் அனைவருக்கும் எல்லையிலாத என் அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர் என். சண்முகலிங்கன்
(முன்னாள் துணைவேந்தர்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# கோட்டக்கல்விப் பணிப்பாளரின் ஆசியுரை



யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் கடற்கரையோரத்திலே கொலம்பகம் புனித சூசையப்பர் சாதனாக்கழகம் என்ற பெயரில் 1861ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயம், இன்று தனது வளர்ச்சிப் பாதையில் அகவை 150தை அடைந்துள்ளது. இவ்விழாவை நிறைவாகக் கொண்டாடும் இவ்வித்தியாலயம் தொடர்ந்தும் பல் திறமைகளைக் கொண்ட மாணாக்கரை உருவாக்கும் கல்விச் சாலையாக வளரவேண்டும்.

கடல் அன்னையின் அரவணைப்பில், அதனையே நம்பி வாழும் ஏராளமான வறிய கிறிஸ்தவ குடும்பங்களுக்கு, கல்விச் செல்வத்தை வாரிவழங்கும் இவ்வித்தியாலயம் அமைந்துள்ள கொழும்புத்துறை பிரதேசம் கிறிஸ்தவர்களுக்கும், இந்துக்களுக்கும் ஒரு புனித தலமாகும். கத்தோலிக்க பாதிரிமாரை உருவாக்கும் மதபீடங்களும், யோகர்சுவாமிகளின் சந்நிதானமும் ஒருங்கிணைந்து இத்தலத்தை ஒரு புண்ணிய பூமியாக்கியுள்ளது. எனவே இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் கல்வியுடன் நிறைந்த ஆன்மீக ஈடேற்றத்தையும் பெற்று தூயவர்களாக, வல்லவர்களாக வாழ்வதற்கு இறையருள் கிட்டும்.

கொழும்புத்துறை பிரதேசத்திலே மறைந்து கிடக்கும் சகல வளங்களையும் வெளிக்கொணர்ந்து, அவற்றைப் பண்படுத்திப் பயன்படுத்துவதன் மூலம் கிராம எழுச்சியை அடைய முடியும். அவ்வாறே இவ்வித்தியாலயம் தன்னை நம்பி வந்த மாணவர்களின் மறைந்துள்ள ஆற்றல்களை தூண்டல் மூலம் வெளிக்கொணர்ந்து முறைசார் நோக்கில் வழிப்படுத்துவதன் ஊடாக சிறந்த வல்லுனர்களை உருவாக்க முடியும். வித்தியாலயத்தின் வளர்ச்சிப்பாதையில் தடைக்கற்கள், இடப்பெயர்வுகள், சொத்தழிவுகள் பல ஏற்பட்ட போதிலும், இன்றைய அதிபரும் அவர் வழி நடாத்துதலில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஆசிரியர்களும் இன்றைய புதிய கல்விக் கொள்கைகளை உள்வாங்கி வித்தியாசாலையை மீண்டும் வளர்த்தெடுப்பதில் ஊக்கமும் ஆக்கமும் காட்டி வருகின்றனர். அவர்களது அயராத உழைப்பிற்கும் அர்ப்பணிப்பான சேவைக்கும் என்றும் பாராட்டுக்கள்.

ஆரம்பத்தில் இவ்வித்தியாலயம் இக்கிராம மக்களுக்குரிய தொழில் துறைகளை கற்பிக்கும் ஒரு கைத்தொழில் பாடசாலையாக இருந்துள்ளது என்பதை இன்று இங்கு எஞ்சிக் காண்கின்ற அவ்வத்துறைகளுக்குரிய இயந்திர தளபாடங்கள் சாட்சிப்படுத்துகின்றன. மீண்டும் புதிய நடைமுறைகளுக்கேற்ப இத் தொழில்துறைகள் இங்கு வளர வேண்டும். கடந்து வந்த 150 ஆண்டுகளில் இவ்வித்தியாலயம் ஆற்றிய கல்விப்பணியினை பதிவு செய்கின்ற ஒரு ஆவணமாக, வெளிவர இருக்கின்ற 150ஆவது ஆண்டு மலர் திகழ உள்ளது. எனினும் தொடர்ந்தும் பல பரிமாணம் மிக்க வித்தியாலயமாக வளர நல் ஆசிகளைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்

திருமதி வ. சிவபாலன்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

# முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி

## கலாலயங்களின் ஒளிக்கீற்று

புனித சூசையப்பரின் திருவருளோடு அலைமோதும் கடலினை ஒரு புறமும், தென்னஞ்சோலைகளோடு கூடிய எழில்மிகு இயற்கைக் கோலத்தோடு அமைந்துள்ள குரு மடங்களை மறுபுறமும் கொண்ட சூழலில் கல்விப் பணியில் நீண்ட வரலாற்றுத் தடம் பதித்து தலைநிமிர்ந்து நிற்கும் கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயம் தனது 150 ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூர்ந்து வெளியிடுகின்ற இம்மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

யாழ்ப்பாண மக்களின் வற்றாத செல்வமான கல்விச் செல்வத்தை பாஷையூர், கொழும்புத்துறைப் பிள்ளைகளுக்கு வழங்கி பல்துறை விற்பன்னர் களையும், வைத்திய கலாநிதிகளையும், சட்டத்தரணிகளையும், வணக்கத்துக்குரிய அருட்தந்தையர்களையும் சகோதரர்களையும், உயர் பண்பு நிறைந்த குடும்பத்தலைவர்களையும் உருவாக்கி சமூகத்திற்கு வழங்கி வருகின்ற பணியில் கலாலயங்களின் ஒளிக்கீற்றாக விளங்கி 150 ஆண்டுகளை நிறைவு செய்வது வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

எமது பிரதேசத்தில் இடர்ப்பாடுகள் மிகுந்திருந்த காலகட்டத்திலும் இப்பாடசாலையில் பணிபுரிந்த அதிபர்கள், ஆசிரியர்கள் அர்ப்பணிப்போடு கல்விப்பணியைத் தொடர்ந்து, இப்பிரதேசத்துப் பிள்ளைகள் கல்வியில் பின் தங்கி விடாது முன்னேற்றம் காண வைத்தமையை நான் நன்கு அறிவேன். அவர்களைப் பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து நானும் நன்றியோடு நினைவு கூறுகின்றேன்.

இன்றைய நவீன கல்விச் சீர்திருத்தங்களோடு இணைந்து அதிபர், ஆசிரியர்கள் இப்பிரதேசப் பிள்ளைகளுக்கு நல்ல கல்வியூட்டி சமஆளுமை கொண்ட நற்பிரசைகளை உருவாக்கவும், பாடசாலைச் சமூகம் பாடசாலையோடு இணைந்து அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்கவும், பாடசாலையால் சமூகமும், சமூகத்தினால் பாடசாலையும் வளம் பெறவும் இங்கு கல்வி பயிலும் மாணவச் செல்வங்களினதும், கல்விப் பணிபுரியும் அதிபர் ஆசிரியர்களினதும் எதிர்காலம் சிறந்து மிளிரவும் புனித சூசையப்பரின் திருவருளை வேண்டி ஆண்டு விழா சிறப்புற நடைபெற மனமார வாழ்த்துகின்றேன்.

திரு. மா. ஞானப்பிரகாசம்
அதிபர்
யா/புனித சாள்ஸ் ம.வி

பாகிஸ்தான், குவேற்றா மறைமாவட்ட ஆயர்

# பேரருட்திரு. விக்ரர் ஞானப்பிரகாசம் அ.ம.தி அவர்களின் ஆசிச் செய்தி



யாழ். புனித சூசையப்பர் வித்தியாலயத்தின் கல்விப் பணியின் 150 வருட நிறைவுக்கு ஆசிச் செய்தி வழங்கு வதையிட்டு பெருமையும், பேருவகையும் அடைகிறேன்.

நாம் எம் பதியாம் பாஷையூரில் பிறந்து, வளர்ந்து, நல்லறிவு பெற்று நல்ல மனிதர்களாக, நல்ல கிறிஸ்தவர்களாக வளர்ந்து இன்று இப்பாரினில் பல பகுதிகளிலும் இறையரசுப் பணியைச் செய்து வருகின்றோம். இதற்குப் பிற்புலமாக நல்ல மனிதர்களும், நிறுவனங்களும் இருப்பதை மறந்து விடலாகாது. இதனடிப்படையில் எம் மண்ணின் மைந்தர்களின் ஆரம்பக்கல்வி வளர்ச்சியிலும் அவர்களுடைய முழு மனித வளர்ச்சியிலும் பங்கு கொண்ட மிக முக்கியமான நிறுவனம் "புனித. சூசையப்பர் வித்தியாலயம்" என்றால் அது மிகையாகாது.

நாம் கடல் கடந்து இங்குவந்து பணி செய்தாலும் "அந்தநாள் ஞாபகங்களை" எம்மால் மீட்டிப்பார்க்காமல் இருக்க முடியாது. புனித சூசையப்பர் வித்தியாலயமும் அதன் வரலாறும் என்றும் மறக்க முடியாத நினைவுகளாக இருக்கின்றன.

புனித சூசையப்பர் வித்தியாலயம் தன்னுடைய கல்வி வரலாற்றிலே பல மைல்கற்களை கடந்து வந்திருப்பதையிட்டு நான் பெருமையடைகின்றேன். மேலும் வரலாற்றின் பல அசாதாரண அத்தியாயங்களைத் தாண்டி இன்று 150 ஆண்டு நிறைவினைக் காண்பதையிட்டு பேருவகை அடைகின்றேன். இந்த யூபிலி ஆண்டுடன் தான் தொடங்கிய இந்தப் புனிதப் பணியிலே மேலும் வீறுநடை போட்டு, பல சாதனைகளைப் படைக்க என் ஆசீரை வழங்கி, அதிபர் திரு. வின்சென்ற் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் என் பாராட்டுக்க ளையும் சமர்ப்பித்து நிற்கின்றேன்.

என்றும் இறை ஆசீருடன்
பேரருட்திரு. விக்ரர் ஞானப்பிரகாசம் அ.ம.தி
ஆயர், குவேற்றா மறை மாவட்டம்
பாகிஸ்தான்.

**"அன்னசத்திரம் ஆயிரம் கட்டுவதிலும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்பதே சிறந்தது" (பாரதி)**



பாடசாலை ஒரு மனிதனுடைய வரலாற்றிலே இரண்டாம் தாய். இன்னொரு வீடு, அவனுக்கு ஞான அருள் அளிக்கும் தெய்வங்கள் நடமாடும் கோவில். வெறுமனே எழுத்துக்களைப் புசித்து விடுவதால் புத்திமான்கள் பிறந்து விட முடியாது. மனிதனின் மிருகத்தோல் உரிக்கப்படுவதும் இங்குதான். பல வரலாற்று நாயகர்களுக்கு அத்திவாரம் இட்டது பள்ளிக் கூடங்கள் தான்.

முழு மனித உருவாக்கத்திலே முக்கிய பங்குவகிப்பது பள்ளி. அவனுக்குள் இருக்கும் அற்புதங்களையும், அதிசயங்களையும், அபாரமான ஆற்றல்களையும் கண்டுபிடித்து அவனது ஒளிமயமான எதிர்காலத்திற்கு முதல் ஒளி தருவதும் பள்ளி. இச்சரித்திரத்தில் தன் பெயரையும் பொறித்துக்கொண்டது புனித சூசையப்பர் பள்ளி.

150 ஆண்டு காலத்து விழுதுகள் பல தாங்கிய அழகான ஆலமரம், நல்ல மனிதர்கள், பலரை புத்தி ஜீவிகளை இது பிரசவித்திருக்கிறது. இந்த மிக நீண்ட வரலாற்றுப் பயணத்தில் நடந்தும், இன்றும் அதே துடிப்போடும் துணிவோடும் இயங்குவதென்பது ஓர் வரலாற்று அதிசயம். இந்த நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியம் இறை கிருபையும், புனித சூசையப்பரின் பரிந்துரையும் நிறைவாக இருப்பதை உறுதிப்படுத்துகின்றது.

எனவே இந்த மங்கலகரமான நீண்டதொரு, நிறைவிலே நின்று கொண்டு, பூரித்து நிற்கின்ற, ஆசீர்வாதமான நாளிலே ஆண்டவரின் கிருபையும், இரக்கமும் நிறைவாக உங்களது பள்ளி மீது இருந்திட ஆசிகள் பல கூறி வாழ்த்துகிறேன்.

அருட்திரு. செ. றோய் பேடினன்
பங்குத்தந்தை
புனித அந்தோனியார் ஆலயம்
பாஷையூர்.

# ஆசியுரை



கொழும்புத்துறையில் அமைந்துள்ள புனித சூசையப்பர் வித்தியாலயம் தனது 150 ஆவது ஆண்டிலே தன் இருப்பை நிறைத்துப் பெருமை கொள்ளும் வேளையில் - பாடசாலைச் சமூகத்துடன் சேர்ந்து நாமும் இறைவனுக்கு நன்றி கூறி, விழாக்கொண்டாடும் பாடசாலைச் சமூகத்திற்கு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ் திருச்சபை தனது வரலாற்றிலே இறைபணியோடு, சமூகப்பணியையும் இணைத்து ஆற்றி, சமூகத்தை சிறப்புடன் உருவாக்கிய பெருமையான வரலாற்றை அன்றும் இன்றும் பேணிக்கொள்கின்றது. நூற்றைம்பது ஆண்டுகளாக சமூகப் பணியிலே கல்விப்பணிக்கு யாழ் திருச்சபை யாழ் சமூகத்திற்கு ஆற்றிய பங்களிப்பினை எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

புனித சூசையப்பர் ஆலயத்திற்கு அருகாக புனித சூசையப்பரின் பெயர் கொண்ட பாடசாலை அமைந்து, அரும்பணியாற்றி இப்போது வித்தியாலயம் என்ற பெயரோடு இயங்குகிறது. இப்பாடசாலை பாசையூர், கொழும்புத்துறை. கொய்யாத்தோட்டம், ஈச்சமோட்டை ஆகிய பிரதேச வாழ் மக்களின் கல்வி மேம்பாட்டிற்கு பெரும்பங்காற்றியுள்ளது.

யாழ் மாநகர சபை எல்லைக்குள் பிறந்து வளர்ந்ததினால் இக்கல்விக் கூடத்தின் உருவாக்கத்தையும், வளர்ச்சியையும், சிறப்பையும் கண்ணால் காணவும், காதால் கேட்கவும் எம்மால் முடிந்தது.

எமது பெற்றோர், பெரியோர், குருக்கள், துறவியர், ஆசிரியர்கள், கல்விமான்கள் எனப் பலர் இப்பாடசாலையிலே கல்வி கற்று வளர்ந்து, உயர்ந்துள்ளார்கள். மேலும் இக்கல்விக்கூடம் தன்னிடம் கல்வி பயின்றோரை, இறைவிசுவாச ஆழத்தையும், நல்லொழுக்கத்தையும் நெறிப்படுத்தி உருவாக்கியது என்று சொன்னால் அது மிகையாகாது.

இங்கு கல்விகற்று, இந்த சூழலிலே இன்றும் வாழ்ந்து கொண்டிருப்போர், ஒழுக்கசீலர்களாக, இறைநம்பிக்கை மிக்கவர்களாக வாழ்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

நாட்டிலே ஏற்பட்ட யுத்த சூழ்நிலையும், மக்களின் மனங்களிலே நகரத்துப் பாடசாலைகளை நோக்கி நகரும் பற்றும் - பாடசாலையின் வளர்ச்சியிலே ஒரு பின்னடைவை ஏற்படுத்தினாலும், பாடசாலைச் சமூகத்தின் குறிப்பாக அதிபர், ஆசிரியர்களின் விடாமுயற்சியினால் இன்றும் பல துறைகளிலே வளர்ச்சி நோக்கி நகருவதைப் பார்த்து, அறிந்து பெருமை கொள்கின்றோம்.


ஆர்ப்பாட்டமில்லாத, அமைதியான பொறுப்பான பணியினால் இரட்சணிய வரலாற்றில் சிறப்படைந்த புனித சூசையப்பரை விண்ணக பாதுகாவலராக கொண்டுள்ள இப் பாடசாலையும், அமைதியான பொறுப்பான பணியிலே நற்சமூகத்தை மேலும் உருவாக்க வேண்டும் என்று விரும்பி வாழ்த்துகின்றோம்.

இறைவனின் ஆசீரும், புனித சூசையப்பரின் பரிந்துரையும் நிறைவாக கிடைத்து இந்நூற்றாண்டிலும், இனிவரும் காலத்திலும் இவ்வித்தியாலயம் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

அருட்தந்தை. அருளானந்தம் யாவிஸ்
மறைக்கோட்ட முதல்வர்
கிளிநொச்சி.
(முன்னாள் பங்குத்தந்தை பாஷையூர்)

# அருட்தந்தை பி.பி.பிலிப் அவர்களின் வாழ்த்துச் செய்தி



புனித வளனார் பாடசாலை 150 வது அகவையை பெருமையோடு கொண்டாடும் விழாவையொட்டி வெளியிடப் படும் சிறப்பு மலருக்கு, வாழ்த்துரை வழங்கச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு பாடசாலையின் 150 வருட நிறைவு விழாவானது பெருமையுடனும், மகிழ்வுடனும், நன்றி உணர்வுடனும் கொண்டாடப்பட வேண்டியதொன்று. கடந்து வந்த 150 ஆண்டுப் பாதையைப் பின்நோக்கிப் பார்க்கும் போது ஏழைகளுக்கு எட்டாக் கனியாயிருந்த கல்வியை அடிநிலை மக்களும் பெறவும், சமூகத்தில் முன்னேறவும் வழி சமைத்துக் கொடுத்தது இப்பாடசாலை என்றால் பொய்யாகாது. புனித வளனாரின் பாதுகாவலில் அர்ப்பணிக்கப்பட்ட இப்பாடசாலை கல்வி, ஒழுக்கம், விளையாட்டு, கலை, இலக்கியம், ஆன்மீகம் எனப் பலதுறைசார் ஆற்றல்களுக்கு முறையான அடித்தளமிட்டு வளரச்செய்து குருக்கள், கல்விமான்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் போன்றவர்களுக்கு கருவறையாயிருந்து அறுவடை செய்துள்ள பெருமை படைத்தது.

தொடக்கம் தொட்டு இன்று வரை பாடசாலையின் வளர்ச்சிக்காகவும், உயர்ச்சிக்காகவும் உழைத்த, உழைக்கின்ற அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். இடம் பெயர்வு, இடர்கள் இன்னல்கள் என இதயம் தளர்ந்த நெருக்கடி மிகுந்த காலகட்டத்திலும் இப்பாடசாலை தன் பணியினை முன்னெடுத்து வருவது பாராட்டுதற்குரியது.

மாறிவரும் உலக சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கருத்திற் கொண்டு ஏற்படக் கூடிய சவால்களை எதிர்கொள்ளக் கூடிய முறையில் மாணவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் வளர்ச்சியைக் காணவும், எதிர் காலத்தில் இப்பாடசாலை புதுப்பொலிவு பெற்றுச் செயற்பட வேண்டுமென்றும், அழியாச் செல்வமாகிய கல்வியை அள்ளி வழங்கும் பாடசாலையாகத் திகழ வேண்டுமெனவும் புனித வளனாரின் பரிந்துரையில் நம்பிக்கை வைத்து மனமார வாழ்த்துகிறேன்.

**அருட்தந்தை பி. பி. பிலிப் அ.ம.தி**

# புனித வளனார் பாதுகாவலில் பாரம்பரிய கல்விச்சாலை

ஏழை ஒருவனுக்கு எழுத்தறிவிப்பது அன்ன சத்திரங்கள் ஆயிரம் அமைப்பது போன்ற அனைத்து தானதருமங்களிலும் சாலச் சிறந்ததாகும். அந்த வகையில் கொழும்புத்துறை, பாஷையூர் ஆகிய பிரதேசங்களைச் சார்ந்த மாணவர்களுள் குறிப்பாக வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கொழும்புத்துறை சென்.ஜோசப்ஸ் வித்தியாலயம் புனித வளனாரின் ஆசியினால் கடந்த 150 ஆண்டுகளில் பெரும் பங்களிப்பை அளித்துள்ளது.

இப்பாடசாலை றோமன் கத்தோலிக்க மிஷனரிமாரின் நிர்வாகத்தில் தோற்றம் பெற்று அரசு பொறுப்பேற்ற, பின் இன்றுவரை அப்பகுதி வாழ் மக்களின் கல்வி வளர்ச்சியில் தனது பணியை ஆற்றி வருகின்றமை சிறப்பானதாகும். இப் பாடசாலையில் இயங்கிய கொலம்பகம் ஆசிரியப் பயிற்சி கலாசாலையும் வறிய அநாதைப் பிள்ளைகளைப் போஷிக்கும் பிரிவும் மேலும் இப்பாடசாலையை அணி செய்துள்ளன. மறைந்த முன்னாள் ஆயர் அதி.வண. கலாநிதி. தியோகுப்பிள்ளை ஆண்டகை போன்ற அதிபர்களின் வழிகாட்டலில் உருவான ஆசிரியர்கள் பலர் நல்லாசிரியர்களாக, நல்லதிபர்களாக கல்வித் துறைக்குப் பணியாற்றி நற்சமூகத்தை உருவாக்கிப் பெருந்தொண்டாற்றியுள்ளனர்.

நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட இப்பாடசாலை பல்வேறு விதங்களில் சிறப்பு பெற்று விளங்குகின்றது. மதப்பெரியார், கல்விமான்கள், வழக்கறிஞர்கள், நல்லாசிரியர்கள், விளையாட்டுத்துறை வீரர்கள், சமூக சேவையாளர் பலரின் உருவாக்கத்திற்கு இப்பாடசாலை வித்திட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய பாகிஸ்தான் பேராயர் மேதகு. கலாநிதி விக்ரர் ஞானப்பிரகாசம் ஆண்டகை, சிறந்த உதைப்பந்தாட்ட வீரர். திரு. M. பிரான்சிஸ், திரு. S. அன்ரனிப்பிள்ளை, மதகுருமார்கள் உட்பட பலர் இப்பாடசாலையின் பழைய மாணவர்களாக திகழ்கின்றனர்.

நீண்ட காலமாகத் தொடர்ச்சியாக யாழ் குடா நாட்டில் நடைபெற்ற யுத்தம் இப்பாடசாலையையும் விட்டுவைக்கவில்லை. அதன் காரணமாகப் பலவிதங்களில், பல வேளைகளில் அது நலிவுற்றாலும் தொடர்ந்து கல்விப் பணிபுரிவது புனித வளனாரின் ஆசியினால் தான் எனலாம். இப்பாடசாலையின் இன்னுமொரு முக்கிய அம்சம் நல்ல களநிலையில் இப்பாடசாலை அமைந்துள்ளமை ஆகும். நகர்ப்புற, சனசந்தடியற்ற சூழலில் கடற்கரையை அண்மித்ததாகக் காற்றோட்டமான விசாலமான இடத்தில் அமைந்துள்ள இப்பாடசாலையைச் சுற்றி புனித சூசையப்பர் சிற்றாலயமும், குரு மடங்களும்

அமைந்துள்ளன. புனிதமான அச்சுற்றாடல் இப்பாடசாலையை மேலும் அணி செய்கின்றது.

இத்தகைய பாரம்பரியம் மிக்க பாடசாலையில் எனது அதிபர் பணியை முதன் முதலாக ஆரம்பித்ததில் நான் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். எனது முதல் ஆசிரியப் பணியும் கம்பளை சென் ஜோசப் பாலிகா மகா வித்தியாலயத்திலேயே ஆரம்பமானது. புனித வளனார் பெயர்கொண்ட இரு பாடசாலைகளும். என் பணியில் முதல் பாடசாலைகளாக அமைந்தமை இறைவன் சித்தமாகும்.

1990 களில் யாழ் குடாநாட்டில் கடுமையான போர்ச்சூழல் காலத்தில் தான் சென் ஜோசப்ஸ் வித்தியாலயத்தில் அதிபர் பணியை ஏற்றேன். ஆனால் அங்குள்ள ஆசிரியர் குழாமும், பங்குத்தந்தையரும், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும், என் பயத்தை நீக்கி உறுதுணையாக இருந்தனர்.

போர்ச் சூழல் எனினும் ஆரோக்கியமான உறவுகளின் துணை எனக்கு கிடைத்தது என் அதிஸ்டமாகும். அப்போது பணிபுரிந்த ஆசிரியர்களான திரு. பொன்னாண்டோ, திரு. கிறிஸ்ரியன், திரு.அம்புறோஸ், திரு. பீற்றர் அருமைநாயகம், திருமதி. தனபாலன், திரு. கருணாநிதி, திருமதி. தங்கநாயகம், திருமதி. அன்ரனிப்பிள்ளை, அமரர். திருமதி. மேரி யொசப்பின், திருமதி ஷைலா போன்றோர் இக்கட்டான அவ்வேளையிலும் பாடசாலையில் நடைபெற வேண்டிய அனைத்து விழாக்கள், நிகழ்வுகளையும் திறம்படிச் செய்து உதவினார்.

விளையாட்டு துறையில் குறிப்பாக உதைபந்தாட்டத்தில் இப்பாடசாலை தனக்கென ஒரு தனியிடத்தைத் தக்க வைத்திருந்தது. இப்பாடசாலை மாணவரும் பெற்றோரும் உதைபந்தாட்டத்தில் ஆர்வமுள்ளவராக இருந்தமை குறிப்பிடத்தக்கது. குறுகிய காலம் இப்பாடசாலையில் பணியாற்றினாலும் பல நினைவுகள் இன்றும் பசுமையாக நினைவில் உள்ளன. இப்பாடசாலையின் முன்புறத்தில் முன்னாள் அதிபர். திரு. அல்பிறட் அவர்கள் அமைத்திருந்த நீண்ட பந்தல் இப்போது இல்லை எனினும் அப்பந்தலும் அதில் அமைக்கப்பட்டிருந்த வளனார் சுரூபமும் என் மனதில் ஆழப்பதிந்துள்ளன.

பாடசாலைக் கல்வியுடன் ஆன்மீகக் கல்வியும் அக்கறையுடன் கற்பிக்கப்பட்ட காலம். திங்கட்கிழமைகளில் நீண்ட பிரம்புடன் அப்போது பங்குத்தந்தையாக இருந்த அருட்பணி தூரம் அடிகளார் மறைக்கல்வி வகுப்பிற்கு வராத மாணவர்களை தண்டிக்க வரும் காட்சி இன்றும் என் மனதை விட்டகலவில்லை.

புனித வளனாரின் ஆசியினால் அங்கு பணியாற்ற வரும் அதிபர்கள் பதவியுயர்வு பெற்று செல்கின்றனர் என அங்குள்ள ஆசிரியர்கள் கூறியதற்கு

ஏற்ப சென். சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் யாழ். தெற்கு கொத்தணி அதிபராக நான் மாறிச் செல்ல பாதுகாவலர் ஆசி அருளினார்.

என் மனதில் நீங்கா இடம் பெற்ற தொன்மை மிக்க கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயம் இன்று 150 ஆண்டு நிறைவு விழா கொண்டாடுவது கண்டு மகிழ்வடைகின்றேன். இப் பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் தற்போதைய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், அனைவரையும் மனதார வாழ்த்திப் புனித வளனார் பாதுகாவலில் மேலும் வளர இறையாசியை வேண்டுகின்றேன்.

தற்காலிகமாக ஏற்பட்டுள்ள நலிவுகளை நீக்கி இவ் வித்தியாலயம் கல்வியிலும் ஒழுக்கத்திலும் ஓங்கி வளர அனைத்து நல்லுள்ளங்களும் உதவ வேண்டும். ஒளிமயமான எதிர்காலம் நிச்சயமாக இப்பாடசாலைக்குண்டு எனக் கூறி வாழ்த்துகின்றேன்.

முன்னாள் அதிபர்
திருமதி. பி. எவ். சின்னத்துரை

# அருட்பணி பாலதாஸ் பிறாயன் அவர்களின் வாழ்த்துச் செய்தி



கடந்துபோன 150 ஆண்டுகள் கொண்ட பெரிய, நீடிய ஒரு வரலாற்றைக் கொண்ட புனித யோசப்ஸ் வித்தியாலயத்தின் இறந்தகால பக்கங்களை, முழுவதும் புரட்ட என்னால் முடியாது. ஆனால் எனது வயதிற்குத் தகுந்த ஆண்டுகளை என்னால் மீட்டுப்பார்க்க முடியும். எனவே நெஞ்சுக்கு நேர்மையாக, உண்மைக்குச் சான்றாக இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சியை எடுத்துரைக்க முடியும்.

ஆடம்பரமில்லாது அதீத அடக்கத்துடன் கல்வியிலும், விளையாட்டிலும் தனக்கென ஒரு தனி முத்திரையை இப் பாடசாலை நிகழ்த்தியிருக்கிறது. இதற்குப் பல சான்றுகளையும் நாம் கூற முடியும். இது உண்மை. ஒரு சில அதிபர்களை எனக்கு ஞாபகம் உண்டு. அவர்கள் சிந்திய சிந்துகின்ற வியர்வைத் துளிகள் இரத்தமாக மாறி நிலத்தை நனைத்ததினால் தியாகம் என்கின்ற ஒரு நிலையான பண்பினாலே இந்தப் பாடசாலை உருப்பெற்று வளம் பெறுகின்றது. இதுவும் மறக்க முடியாத ஓர் உண்மை.

பெரிய பாடசாலைகளைப் போல வசதிகள், வாய்ப்புக்கள் இல்லா விட்டாலும் மன உறுதியுடன் பணியாற்றிய, பணியாற்றுகின்ற இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களை மனதார வாழ்த்த வேண்டும்.

ஒரு சமுதாய வளர்ச்சியின் ஆணிவேராக விளங்குவது பாடசாலை என்பதை யாவரும் ஏற்றுக்கொள்ளுவோம். அந்த வகையில் ஒரு பரந்து விரிந்த சமுதாயத்தின் ஆண் வர்க்கத்தின் எதிர்கால நிமிர்வுக்கும் இப்பாடசாலை இத்தனை ஆண்டுகள் உறுதுணையாக இருந்ததை நினைத்து மனம் மகிழ்கின்றது. வாழ்த்துகின்றேன். ஆண்டவரின் நிலையான ஆசீர்வாதங்கள் இப்பாடசாலைச் சமூகத்தோடு என்றும் இருப்பதாக!

"கல்வியிலும்
ஒழுக்கத்திலும்
விளையாட்டிலும்
நீ ஓங்கி உயர்ந்து
இன்னும் வளர வேண்டும்
நல்ல கனிகளை நீ
தர வேண்டும்"

அன்புடனும் பாசத்துடனும்
அருட்திரு. பாலதாஸ் பிறாயன்

# ஆசியுரை

நூற்றைம்பது ஆண்டுகள் கடந்து போயின; சரித்திரம் கூற்றாக மட்டுமல்ல, சமூக மேம்பாட்டிற்காக கல்வித்துறையில் வளர்ச்சியைக் கொடுத்த தாயாக இக்கால கட்டம் எம் கண்முன்னே தோற்றம் பெற்றுள்ளது. காலச் சுழற்சியின் பலவிதமான பாதிப்புக்களுக்கும் முகம் கொடுத்து, நிகழ்வுகளின் திருப்புமுனைகளின் சாதக பாதக விளைவுகளில் வளர்ந்தும், குன்றியும், ஆனால் காலத்தை வென்றவளாகவே காணப்படுகின்றாள் எம் இக்கல்வித் தாய். எவ்வித அலைகளின் மீது தள்ளாடினாலும், பரந்து விரிந்த கிளைகளைக் கொண்ட, விழுதுகளாக வாழ்வெனும் மண்ணில் புதைந்த, வேர்களை ஆழ ஊன்றிய ஆலவிருட்சம்போல் தழைத்து நிழல் நல்கி நிற்பவள், இன்னமும் வாழத்துடிப்பவள், எம் கல்விக் கூடம் என்கின்ற அன்னை.


ஒரு கால கட்டத்தில், எதிர்கால ஆசான்கள் தம் கற்பித்தல் பயிற்சியை மேற்கொள்ளக் களம் அமைத்துக் கொடுத்தவள் என்கின்ற பெருமையை உடைத்தவள். தன் நிலைக்கு அப்பாற்பட்ட காரணிகளால் சுருக்கம் அடைந்தாலும், தளராது விரிவாக்கம் பெறவேண்டியது காலத்தின் காட்டாயம். இதுவே இக்கூடத்தின் முன்னைநாள் மாணவன் என்கின்ற ரீதியில் என் தணியாத் தாகம்.

எனது ஆரம்பக் கல்விக்கு உரமூட்டிய அக்காலகட்டம் என் கல்வித்துறைக்கு ஏற்ற களமாக அமைந்திருந்தது மறுக்க முடியாத, என் வாழ்வின் ஞாபகங்களில் உறைந்த பொழுதுகள். இதுபற்றி எனது கட்டுரையில் மகிழ்வுடன் பகிர்ந்துள்ளேன். நெஞ்சை விட்டகலா அப்பொழுதுகள் அளிக்கின்ற கனவுகள், எதிர்பார்ப்புக்கள் நிச்சயமாக நிறைவேறும் என்பதே என் துணிவு. இந்நூற்றாண்டு விழாவின் அழியா, ஆணித்தரமான கோலக் கூறுகள் வளர்ச்சியின் படிகளாக அமைய என் ஆசிகள்.

வளர்ச்சியை நோக்காகக் கொண்டு எழுமின். செயற்பாடுகள் உருவம் கொடுக்கும்; ஆக்கங்கள் பயன் அளிக்கவே செய்யும். புனித வளனின் பாதுகாவலின் நிழலில் வீறுநடை போட ஆசிக்கின்றேன்.

அருட்பணி. ஞா. எட்மன் மைக்கல் அ.ம.தி
புனித வளனார் அ.ம.தி சிறிய குருமடம்
கொழும்புத்துறை.

# காலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கற்பகத்தரு



கொழும்புத்துறை யா/சென் ஜோசப்ஸ் வித்தியாலயம் ஆனது தனது கல்விச் சேவையின் 150 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில், இந்நினைவு மலருக்கு ஆசிச் செய்தி அளிப்பதில் நான் பேருவகை அடைகின்றேன்.


ஊருக்கும் உலகிற்கும் பெருமை சேர்க்கும் நன்மாணாக்கர் களை உருவாக்கி உயர்ந்து நிற்கும் இத்தாயானவளின் சேவை அளப்பரியது, சொல்லில் அடங்காதது. 1861 இலிருந்து இற்றைவரை, குறிப்பாக போர் மேகம் சூழ்ந்த நாட்களிலும் இப்பாடசாலையானது தனது உருவாக்கப் பணியிலிருந்து சிறிதேனும் தவறியதில்லை. இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் பலர் இன்று சமூகத்தில் உயர் நிலையில் உலகளாவப் பரவி இருப்பது இப்பாடசாலைக்குப் பெருமை சேர்க்கின்றது. நான் சிறுவனாக இருந்த காலகட்டத்தில் விளையாடுவதற்கு அடிக்கடி சக நண்பர்களுடன் இப்பாடசாலை வளாகத்திற்கு வருவதுண்டு. காலம் சென்ற எனது தந்தை அமரர் சவரிமுத்து ஏபிரகாம் அவர்கள் (ஆரம் மாஸ்டர்) இப்பாடசாலையின் பழைய மாணவரும் முன்னாள் ஆசிரியருமாவார். (01.06.1957 - 31.08.1959). மேலும் கொழும்புத்துறை அர்ச். சூசையப்பர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் 18.01.1950 - 31.12.1951 வரை பயிற்சி பெற்றவருமாவார். இப் பாடசாலையின் பெருமைபற்றியும், வளர்ச்சி பற்றியும் அடிக்கடி என்னுடன் கலந்துரையாடுவதுண்டு. படிப்படியாகப் பல மாற்றங்களைச் சந்தித்த இப்பாடசாலையானது வெளித்தோற்றத்திலும், நிர்வாகத்திலும் சிறப்பாக முன்னேறி இருக்கின்றது. காலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கற்பகத் தருவாக எம்முன் நிறைந்து நிற்கின்றது.

நல்ல ஒழுக்கத்துடன் கூடிய அறிவுசார் சமூகத்தை உருவாக்க வேண்டுமென்று அர்ப்பணத்துடன் பணியாற்றிவரும் பாடசாலை அதிபர் திரு.P.வின்சென்ற் அவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் மனம் நிறைந்த ஆசிரையும் அள்ளி வழங்குகின்றேன். 150 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இப்பாடசாலையானது, தொடர்ந்தும் பல மாணவர்களை உருவாக்கி குன்றின் மேல் தீபமாகப் பிரகாசிக்க இறைதுணை வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

அருட்தந்தை **H.** நேரியோ ஆபிரகாம்
(முத்து)
மறைக்கோட்ட முதல்வர் -ஹட்டன்

Fr.J.Mathy Ilamparithy,
Collegio Sacerdotale 'Giovanni Paolo II'
Roma,
Italy.




"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

இம் மேற்கோளின் பொருள் எளிது, அது கூறும் அறிவுரையோ பெரிது. மனிதன் ஆறறிவு படைத்தவன். இந்த ஆறாம் அறிவை விளங்க வைப்பது கல்வியே. கல்வி இல்லையேல் ஆறாம் அறிவின் பயன் கிடைக்கப்பெறாது. வாழும் மாந்தருக்கு கல்வியே கண். கேடு இல்லாத செல்வமும் கல்வியே. சென்ற இடத்துச் சிறப்பு தருவதும் கல்வியே. பெருமைக்கு உரியதும் கல்வியே. பெரும் சிறப்பைத் தருவதும் கல்வியே.

இத்தகைய கல்வியை கடந்த 150 ஆண்டுகளாக வழங்கி, ஆண்டு விழாக்காணும் கொழும்புத்துறை சென்.யோசப்ஸ் வித்தியாலயத்தை வாழ்த்தக் கிடைத்தது எனக்குப் பெருமையே. இவ் வித்தியாலயம் நல் மாணாக்கர்களை மட்டும் உருவாக்கவில்லை. மாறாக அருகமைந்த கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்ற ஆசிரிய மாணவர்களின் உருவாக்கத்திலும் உந்து சக்தியாக இருந்தது. எனவே இவ்வித்தியாலயத்தை வாழ்க, வளர்க, பெருமைகள் பல பெறுக, என வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இதற்கான வாய்ப்பை வழங்கிய இன்றைய வித்தியாலய கல்விச் சமூகத்துக்கு நன்றியும் நவில்கின்றேன். இறையாசீர் என்றும் உங்களுக்கு உரித்தாகுக.

அருட்பணி
**மதி இளம்பரிதி யேசுதாசன்**

# அருட்தந்தை F.L.N குருஸ் அவர்களின் வாழ்த்துச் செய்தி




புனித சவேரியார் ஆலயம்
திருநெல்வேலி

யாழ் மண்ணுக்கு முற்றிலும் புதியவனாக 1974ம் ஆண்டு 9ம் வகுப்பில் மேற்படி வித்தியாலயத்தில் சேர்ந்தேன். அறிவும், அனுபவமும் மிக்க ஆசிரியர்களால் கல்வி முன்னெடுக்கப்பட்டது. அவர்களை இன்றும் பெருமையோடும், நன்றியோடும் நினைத்துக் கொள்கின்றேன். இக் கல்லூரியின் மற்றுமொரு அழகு, அது கொண்டிருந்த பரந்த நிலமும், மைதானமுமாகும். அது அழகான சூழலாக இருந்தது. இன்று 150 வது நிறைவைக் கொண்டாடும் கல்வி நிலையம் வாழ, வளர வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
அருட்தந்தை **F. L. N** குருஸ். அமதி
பங்குத்தந்தை
திருநெல்வேலி - கோப்பாய்

# வாழ்த்துச் செய்தி

டி மசனட் இறையியலகம்,
வசந்தகம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,
29.03.2011.



யாழ்.புனித சூசையப்பர் வித்தியாலய ஸ்தாபகத்தின் 150வது வருட நிறைவை நினைத்து அதன் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருடன் சேர்ந்து மகிழ்ந்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

யாழ் புனித சூசையப்பர் வித்தியாலயத்தின் தொடக்க வரலாறு அற்புதமானது. யாழ் மண்ணுக்கு இறையரசுப்பணி செய்ய வந்த தொடக்ககால அமலமரித்தியாகிகள் சிறப்பாக, அப்போதைய ஆயர் கிறிஸ்ரோபர் பொஞ்சின் அ.ம.தி இப்பாடசாலையின் மீது தம் கண்களை ஆழமாகப் பதிய வைத்தார். இதன் காரணமாக ஆசிரியர்களின் பயிற்சிக்களமாகத் தொடங்கி, பல நல்ல மனிதர்களை, கல்விமான்களை உருவாக்கிய பெருமை இப்பாடசாலைக்கு உரியது. தற்பொழுது இப்பாடசாலையைச் சூழவுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும், முழுமனித உருவாக்கத்திலும் அயராது உழைத்து வருவதை நானே அவதானித்து வருகின்றேன்.

முழு மனிதனை உருவாக்கும் பணியில் இறங்கியுள்ள இப்பாடசாலை அதன் இலக்கை அடைய இப்பாடசாலையின் பெற்றோர்கள் பாடசாலையுடன் கைகோர்த்து உடனுழைப்பாளிகளாக மாறவேண்டும். பாடசாலையும் பெற்றோர்களும் கூட்டுப் பொறுப்புடன் இணைந்து ஆற்ற வேண்டியதே கல்விப்பணி.

நல்ல குடும்பம் மட்டுமன்றி எம் பாடசாலை மாணவர்களின் குடும்பங்களும் பல்கலைக்கழகங்களே. மாணவர்கள் பிறப்புத் தொடங்கி பாடசாலையில் இணையும் வரை இன்றியமையாத பல பாடங்களை தங்கள் குடும்பங்களில் இருந்தே கற்றுக் கொள்கின்றார்கள், மாணவர்கள் தங்கள் வாழ்வின் தொடக்கத்திலிருந்து வாழ்விற்கு அடிப்படையான நம்பிக்கையை குடும்பங்களில் இருந்துதான் பெற்றுக்கொள்கின்றனர்.

இந்த அடிப்படை உருவாக்கம் இம்மாணவர்களுக்குக் கிட்டவில்லை என்றால் இம்மாணவர்கள் பாடசாலையில் இடுகின்ற அடித்தளம் பலவீனமானதாகவே இருக்கும். மேலும் பெற்றோர்களே மாணவர்களின் தொடர் உருவாக்குனர் என்பதை உணர்ந்து, பாடசாலையோடு இணைந்து தங்கள் பங்களிப்பை பொறுப்புடன் வழங்கும் பொழுது நம் மாணவர்கள் மட்டுமன்றி, நமது பாடசாலை, நமது சமூகம் என்பன நிச்சயம் வளரும் என்பது நமது அசையாத நம்பிக்கை

எனவே எமது பாடசாலையின் 150வது ஆண்டின் நிறைவில் மகிழ்வுறும் நாங்கள், எம் பாடசாலையுடனான எம் உறவை, பொறுப்புக்களை புதுப்பித்துக் கொள்வோம். மேலும் திருக்குடும்பத்தின் பாதுகாவலரும், எமது பாடசாலையின் பாதுகாவலருமான புனித சூசையப்பரின் தொடர்ந்த பாதுகாவலும், பரிந்துரையும் இப்பாடசாலைக் குடும்பத்தோடு என்றும் இருக்க எனது நல்லாசிகளையும், செபங்களையும் மகிழ்ச்சியோடு வழங்கி நிற்கின்றேன்.

அருட்திரு. செ. அந்தோனிமுத்து குருஸ் அ.ம.தி
அதிபர்.
டி மசனட் இறையியலகம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

# எமது பாடசாலையின் தற்போதைய அதிபர்



பா. வின்சென்ற்



# அதிபர் அறிக்கை

இன்றைய 150 ஆவது அகவை நிறைவு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய யாழ். ஆயர் அவர்களே, வணக்கத்திற்குரிய குரு முதல்வர் அவர்களே, கல்வித்திணைக்கள அதிகாரிகளே, அயற்பாடசாலை அதிபர்களே, அருட் தந்தையர்களே, அருட்சகோதரர்களே, அருட்சகோதரிகளே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே, பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே, எம் பாடசாலை ஆசிரியர்களே, அன்பான மாணவர்களே உங்கள் அனைவருக்கும் எனது உள்ளம் நிறைந்த வாழ்த்துக்கள் கூறி வரவேற்று, 150 ஆவது அகவை நிறைவுக்கான அதிபர் அறிக்கையை சமர்ப்பிக்கின்றேன்.

எமது பாடசாலையானது, எட்டுத்திக்கும் புகழ்பரப்பும் கொலம்பகம் என்னும் பிரதேசத்திலே வாழ்வாங்கு வாழவென் வந்துதித்த அருட்திரு கிறிஸ்தோப்பர் பொஞ்சின் அடிகளாரால் 1861 ஆம் ஆண்டு புரட்டாதித்திங்கள் எட்டாம் நாள் அமலோற்பவ மரியன்னை பிறந்த தினத்தில் ஆரம்பிக்கப்பட்டது. காலத்திற்கேற்றபடி சிறந்த நிர்வாகத் தலைவர்களால் வழிநடத்தப்பட்டு வந்ததுடன், பாமர மக்களின் அறிவுக் கண்ணைத் திறந்து வைத்த பாடசாலை, அறிவுச் சுடரேற்றி வைக்கும் ஆசான்களையும் உருவாக்கித் தந்திருப்பது போற்றுதற்குரியது. இதற்கு பாடசாலையின் பாதுகாவலரான சூசையப்பரின் அருட்கடாட்சமும் பாஷையூர்க் கட்டளைக் குரவரே ஞான மேய்ப்பராயிருந்து எல்லா விடயங்களையும் கவனித்து வருவதுமே இப்பாடசாலையின் உன்னதத்திற்கு வழிகோலியது. இப்பாடசாலையின் பழைய மாணவனாகிய நான், அதிபராகக் கடமைபுரிகின்ற காலத்தில் இந்த 150 ஆவது அகவை நிறைவு விழாவை முன்னெடுப்பதற்கு இறையருள் கைகூடியிருப்பதையிட்டு பெருமிதமடைகின்றேன்.

## பாடசாலை ஆசிரியர் ஆளணி விபரம்

| | |
|---|---|
| அதிபர் | 01 |
| உப அதிபர் | 01 |
| பகுதித்தலைவர் | 02 |
| வழிகாட்டலும் ஆலோசனையும் | 01 |
| பயிற்றப்பட்டோர் | 06 |
| பட்டதாரிகள் | 01 |
| பயிற்றப்பட்ட பட்டதாரிகள் | 06 |
| ஆசிரிய உதவியாளர் | 01 |
| தொண்டராசிரியர் | 02 |
| பகுதி நேர ஆங்கிலம் | 01 |

**மாணவர் தொகை**

| | | |
|---|---|---|
| 2007 | தரம் 1 – 11 | 155 |
| 2008 | தரம் 1 – 11 | 153 |
| 2009 | தரம் 1 – 11 | 148 |
| 2010 | தரம் 1 – 11 | 167 |

**எமது ஆசிரியர் குழாமில் புதிதாக இணைந்து கொண்டோர் (2011)**

01. திருமதி அ.பெ. பெல்சியா குரூஸ் (வர்த்தகம்)
02. திருமதி சு. மோகன்ராஜ் (ஆரம்பக்கல்வி)
03. திருமதி. ஜெ.எமில்ராஜ் (பகுதிநேர ஆங்கிலம்)

**தற்காலிக இணைப்புப் பெற்றவர்கள்**

2007 - திருமதி ஞா.கமலதாசன்
திருமதி. யூட் எட் வீசியா விக்ரர் ஜெயசீலன்
செல்வி. அ.மாறி ஜறாங்கனி
2009 - அருட்சகோதரி. ஜெயசீலி சிங்கராஜா
2010 - திருமதி. ஜெ. சகாயரூபன்
செல்வி. த. மதனகாந்தி
திரு. ந. பாலச்சந்திரன்
திருமதி. நா. சத்தியபாமா
செல்வி. B. ஜெயன்ஸ்ராணி
செல்வி. R. கீதா
திருமதி. பு. சியோஜினி

**கல்வி சாரா ஊழியர்கள்**

முகாமைத்துவ உதவியாளர் - திரு. மார்க்ஜோர்ஜ் கெனடி (2007)
தொழிலாளர் - திரு. அ. தேவதாசன்

**ஓய்வு பெற்றோர்**

செல்வி. K. செல்லையா (2007)

**இடமாற்றம் பெற்றுச் சென்றோர்**

| | | |
|---|---|---|
| 2007 | - | திரு.A.கிறிஸ்தோபர் |
| 2009 | - | செல்வி.டெ.எ.அ.ஜெனிற்றா |
| | | திருமதி.யசிந்தினி பிரதீபன் |
| | | வண.பி.ற.ருஸ்வோல்ட் |
| 2010 | - | திரு.F.அருட்செல்வன் |
| | | திருமதி.M.G.திலகேந்திரா |
| | | திருமதி.H.தூயகுமாரன் |
| | | திருமதி.M.M.S.ஜெயக்குமார் |
| | | திருமதி.N.சிவமதி |
| | | திருமதி.R.திருஞானச் செல்வம் |

**அதிபர்களாகப் பதவி பெற்றுச் சென்றோர்.**

01. திரு. K. ரவீந்திரராஜா
02. திரு. S.Q.P. மொறாய்ஸ்
03. திருமதி. T. பேரின்பம்

**முகாமைத்துவக் குழு**

| | | |
|---|---|---|
| அதிபர் | - | திரு. பா. வின்சென்ற் |
| உப அதிபர் | - | திருமதி. மெ.றொபின்சன் |
| பகுதித்தலைவர்கள் | - | திருமதி G.V.Q.A ஜோர்ஜியானா |
| | | திரு. க. அமலதாசன் |
| விளையாட்டுத்துறை முதல்வர் | - | திரு. A. நிறஞ்சன் |

**பொதுப்பரீட்சைப் பெறுபேறுகள்**

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை**

| | | | |
|---|---|---|---|
| 2007 | - | பி.டினோத் | - 126 புள்ளிகள் |
| | | கி.ஜெனவீல் | - 123 புள்ளிகள் |
| | | ம.ஞானதீபன் | - 105 புள்ளிகள் |
| | | ஜோ.ஜோர்ச்ஜெனிஸ்ரன் | - 101 புள்ளிகள் |
| 2009 | - | ஜோ.நிசாந்தன் | - 142 புள்ளிகள் |
| | | அ.கிஷாந் | - 118 புள்ளிகள் |
| | | மே.ஜெயந்குமார் | - 117 புள்ளிகள் |
| | | அ.ஜெசிங்ரன்வோல்ட் | - 106 புள்ளிகள் |

| | | | |
|---|---|---|---|
| 2010 | - | வி. யுக்கேரியன்ஸ் | - 156 புள்ளிகள் |
| | | ட. அரவிந் | - 127 புள்ளிகள் |
| | | க. லெயோன்ஸ்கிளைவ் | - 111 புள்ளிகள் |
| | | யூ. கபிர்தன் | - 107 புள்ளிகள் |
| | | ஞா. றெனோல்டன் | - 100 புள்ளிகள் |

**க.பொ.த சாதாரணதர தேர்வுப் பெறுபேறு**

**2007இல் க.பொ.த உ/த தகுதியானோர் 04 மாணவர்கள்**

01. செல்வன் - முத்துக்குமார் லவன்சுந்தர்
02. செல்வன் - கிறிஸ்ரியன் பஸ்ரியன்
03. செல்வன் - அன்புச்செல்வன் யூட்நெபேட்சன்
04. செல்வன் - பிரான்சிஸ் நிஷான்

**2008இல் க.பொ.த உ/த தகுதியானோர் 03 மாணவர்கள்**

01. பிரான்சிஸ் அன்றூபன்
02. எட்மன் ஜோர்ஜ்ஜொனிங்சன்
03. கிளாறன்ஸ் கிளிங்ரன்

**2009இல் க.பொ.த உ/த தகுதியானோர் 08 மாணவர்கள்**

01. ஆரோக்கியநாதன் அனோஜன்
02. யேசுதாசன் தேவஅருட்சீலன்
03. மரியநாயகம் மரியறூபன்
04. பர்னபாஸ் லிகோரியஸ் நியூட்சன்
05. சந்திரகுமார் டிஸ்மன்
06. கோபாலரட்ணம் மரின்ரன்
07. ஜீவதாஸ் ஜீவிதன்
08. இராசநாயகம் டினுசன்சந்தோஷ்

**2010இல் க.பொ.த உ/த தகுதியானோர் 04 மாணவர்கள்**

01. கனியூட் ஜொனாஸ்ரின்
02. குமாரவேல் நிசாந்தன்
03. மைக்கல் கொலின்ஸ் ராஜ்குமார்
04. பாலறஞ்சன் ரஜீப்குமார்

**பாடசாலையில் செயற்படும் மன்றங்கள்**

தமிழ் மன்றம்

இந்துமா மன்றம்

கிறிஸ்தவ மன்றம்

ஆங்கில மன்றம்

கணித விஞ்ஞான மன்றம்

ஆரம்பக்கல்வி மன்றம்

**தமிழ் மன்றம்**

மாணவர்களிடையே மொழித்திறன், கலைத்திறன் என்பவற்றை வளர்க்கும் நோக்கில் பாடசாலை மட்டத்தில் பல போட்டிகள் இம் மன்றத்தினால் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ் மொழித்தினப் போட்டிகளுக்காக மாணவர்கள் ஆயத்தப்படுத்தப்படுவதுடன், வருடந்தோறும் தமிழ் விழா மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்படுகிறது.

**தமிழ்மொழித்தினப் போட்டி முடிவுகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2007 | - | கவிதை ஆக்கம் | - கோட்டம் | - 2ம் இடம் | - பி.அன்றூபன் |
| | | விசேட கூத்து | - வலயமட்டம் | - 2ம் இடம் | |
| 2010 | - | கவிதை ஆக்கம் | - கோட்டம் | - 2ம் இடம் | - ம.சுதர்சன் |

**இந்துமா மன்றம்**

இப்பாடசாலையானது கிறிஸ்தவ பாடசாலையாக இருந்தபோதும் இங்கு கற்கும் இந்து மாணவர்களுக்காக இம்மன்றம் உருவாக்கப்பட்டு, தினமும் காலை வழிபாடும் வெள்ளிக்கிழமை தோறும் வழிபாட்டுடன் பிரார்த்தனையும் நடத்தப்படுகின்றது. 2009ஆம் ஆண்டு முதலாவது தடவையாக வாணிவிழா சிறப்பாக நடத்தப்பட்டு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

**கிறிஸ்தவ மன்றம்**

நான் இப்பாடசாலையில் மாணவனாக இருந்த காலத்தில் பிரார்த்தனைகள், பாடசாலையின் பாதுகாவலரான புனித சூசையப்பர் ஆலயத்திலேயே நடைபெற்றது. கடந்த சில வருடங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த போதும், 2007ஆம் அண்டில் மீண்டும் பாதுகாவலரின் ஆலயத்தில் காலைப்பிரார்த்தனை, வழிபாடு, சிலுவைப்பாதை வழிபாடு, விசேட நாள் வழிபாடுகளும் நடைபெற இம்மன்றம் வழிசமைக்கின்றது. வருடந்தோறும் நடத்தப்படுகின்ற மறைக்கல்வித் தேர்வில் மாணவர்கள் பலர் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர். வழமை போன்று கிறிஸ்தவ மன்றம் தனது வருடாந்த ஒளிவிழாவை சிறப்பாக நிகழ்த்தி வருகின்றது.

## The English Union

Our English Union is only a baby. It's only two years old. The primary aim of our union is to give an exposure of English to our students.

The members are given enough chance to improve their standard of English. Daily prayer session is conducted in English. Once a month we have a get together where students present various activities and through which they bring out their talents in English. Our students never fail to participate in the annual English Day activities and competitions conducted by the Zonal Education Department.

## கணித விஞ்ஞான மன்றம்

இம்மன்றம் பாடசாலை மட்டத்தில் மாதமொருமுறை வினாடி வினா, கருத்தரங்கு, சிந்தனைத்துளிகள் என்பவற்றை ஒழுங்கு செய்து நடத்தி வருகிறது. கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற கணித விஞ்ஞானப் போட்டிகளில் கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் பங்குபற்றும் வகையில் ஆயத்தம் செய்யப்படுகின்றனர்.

## ஆரம்பக்கல்வி மன்றம்

தரம் 1-5 வரையான மாணவர்களின் மொழி, கணித எண்ணக்கருக்கள், தொடர்பாடல் போன்றவற்றை விருத்தி செய்யும் வகையில் பாடசாலை மட்டத்திலான செயற்பாடுகள் இம்மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் வருடந்தோறும் களப்பயணம், எழுத்து முகாம், வாசிப்புப் பட்டறை, மகிழ்ச்சிகரமான கற்றல் செயற்பாடுகள் நடத்தப்பட்டு வருகின்றமை இம்மன்றத்தின் சிறப்பாகும்.

## பாடசாலை பங்கு கொண்ட போட்டிகள்

01. தமிழ் மொழித்தினப் போட்டி
02. கணித விஞ்ஞானப் போட்டி
03. ஆங்கில தினப் போட்டி
04. உடற்பயிற்சிப் போட்டி
05. மெய்வல்லுனர் போட்டி
06. உதைபந்தாட்டப் போட்டி
07. கரப்பந்தாட்டப் போட்டி
08. துடுப்பாட்டப் போட்டி
09. நாட்டுக் கூத்துப்போட்டி
10. சிநேக பூர்வப் போட்டிகள்

மாணவர்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட சகல போட்டிகளிலும் பங்கு கொண்டு தமது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளனர். அத்துடன் நாடகப் பயிற்சிப்

பட்டறை, சித்திரக் கண்காட்சி, நூலகக் கண்காட்சி, தமிழ்விழா, சிறுவர்தினம், முதியோர் தினம், ஆசிரியர் தினம், மாற்றுவலுவுள்ளோர் தினம், பரிசளிப்பு விழா, ஒளி விழா, பொங்கல் விழா, வாணி விழா ஆகிய நிகழ்வுகள் பாடசாலையில் நடத்தப்பட்டு வருகின்றன.

**உலக சுற்றாடல் தினம் -2008**

பேச்சுப்போட்டி - வி. ஜயந்போமினஸ் - 5ம் இடம்

**சமுக விஞ்ஞானப் போட்டி (பொது அறிவு) – 2008**

கெ. ஜெனவில் - கோட்டம் - 1ம் இடம்

பி. ஜோண்பில்ரன் - கோட்டம் - 1ம் இடம்

**2007 – 2010 வரையான காலப்பகுதியில் வரவில் கூடிய மாணவர் விபரம்**

01. பி. பார்த்தீபன் (இடைநிலைப்பிரிவு)
02. அ. ஜோசுவா மிதுஸ்ரன் (ஆரம்பப்பிரிவு)

குறிப்பாக பி. பார்த்தீபன் கடந்த நான்கு வருடங்களிலும் தனது வகுப்பில் கூடிய நாட்கள் வருகை தந்து முதலாவது இடத்தில் உள்ளார்.

**விளையாட்டுத்துறை**

விளையாட்டுத்துறையைப் பொறுத்தவரையில் எமது பாடசாலை முன்னேற்றமான நிலையிலேயே இருந்து வந்துள்ளது.

- 2007 ஆம் ஆண்டில் கோட்டம், வலய மட்டத்திலான உடற்பயிற்சிப் போட்டியில் முதலாம் இடம்.
- 15 வயதுக்குட்பட்ட பிரிவில் மாவட்ட மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாம் இடம்
- 2008 ஆம் ஆண்டில் மாவட்ட மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் இரண்டாம் இடம்
- 2008 -2009 ஆண்டுக்கான சிறந்த வீரராக ம.மரியறூபன் திகழ்கிறார்.

2009 – யாழ்ப்பாணம் கல்வி வலய விசேட கல்விப் பிரிவு நடத்திய உலக மாற்று வலுவுள்ளோருக்கான போட்டிகளில் பங்கு பற்றிய மாணவன், செல்வன் அ. கிஷாந் பல்வேறு சான்றிதழ்களைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 100 m ஓட்டப்போட்டி | - 2ம் இடம் | (8 -10 வயதுப்பிரிவு) |
| சித்திரப் போட்டி | - 2ம் இடம் | (தரம் -5 பிரிவு) |
| பாட்டுப் போட்டி | - 1ம் இடம் | (13-15 வயதுப்பிரிவு) |

2010 – பாட்டுப்போட்டி - 1ம் இடம் (பிரிவு – IV)

**எனது எண்ணப் பதிவுகள்**

வண பிதா பொஞ்சின் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இப்பாடசாலை தனது வளர்ச்சிப் படிகளில் பல்வேறு பெயர்களைத் தாங்கி இன்று யா/ சென். ஜோசப்ஸ் வித்தியாலயமென மிளிர்கின்றது ஆரம்பகாலம் தொட்டே பல்துறை சார்ந்த வணக்கத்திற்குரிய குரவர்களாலும், அருட்சகோதரர்களாலும், அறிஞர்களாலும் பண்டிதர்களாலும் நிர்வகிக்கப்பட்டு, குரவர்களையும் அறிஞர்களையும், பல்துறைசார் விற்பன்னர்கள், கலைஞர்கள் எனப் பல்லாயிரம் பேரை உருவாக்கித் தந்த பெருமை இப்பாடசாலைக்குரியது.

இவ்வாறு வளம்பல கண்டு சிறப்படைந்திருந்த எமது பாடசாலை கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக போர் அனர்த்தங்களைத் தாங்கி வந்துள்ளதோடு அதன் தாக்கம் சகல குடும்பங்களிலும் பரிணமித்துள்ளது. காலச் சூழலால் ஏற்பட்ட பொருளாதார அழிவுகள், குடும்பச் சிதைவுகள், மனித வள அழிவுகள் வளர்ந்தவர்களிலும் பிள்ளைகளிலும் ஏற்படுத்திய உளவியற் தாக்கங்கள் என துயர் மிகு சூழலையும் ஏற்று கல்விச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

2007 ஆம் ஆண்டில் அதிபராகப் பொறுப்பேற்ற போது, நாட்டின் அசாதாரண நிலை காரணமாக கற்றவர்களும் சுற்றாடலைச் சார்ந்தோரும் இடம்பெயர்ந்தும் அயற்பாடசாலைக்குச் சென்றமையாலும் கல்வியில் தொய்வு நிலை உண்டாக, மாணவர் ஆசிரியர் தொகையிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. எனினும் இழந்து போன எம் முதுசங்களை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் கடும் முயற்சிகள் மூலம் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கல்வி பற்றிய பெற்றோரின் விழிப்புணர்வில்லாமையும், வறுமையும் மாணவர்களைக் கல்வியில் நாட்டம் கொள்ள முடியாதபடி திசை திருப்பின எனினும் குருவானவர்கள், பெரியோர் சிலரின் உதவியுடன் வலிந்தும் வீடு விடாகச் சென்று அழைத்து வந்தும் கற்க வழிசமைக்கப்பட்டது. எவ்வித உதவிகளும் கிடைக்கப் பெறாத நிலையில், இருப்பதைக் கொண்டு திருப்திகாண முயற்சித்தோம். இன்னும் முயற்சிக்கின்றோம்.

கல்வியின் முக்கியத்துவம் உணரப்படுகின்ற நிலையில் திட்டமிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதன் மூலம் கல்விப்புலத்தில் புது உத்வேகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நூலகத்திற்கான நூல்கள், தொலைநகல் வசதி, விஞ்ஞான ஆய்வு கூட உபகரணங்கள் போதிய அளவில் காணப்படவில்லை எனினும்

நிறைவான கல்வியை வழங்க கல்வி அதிகாரிகளும், பாடசாலை ஆசிரியர்களும் கடும் பிரயாசையுடனும் முனைப்புடனும் செயற்படுகின்றனர். இருப்பினும் பெற்றோரின் கவனிப்பின்மையும், மாணவர்களின் ஊக்கமின்மையுமே முன்னேற்றத்திற்கு தடைக்கற்களாக உள்ளன.

மேலும் புதிதாக சாரணர் இயக்கம், சென்ஜோண்ஸ் அம்புலன்ஸ் போன்றவற்றை உருவாக்கி, இம்மாணவர்கள் இணைப்பாட விதான செயற்பாடுகளில் அக்கறை கொள்ள முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. 2008ஆம் ஆண்டில் கணினி, மனைப்பொருளியல் சம்பந்தமான முறைசாராக் கல்விப் பயிற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டமையால் பலர் பயனடைந்தனர்.

2008ஆம் ஆண்டில் மக்கள்படை கோஷ்டியினரின் உதவியுடன் பாடசாலைக்கான நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டதன் மூலம் தண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டது. 2009 ஆம் ஆண்டில் யுனிசெவ் நிறுவனம் பாடசாலைக்கான சமையலறையை அமைத்துத் தந்தது. பாஷையூர் புனித அந்தோனியார் இளைஞர் கழக கணினிகளை பாதுகாத்துத் தருமாறு பங்குத்தந்தை எம்மிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, பாஷையூர் புனித அந்தோனியார் முன்னேற்றக்கழகம் லண்டன் அமைப்பினரின் உதவி பெறப்பட்டு, கணினிகளைப் பயன்படுத்துவதன் மூலம் முறைசாராக் கல்வியையும் போதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதே காலப்பகுதியில் திரு. அன்ரன் வெனான்சியஸ், திரு. வ. ஜேசுதாஸ், திரு. மரியதாஸ் பிராங்கிளின், திரு. அல்போன்ஸ் அனுராஜ்குணதீபன் போன்றவர்கள் வெளிநாட்டிலிருந்து பாடசாலைக்கான உதவிகளை வழங்கினர்.

இவ்வாண்டில் EKSP செயற்றிட்டத்தின் மூலம் 5 கணினிகளும் அவற்றுக்கான தளபாடங்களும் அரசாங்கத்தினால் எமது பாடசாலைக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. "பாண்ட்" வாத்திய அணியை ஆரம்பித்து நடத்த முயன்றும் மூலதனம், வளப்பற்றாக்குறை காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்ல தங்களாலான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

எமது இனத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கல்வியே ஆதாரமானது. எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அடித்தளமானது. எனவே சரிந்து செல்கின்ற சமுதாயத்தை கல்வித்துறையால் நிமிர்த்திவிட வேண்டும் என்ற இலக்குடன் கடும்பிரயத்தனம் எடுத்து வருகிறேன். எனினும் மாணவர் தொகை குறைவாக இருப்பதும், எமது பாடசாலையில் திறமையாகச் செயற்படுகின்ற மாணவர்களை பிரபல்யம் பெறத்துடிக்கும் பாடசாலைகள் வலிந்து எடுத்துக் கொள்வதும் (எமது பாடசாலையின் உதைப்பந்தாட்ட அணியில் சிறப்பாக விளையாடிய வீரர்களை பிரபல பாடசாலை ஒன்று சூசகமாக தன்வசப்படுத்திக் கொண்டது. அதேபோல்

புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவன்) பெற்றோர் தம் பிள்ளைகளின் கல்விக்காகத் தூரத்தே உள்ள வசதியான பாடசாலைகளை நாடிச் செல்வதும், தமது குடும்பத்தின் வறுமையின் நிமித்தம் கெட்டித்தனமான மாணவர்கள் சிலர் தொழிலைத் தேடிச் செல்வதும் இங்கு காணக்கூடிய அம்சமாகும். இந்நிலை மாறி மாணவர் தொகை அதிகரிக்கப்படுமேயானால் எம் பாடசாலை வளர்ச்சி காணும். அத்துடன் ஒரே பங்கின் கீழுள்ள இரு பாடசாலைகளும் இணைக்கப்படும் போது போட்டி மனப்பாங்குடன் கற்றல் விருத்தியடையும். இதற்கு பெற்றோரின் ஒத்துழைப்பும் கவனிப்பும் இருந்தால் மட்டுமே மாணவரின் அடைவில் மாற்றத்தைக் காண முடியும்.

மேலும் தமிழர் வரலாற்றை நோக்கும் போது அவர்களுக்கென்று தனித்துவமானதொரு கலை, கலாச்சாரம் அன்று தொடக்கம் அவர்களின் உயிருடன் ஒன்றியதாகவே இருந்து வந்துள்ளது. எத்தனையோ அவலங்கள், துன்பங்கள் மத்தியிலும் உறுதிப்பாட்டுடன் திகழ்ந்த நம் பண்பாடு, இன்று வெளிப்பூச்சுகளுக்கு எடுபட்டுப் போகும் துன்பகரமான சூழலில் வாழ்கின்றோம். துன்பங்கள் மத்தியிலும் துணிவுடன் செயலாற்றுவதே சிறந்தது. புயலோடு சரிந்து விட்ட வேப்பமரம் புதிதாக தளிர்க்கலாம், இலையுதிர்வுக்குப் பின்னர் துளிர்கள் உண்டாகலாம். அஸ்தமனத்திற்குப் பின் புதிய உதயங்கள் மலரலாம். எனவே இருட்டைப் பழிப்பதை விடவும் ஒரு மெழுகுவர்த்தியாவது ஏற்றுவது மேலானது. இன்று எம் மண்ணில் புரையோடிப் போயுள்ள அவல இருளை அகற்றுவதற்கு நம்பிக்கை என்னும் சிறுஒளியை ஏற்றுவோம். தமிழர்களாகிய எமது அடையாளம் பொறிக்கப்படவும் சுதந்திரமாக வாழவும் நம் மண்ணை வளப்படுத்த முயல்வோம்.

முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைத்துள்ள எமது பாடசாலை, 150 ஆவது அகவையைப் பூர்த்தி செய்வதில் காலத்தால் அழியாத பெருமையும் புனிதத்துவமும் கொள்கிறது. அந்த வகையில் இவ்விழாவுக்கான ஆரம்ப நிகழ்வுகள் பல பாடசாலை மட்டத்திலும், கடல்சார் போட்டிகள் முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் அவர்களின் தலைமையிலும், அருட்பணி அந்தோனிமுத்து தலைமையிலும் மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், படகுப் போட்டிகள் என்பனவும் நடத்தப்பட்டன. அத்துடன் சான்றோரைப் போற்றுவதும் கற்றோரைக் கௌரவிப்பதும் தமிழர்களாகிய எமது மரபு. எமது சீரிய பண்பாடு, அந்த வகையில் கலை, விளையாட்டு, சமூக சேவை தொடர்பாக எமது பாடசாலை யின் பழைய மாணவர்கள் பலர் கௌரவிக்கப்பட்டனர்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக அதிபர் திரு. பா. வின்சென்ற் அவர்களும், செயலாளராக திருமதி. ஜொய்ஜினி அவர்களும், பொருளாளராக

செல்வி. G. ஜெயசுபாஜினி அவர்களும் செயலாற்றுகின்றனர். பாடசாலையோடு தொடர்பான செயற்பாடுகளில் அதிபருக்கு உறுதுணையாக இச்சங்கம் விளங்குகின்றது.

**பழைய மாணவர் சங்கம்**

2007 ஆம் ஆண்டில் அதிபருடைய உத்வேகத்துடன் இச்சங்கம் உருவாக்கப் பட்டது. எனினும் செயற்பாடுகள் எதுவும் முன்னெடுக்கப்படாத நிலையில் இச்சங்கம் இருப்பது மிகவும் மனவேதனையைத் தருகிறது.

**அன்பார்ந்த மாணவர்களே,**

பாடசாலையில் நடைபெறும் எந்தவொரு நிகழ்வும் வெறும் சடங்காகவோ, சம்பிரதாயமாகவோ மேற்கொள்ளப்படுவதில்லை இவை மாணவர்கள் தங்களை புத்துயிர்ப்பு செய்து கொள்வதற்கான செயற்பாடாகவே அமைகின்றன. ஒவ்வொரு மாணவனும் தனது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றில் ஆக்கபூர்வமான மாற்றத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பாடசாலை என்னும் நிறுவனம், தனித்துக் கல்வியை மட்டும் வழங்குவதில்லை. சமூகத்திற்கு வேண்டிய நல்லொழுக்கம் உடையவர்களையும், ஆளுமை, தலைமைத்துவப் பண்புள்ளவர்க ளையும், பரோபகார சிந்தனை உடையவர்களையும், சமூகப் பொருத்துப்பாடு உடையவர்களாக உருவாக்கும் ஒரு பயிற்சித்தளமாக அமைகின்றது. பாடசாலையில் பெற்றுக் கொள்ளக்கூடிய அனைத்தையும் பெற்றுக் கொண்டு எதிர்காலத்துக் குரியவர்களாக உங்களை மாற்றிக் கொள்ளுங்கள்.

**அன்பார்ந்த பெற்றோரே,**

கடந்த காலங்களைப் போலல்லாது இனிவரும் காலங்களில் இந்த நிறுவனத்திற்கும், நிர்வாகத்திற்கும் பாரிய ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இன்றைய நெருக்கடி நிறைந்த காலகட்டத்தில் அதன் தாக்கத்தால் எமது பிரதேச மாணவரின் நடத்தைக் கோலத்தில் விரும்பத்தகாத மாற்றங்களும் அதனால் கற்றல் செயற்பாடுகளில் ஆர்வமின்மையும் அதிகரித்துச் செல்கின்றது. நாகரிக மோகத்தாலும், எமது பண்பாட்டுக்கு ஒவ்வாத நிகழ்வுகளாலும் ஏற்படப்போகும் விளைவுகளை, எமது கலாசாரத்தில் திளைத்த எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இத்தகைய விளைவுகள் எமது சமூகத்திற்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகவே அமையும்.

எனவே நாம் எல்லோரும் இன்றைய சமூகததினரின், குறிப்பாக மாணவரின் செயற்பாடுகள் தொடர்பாக மிகவிழிப்புடன் இருப்பது அவசியமாகும். உங்கள் பிள்ளைகள் மீதான கண்காணிப்பை அதிகரித்து அவர்களுக்கு ஆலோசனை

வழங்குவதுடன், அவர்களை வழிப்படுத்தி ஊக்கப்படுத்துங்கள். அவர்களின் சுய கற்றலுக்கு உதவுங்கள். தங்களது பிள்ளைகளின் கல்வி மற்றும் திறன்களை வெளிப்படுத்துவதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்குங்கள். இணைப்பாடவிதான செயற்பாடுகளூடாக உடல், உள ஆரோக்கியத்தைப் பெற்றுக்கொள்ள உதவுங்கள். வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்க அதற்கான வசதிகளை ஏற்படுத்துங்கள். பிள்ளைகளுக்கு தன்னம்பிக்கையினை ஊட்டுங்கள். ஒழுக்கமுள்ளவர்களாக வாழவழிகாட்டுங்கள். உங்கள் பிள்ளைகள் தொடர்பாக பாடசாலை நிர்வாகத்துடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணுங்கள். பிள்ளைகளின் நேரத்தை பாடசாலைக்கு அப்பால் பயனுள்ளதாகக் கழிப்பதற்கு உதவுங்கள். பாடசாலை உங்கள் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சிகரமான ஒரு இடமாக இருப்பதை உறுதிப்படுத்தங்கள்.

**அன்பார்ந்த பழைய மாணவர்களே,**

உலகெங்கும் வியாபித்து பரந்து வாழும் தாங்கள் தங்கள் வித்தியாலய மாதாவின் நினைவுகளில் மூழ்கித் திளைத்த வண்ணம் உள்ளீர்கள் என்பதனை தங்களது செயற்பாடுகளிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது. உங்களது உயர்வுக்காக வழிகாட்டிய அன்னையானவள், உங்கள் வளர்ச்சி கண்டு பெருமை அடைகின்றாள். எனினும் அன்னையின் வளர்ச்சியில் பலரும் அக்கறை கொள்ளா திருப்பதன் நிமித்தம் இன்று துயருற்று நிற்கின்றாள். அன்னையாம் பாடசாலையை வளர்த்தெடுப்பதற்கு என்னுடன் கைகோர்த்து ஆதரவு தாருங்கள். உங்கள் ஒவ்வொருவரின் ஒத்துழைப்பும் இங்கு கல்வி கற்கும் உங்களது இளைய சகோதரர்களின் கல்விச் செயற்பாடுகளில் நல்ல விளைவுகளை உண்டு பண்ணும். எதிர்வருங்காலத்திலாவது தங்கள் ஒத்துழைப்பு பூரணமாக பாடசாலை நிர்வாத்திற்குக் கிடைக்குமென எண்ணுகின்றேன்.

**நன்றியுரை**

இன்றைய 150 ஆவது அகவை நிறைவு விழாவினை சிறப்பாக நிகழ்த்தி முடிப்பதற்கு ஆசியை வழங்கி வழிப்படுத்திய எல்லாம் வல்ல ஆண்டவனுக்கு முதற்கண் எனது நன்றியைக் கூறி நிற்கின்றேன். எமது அன்பான அழைப்பை ஏற்று இன்றைய விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்த அதி வந்தனைக்குரிய யாழ். ஆயர் அவர்களுக்கு எனது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது அழைப்பை ஏற்று இவ்விழாவில் கலந்து சிறப்பித்த சிறப்பு விருந்தினர்கள் மதிப்புக்குரிய மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வரத்தினம் ஐயா அவர்களுக்கும், எமது பங்குத் தந்தை றோய் பேடினன் மற்றும் அருட்பணி P. P பிலிப், அருட்பணி நேரியஸ் அடிகளார்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எமது பாடசாலையின் கல்வி அபிவிருத்தி மேற்பார்வை செய்தும் ஆலோசனை வழங்கியும் வளப்படுத்த உதவிய யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர், பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், கல்வித்திணைக்களத்தின் ஏனைய அதிகாரிகள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகள். அத்துடன் இவ்விழாவில் கலந்து சிறப்பித்த அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அருட் தந்தையர்கள், அருட்சகோதரரிகள், அருட்சகோதரர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழையமாணவர்கள், பெற்றோர் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விழா சிறப்புற அமைவதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைத்த பாசடாலையின் அசிரிய குழாத்தினருக்கும் மாணவச் செல்வங்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

அன்புடன்
பா.வின்சென்ற்
(அதிபர்)

# எமது வித்தியாலயத்தில் கடமையாற்றிய அதிபர்கள்

| | |
|---|---|
| வண.பிதா.பொஞ்ஜீன் (ஸ்தாபகர்) | 1861 - |
| அருட் சகோ. V.பேதுருப்பிள்ளை | 1922 - 1938 |
| பண்டிதர் ஆ. யோசவ் | 1945 - 1962 |
| திரு. ச. ஞானப்பிரகாசம் | 1963 - 1970 |
| திரு. வெ. வில்லியம் | 1971 - 1974 |
| திரு. எஸ். எம். மாட்டீன் | 1974 - 1975 |
| திரு. அ. அருளப்பு | 1975 - 1982 |
| திரு. ஜி. பி. அல்பிறட் | 1983 - 1989 |
| திரு. ஏ. ஐ. குணநாயகம் | 1989 - 1990 |
| திரு. ச. எ. பெர்னாண்டோ | 1990 - 1991 |
| திருமதி. P. F. சின்னத்துரை | 1991 - 1992 |
| திரு. வி. பெ[illegible]ற் | 1992 - 1998 |
| திரு. மா. ஞானப்பிரகாசம் | 1999 - 2004 |
| திரு. நா. வைத்தியானந்தன் | 2004 - 2006 |
| திரு. பா. வின்சென்ற் | 2007 - |

## தற்போதய அதிபர் ஆசிரியர்களுடன்



இடமிருந்து வலம் (அமர்ந்திருப்போர்)

திரு. இ. ஞானேஸ்வரன், திரு அ. நிறஞ்சன், திரு. க. அமலதாசன், திரு. பா. வின்சென்ற் (அதிபர்), திருமதி. மெ. றொபின்சன், திருமதி. சு. ரவிலிங்கன், திருமதி. ஜெ. சிவபாதம்.

நிற்பவர்கள் (முதலாம் வரிசை)

(இ.வ)

திருமதி. சு. மோகனகுமார், திருமதி. சு. ஜெயசுபாஜினி, திருமதி. அ.பெ. குரூஸ், திருமதி. சா குகநாதன், திருமதி. க. விஜிதா, திருமதி. ஜெ. எமில்ராஜ், திருமதி. செ. ஜோண்கொலின்.

நிற்பவர்கள் (இரண்டாம் வரிசை)

(இ.வ)

திரு. ஜெ. கோகுலவாசன், செல்வி. க. யூட்சியானி, திருமதி. ஜெ. சிறிதரன், செல்வி. மே. மேரி ஜெயந்தா, திருமதி. ந. ரவீந்திரன், திரு. க. ஈஸ்வரகுமார்.

## மலர்க் குழு



இடமிருந்து வலம் (அமர்ந்திருப்போர்)

திரு. க. அமலதாசன், திரு. பா. வின்சென்ற் (அதிபர்), திருமதி. மெ. றொபின்சன், திருமதி. க. விஜிதா,

நிற்பவர்கள் (இ.வ)

திருமதி. அ.வெ. குரூஸ், செல்வி. மேரி ஜெயந்தா, செல்வி. க. யூட்சியானி.

## அதிபர் பொறுப்பாசிரியர்களுடன் மாணவ முதல்வர்கள்




இடமிருந்து வலம் (அமர்ந்திருப்போர்)

திரு. G. அமலதாசசன், திரு. P. வின்சென்ற் (அதிபர்), திருமதி. S. ரவிலிங்கன்

நிற்பவர்கள் (இ.வ)

P. பார்த்தீபன், J. பியூஸ்ஸஸ், W. ஜயந் பேர்மினஸ், S. நிலக்சன், G. வினோத், M. பஸ்ரியன், J. கிரிஷாந், E. மதுஷன்குமார், S. நியூட்டன், K. தர்சன்.

## ஆரம்பக் கல்வி மன்றம் - அதிபர் பொறுப்பாசிரியர்களுடன்



இடமிருந்து வலம் (அமர்ந்திருப்போர்)

திருமதி. S. குகநாதன், திருமதி. M. றொபின்சன் , திரு. P. வின்சென்ற் (அதிபர்), திருமதி. G.V.Q.A. ஜோர்ஜியானா

நிற்பவர்கள் (இ.வ)

V. சாருஜன், K. ஜெறின், A. அஜனோல்ட்.

# யாழ்ப்பாண விழுமியங்கள் - ஒரு பார்வை

இலங்கை என்னும் பரந்த அடிப்படையில் வரலாற்றை பின்னோக்கிப் பார்த்தால் கல்விக் கூடங்கள் ஒழுங்கமைப்புடன் ஆரம்பிக்கப்பட்டது அந்நியர் ஆட்சிக் காலத்திலேதான் எனக் கூறினால் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்காது.

எம்மை ஆட்சி செய்த அந்நிய தேசத்தவருக்கு தமது நிர்வாகத்தை செவ்வனே நடாத்த ஊழியர்கள் தேவைப்பட்டார்கள். இந்தத் தேவை காரண மாகத்தான் அவர்களால் பாடசாலைகள் முதலில் ஆரம்பிக்கப்பட்டன. அவர்களைத் தொடர்ந்து கிறீஸ்தவ குருமார்கள் தமது விசுவாசிகளுக்கு நல்ல மத விழுமியங்க ளைப் புரிய வைக்கவும், அவர்களின் அடிப்படை அறிவை விருத்தி செய்யவும் பாடசாலைகளை நிறுவினார்கள்.

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களே முதலில் அந்நியர் ஆட்சிக்குட்படுத்தப்பட்டது. நிர்வாக முறை எனப்படுவதும் கரையோரப் பகுதிகளி லேயே முதலில் மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணப் பிரதேசம் ஆரம்ப காலத்திலேயே அந்நியராட்சிக்குட்பட்டதால் கல்வியில் இப்பிரதேச மக்கள் பல அனுகூலங்களைப் பெற்றார்கள். நாட்கள் கடந்து போக கிறிஸ்தவ குருமார்களுக்கு அப்பால் இந்து சமயத்தவர்களும் பல பாடசாலைகளை நிறுவினார்கள் கல்வி கற்கும் ஆர்வம் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அதிகரிக்கத் தொடங்கியது. ஆரம்ப காலத்திலிருந்து பலர் ஆங்கிலக் கல்வி மூலம் புலமையடைந்தனர். அரச வேலை வாய்ப்புக்களால் யாழ்ப்பாணத்தவர் அதிக நன்மை அடைந்தனர். இலங்கை சுதந்திரம் அடையுமுன்பும் அதன் பின்பும் இலங்கை முழுவதும் யாழ்ப்பாணத்தவர் அரச, தனியார் துறைகளில் அதிகமானோர் தொழில் வாய்ப்புப் பெற்றனர்.

யாழ்ப்பாணத்தவர் கல்வியை மூலதனமாக்கி தமது பொருளாதார, சமய, சாதி சார்ந்த விழுமியங்களை, பாரம்பரியத்தை கட்டி எழுப்பினர். இவையனைத்தும் பரந்த நோக்கோடு அல்லாமல் சுயலாபத்தோடேயே கையாளப்பட்டன. குறிப்பாக ஆங்கிலேயரின் பண்பு, பழக்க வழக்கங்களை தம்முடைய நலன்களுக்கு இசைவாக மாற்றியமைத்துக் கொண்டனர்.

யாழ்ப்பாணத்தவர் பொருளாதார, கல்வி அடிப்படையில் உயர்வானவர்க ளென்னும் எண்ணமும் இவர்களிடம் பரவலாக மேலோங்கி நின்றது. இத்தகைய சித்தாந்தம் முறையானதா அல்லது முறையற்றதா என ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் அல்ல. ஆனால் இத்தகைய சித்தாந்தத்துடன் வாழ்ந்த சமூகம் கடந்த 30-40 வருடங்களாக இலங்கையில் நடந்த குழப்பங்களால் தனது இயல்பான பண்புகள் பலவற்றை இழந்த நிலையிலுள்ளது. சமூகத்தின் நலிவுக்குத் துணைபோகும் செயல்கள் பல மலிந்துள்ளன.

யுத்த சூழ்நிலைகள் மாறியுள்ள நிலைமையில் மனிதர்கள் நலமாக, வளமாக வாழ வேண்டிய இந்நேரத்தில் இங்கு பண்புகள் எல்லாமே முரண்பாடான முறையில் மாற்றமடைகின்றன.

இப்பிரதேசத்திலே கல்வி கற்றுப் பட்டம் பெற்றவர்கள், இங்கு நொடிந்து போயுள்ளவர்களை விட்டு விலகிச் செல்கின்றார்கள்.

இலவசக் கல்வியினால் பெற்ற அனுகூலங்களை மறந்து மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களை அதிகம் விரும்புகிறார்கள்

இங்குள்ள அரச ஊழியர்களில் பலர் இலங்கையின் பல பாகங்களிலும் வேலை செய்த கடந்த காலத்தை மறந்து, தமது வீட்டுக்கு அருகிலும் தமது ஊரிலும் தொடர்ந்து பணிபுரிய விரும்புகிறார்கள். தமது மாவட்டத்தின், மாகாணத்தின் ஏனைய பகுதிகளில் பணிபுரிய பின்னடிக்கிறார்கள்.

* இங்கு வயோதிபர்களை இளஞ்சமூகத்தினர் மதிக்காத தன்மைகளை பல இடங்களிலும், சந்தர்ப்பங்களிலும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

* கொலையும், தற்கொலையும், கொள்ளையும் பாலியல் பிறழ்வுகளும் அதிகரித்துள்ளதான விபரங்கள் வெளியிடப்படுகின்றன.

* திருமணம் செய்ய, சீதனத்தின் பெறுமதியை கோடிக்கு அப்பால் நகர்த்தி பெண்கள் பலருக்கு அப்பாக்கியத்தையே தடை செய்து நிற்கிறார்கள்.

* காணிகளின் விலை வானளாவ உயர்ந்து, வாழ ஒரு நிலம் இல்லாமல் இருப்போரின் தொகை நகரத்தில் அதிகரித்துள்ளது.

* தம் பெற்றோரை தம்முடன் வைத்திருந்து பராமரித்த மக்களின் வழித்தோன்றல்களில் பலர் முதியோரை முதியோர் இல்லங்களிலும் யாழ்ப்பாணத்திலும் அகதிகளாக்கியுள்ளனர்.

இத்தகைய மாற்றுப் பண்புகள் பாரம்பரியமாகி, தம்மை உயர்வாக கருதி வாழ்ந்த மக்களிடம் எவ்விதம் புகுந்து கொண்டன?

இயற்கை அனர்த்தங்களோ அல்லது மனிதர்களால் ஏற்படுத்தப்படும் செயற்கை அனர்த்தங்களோ ஆரம்ப காலந்தொட்டு உலகின் பல பாகங்களையும் நலிவுற வைத்துக் கொண்டே வருகின்றன.

இத்தகைய நிகழ்வுகள் மறு பக்கத்தில் சமுதாயத்தை தூய்மைப்படுத்த உதவி வந்தமையையும் நாம் மறந்து விட முடியாது. இரண்டு உலக மகா

யுத்தங்களாலும், ஏனைய உள்நாட்டு மொழி, மதப் பூசல்களாலும் இன்னல்கள் பலவற்றைச் சந்தித்த மக்கள், அவற்றினால் பெற்ற அனுபவங்களை அபூர்வமான முறையில் பயன்படுத்தி, தம்மை மாற்றி தமது பண்பை உயர்த்தி, தமது நாடுகளை உயர்வான நிலைக்கு வளர்த்தெடுத்துள்ளமையையும் ஆங்காங்கே காணக்கூடியதாக உள்ளது.

இத்தகைய அனுபவங்களை, வாய்ப்புக்களை நாம் ஏன் பயன்படுத்த முடியாது? நீண்ட கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு சமூகம் ஏன் யதார்த்தமாக சிந்திக்கக் கூடாது? நல்ல விழுமியங்களை நமது வருங்கால சந்ததியினர் கற்று நமது பிரதேசத்தை ஏன் விருத்தி செய்ய முடியாது?

பல வருடங்களாக நடைபெற்ற உள்நாட்டு மோதல்கள் முடிவுக்கு வந்துள்ள தற்காலச் சூழலை நமது பிரதேசத்தில் புதிய விழுமியங்களை உருவாக்கவும், சீரழிந்து போயுள்ள பண்புகளை மீளக் கட்டி எழுப்பவும் இறைவனால் நமக்கு வழங்கப்பட்டுள்ள பொருத்தமானதொரு காலமாகக் கருதி, இளையவர், முதியவர், சாதி, மத, மொழி, வகுப்பு வேறுபாடுகளற்ற வலுவான ஒரு சமுதாயத்தை நமது பிரதேசத்திலும், நாட்டிலும் கட்டி எழுப்புவோம்.

க. அமலதாசன்
ஆசிரியர்
யா/ சென் ஜோசப்ஸ் வித்தியாலயம்
கொழும்புத்துறை.



# கற்றல், கற்பித்தலில் கவனிக்கப்பட வேண்டிய மாணவரின் உளவியல்

"எனக்கு படிக்க விருப்பமில்லை ...."
"உனக்கு எந்தநேரமும் வகுப்பில சண்டைதான்"
"அந்தப் பையன் சரியான குழப்படி..."
"விளையாட விட்டுப்பாருங்க....."
"ஏன் என்ர மகன் படிக்கிறானில்லை..."
"என்னால படிக்க முடியல்ல..."

இப்படிப்பட்ட கட்டம் கட்டப்பட்ட உரையாடல்களின் பகுதிகள் இன்று அதிகமாக எம் காதுகளை வந்த வண்ணம் உள்ளன. இது சிலருக்குப் பழகிப்போன 'டயலக்". சிலருக்கு சொல்லிச் சொல்லி அலுத்துப்போன விடயங்கள், இன்னும் சிலருக்கு இவை வாழ்வியல் அனுபவங்கள். இந்த உரையாடல்களுக்குப் பின்னால் மறைந்திருப்பவர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என்கின்ற முத்தரப்பினர் என்றாலும் அது சொல்லாமல் விளங்கிவிடும். இது எப்படியானாலும் மாணவர்கள் தான் மையப்பொருளாக (Focal Point) இருக்கின்றனர். இவ்வசனங்களால் அலுத்துக் கொள்ளும் பலர் இதன் பின்னால் இருக்கும் பல விடயங்களை பார்க்க மறந்து விடுகின்றனர் என்பதைவிட பயப்படுகின்றனர் என்றால் அது முற்றிலும் உண்மை.

கற்றல் அடிப்படையில் மனித வர்க்கத்தைப் பிரிப்போமானால்,

1. சிலர் அறிவாளிகளாகப் பிறக்கின்றனர். (Born intelligent). இவர்களுக்கு கற்பிப்பது என்பது சுலபம். இலகுவாகப் படிக்கின்ற ஆற்றலை, இம்மாணவர்களோ, இத் தரப்பினர்களோ கொண்டிருப்பார்கள்.

2. இரண்டாவதாக அறிவாளிகளாக உருவாகுபவர்கள் (Learn intelligent) இவர்கள் தமது அபரீத முயற்சியினால், கடின முயற்சியினால் கற்றுக்கொண்டு அறிவாளிகளாகி உருவாகின்றார்கள். இவர்களுக்குக் கற்பிப்பது என்பது சுலபமான காரியமாக இருக்காது. பெரும் பகுதியினராகி இவர்கள் இருப்பவர்கள். இந்த வகையில் எதற்குள் நான் இருக்கின்றேன் என்பதை மாணவர் பிராயம் எங்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்லிவிடும். எனவே அதற்கேற்ப எமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வது வெற்றிகரமாக ஓர் வாழ்வியலுக்கு இட்டுச் செல்லும்.

இது இப்படி இருக்க மாணவர்கள் தமது கற்றல்சார் நடவடிக்கைகளில் பல தடைகளைச் சந்திக்கின்றார்கள். இவை இனங்காணப்படாத பட்சத்தில் இவர்கள்

தமது கல்வியை இடை நிறுத்திக் கொள்ள வேண்டிய ஓர் அசாதாரண சூழலுக்கு தள்ளப்படுவார்கள். இது பெரும்பாலும் உளவியல் தாக்கமென இனங்காண முடியும். உதாரணமாக: ஒரு மாணவன் எந்த நேரமும் வகுப்பில் சண்டை பிடிக்கின்றவன் என்றால், அந்த மாணவன் முரண்பாடுகளுக்கூடாக, ஓர் வன்முறைக் கலாசாரத் தினூடாக வளர்க்கப்பட்டவன். அவன் பிறந்தது முதல் சண்டையை வீட்டிலும், கொலைகளை வீதியிலும் கண்ட ஒருவனாக இருப்பான்.

இது அவன் பாடசாலை நாட்களில் வெகுவாக வெளிப்படுத்துவதைத் தவிர்க்க முடியாது. இதற்காக அந்த மாணவன் தண்டிக்கப்படுவதை விட ஆற்றுப்படுத்தப்பட வேண்டியவனாக இருக்கின்றான்.

இந்த ரீதியில் மாணவரின் உளநிலையை, அதாவது மாணவரின் கற்றலில் தாக்கம் செலுத்தும் காரணிகள் என்று பார்க்கும் போது

1. வறுமை (Poverty)
2. போர் (War)
3. சூழல் (Surrounding)
4. சமூகம் (Society)
5. குடும்பம் (Family)

பாரிய பங்களிப்பு செய்கின்றன. வறுமையில் வாடுகின்ற மாணவன், வகுப்பில் நித்திரை செய்வது, பாடசாலைக்குச் சமூகமளிக்காமல் இருப்பது நியாயமானது தான்

கொடிய போரின் பிற்பகுதியில் வாழும் எம் மாணவர்களில், போரின் இழப்புக்கள், இடப்பெயர்வுகள், அகதி வாழ்வுகள், கற்றல் தடங்கல்கள் என்பன தாக்கம் செலுத்துவது யதார்த்தமானது, இந்த ரீதியில் கற்றல் நடவடிக்கைகளை பாதிக்கும் காரணிகளை மூன்று வகையாகப் பார்க்கலாம்

1. கற்றல் சார் தடைகள்
2. நடத்தைசார் தடைகள்
3. உறவுகள், உணர்ச்சிகள் சார் தடைகள்

கற்றல் சார் தடைகள்

1) ஞாபகப்படுத்த முடியாமை:- ஒரு மாணவன் தான் அண்மையில் கற்ற விடயங்களை நினைவு படுத்திப் பார்க்க முடியாமையாகும். இது எதற்காக ஏற்பட்டுள்ளது என்பதை மாணவன் ஆசிரியர்கள் உதவியோடு கண்டறிந்து மட்டுமல்ல, அதை வளர்க்க பல செயற்பாடுகளைச் செய்ய வேண்டியவனாக இருக்கின்றான்.

2) **ஆர்வமின்மை:** தற்போதைய மாணவர்கள் கற்றலில் ஆர்வம் காட்டுவது அருகிக் கொண்டே வருகின்றது. காரணம் அவர்கள் ஆர்வம் பல மாற்றுக் காரணிகளால் பிரதியீடு செய்யப்படுகின்றமையாகும். (உதாரணமாக தொலைக்காட்சி, விளையாட்டு, கணினி, கையடக்கத் தொலைபேசி)

3) **மனதை ஒருமுகப்படுத்த முடியாமை:** கற்றலுக்கு மிக முக்கியமானது மனதை ஒரு முகப்படுத்துவது, ஆனால் இது பலருக்கு கஸ்ரமான விடயம். உடல் மட்டும் வகுப்பில், உள்ளம் எங்கோ அலை பாய்ந்து கொண்டிருக்கும். இப்படிப்பட்ட மாணவனால் எப்படிப் படிக்க முடியும்? முதலில் மனதை ஒரு முகப்படுத்தத் தடையாக இருக்கும் காரணிகளைக் கண்டறிந்து நிவர்த்தி செய்யப்பட வேண்டும். பின்னர் 'தியானம்' யோகா, கராத்தே, போன்றவற்றினூடாகப் பயிற்சி செய்ய வேண்டும்.

4) **கவலைகள்:** இறப்புக்கள், இழப்புக்கள், பிரிவுகள் என்பன. கவலையளித்தால் அந்த மாணவன் எப்படிப் படிக்க முடியும்? எனவே இவற்றிலிருந்து அந்த மாணவன் விடுவிக்கப்பட ஆற்றுப்படுத்தப்பட வேண்டியவனாக இருக்கின்றான்.

**நடத்தை சார் தடைகள்**

1) **பொய் பேசுவது** : எடுத்ததும் பொய் சொல்லும் மாணவனால் தனது நிலையை எடுத்துக்கூற முடியாது. தனது உண்மை நிலையைத் திரைபோட்டு மூடிவிடுவான். விளங்காது விட்டால் விளங்கியவன் போல் நடிப்பான். இது கற்றலில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

2) **வன்முறை:** வன்முறையில் ஈடுபடும் மாணவன் படிக்க முடியாது. இவர்கள் மனமுறிவு களை, காயங்களைச் சம்பாதித்தவர்கள் ஆகின்றார்கள். தங்களது காரியங்களை ஈடு செய்ய இவர்கள் பாவிக்கும் வன்முறை இவர்கள் கற்றலுக்கு முட்டுக்கட்டை போடுவதை உணர மறக்கின்றனர். உதாரணமாக பாடசாலைப் பொருட்களைச் சேதப்படுத்தல், அதிபர் ஆசிரியருக்கு சவால் விடுதல், பெற்றோருடன் முரண்பட்டுக் கொள்ளுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**உணர்ச்சிசார் தடைகள்.**

1) **பயம்** :- பரீட்சை எழுதப்பயம், கேள்வி கேட்கப்பயம், கதைக்கப்பயம், தனது தேவையைச் சொல்லப் பயம். இப்பயம் மாணவன் ஒருவனுக்கு கற்றல் நடவடிக்கையை பாதிப்பதை உணரவேண்டிய தேவை இருக்கின்றது.

2) **புதிய விடயத்தைக் கற்பதில் உள்ள அச்ச உணர்வு** : புதிய பாடமா? வேண்டாம். புதியவற்றைக் கற்பதில் ஏற்படும் சவால்கள், பிரச்சினைகள், ஒருவனது கற்றலில் பாதிப்பை ஏற்படுத்துவதை உணரவேண்டும்.

3) **பெற்றோரின், ஆசிரியரின் கட்டாயப்படுத்தல்** :- பெற்றோர்கள், ஆசிரியர்கள், சில சமயங்களில் தங்களது எதிர்பார்ப்புக்களை மாணவர்கள் மீது திணிக்க முற்படுவது.

உதாரணமாக: O/Lல் பத்துக்கும் A எடுக்க வேண்டும், அனைத்தையும் மனப் பாடம் செய்ய வேண்டும். அளவுக்கு அதிகமான வீட்டுவேலை. இது மாணவனது உளவியலில் பாரிய தாக்கத்தை உண்டு பண்ணும்.

4) **அளவுக்கு அதிகமான சுய சந்தேகம்**: சிலருக்கு தங்கள் மேல் நம்பிக்கை இல்லை இதனால் இவர்கள் துணிந்து எதனையும் செய்ய முடியாது.

**சூழல் சார் தடைகள்.**

1) மின்சாரத்தடை
2) போக்குவரத்து வசதிகள் இல்லை: உதாரணமாக மணியந்தோட்டத்தில் உள்ள மாணவன் புனித சூசையப்பர் பாடசாலைக்கு வர போக்குவரத்து வசதி இல்லை என்றால், அவனது கற்றல் நிச்சயமாகப் பாதிப்படையும்.
3) சத்தமான சூழல் : ஒரே பாட்டுச்சத்தமும், கதைக்கும் சத்தமும் வீட்டை நிரப்பினால்......

எனவே இப்படியான தடைகளை, மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் இனம் காண வேண்டும். இத்தடைகளை அகற்ற மாற்று நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும். அப்போது மாணவன் படிப்பதற்கான ஓர் உளவியல் அவனில் உருவாகும். அது அவனை நல்லவனாக உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை. இத்தோடு சேர்த்து

1) ஒழுக்கம் (Discipline)
2) நேரத்தை திட்டமிடல் (Time table)
3) நாளாந்த மீட்டல் (Daily revision)
4) பொருத்தமான கற்றல் முறை (correct methodology) என்பன மாணவனது உளவியலுக்கு ஏற்றவாறு அமைத்தல் சிறப்பாக அமையும்.

நீண்ட நெடிய பயங்கரமான போருக்குப் பின் வாழும் நாம் சிறப்பாக இக்கால மாணவர்கள், அனேகமான இப்போர்ச் சூழலிலே பிறந்து அச்சூழலிலே வளர்தெடுக்கப் பட்டவர்களாக இருப்பதால், இப்போர் விட்டுச்சென்ற வடுக்கள் இவர்களில் தாக்கத்தை செலுத்திய வண்ணம் இருப்பதையும் நாம் மறந்து விடமுடியாது. எனவே கற்றல் கற்பித்தலில் (Post war) போருக்கு பின்னரான விளைவுகள் கருத்தில் கொள்ளப்படுதலும். அச் செயற்பாட்டை சரிவர செய்ய உதவியாக அமையும்.

**அருட்சகோ. பா. அ. யேசுதாஸ் அ.ம.தி**
(இறுதி வருட இறையியல்)
புனித சூசையப்பர் வித்தி. பழைய மாணவன்.
(1989 -1996)

# பண்டைத் தமிழரின் வாழ்க்கை நெறி

வாழ்க்கை வாழ்வாங்கு வாழ்வதற்கு உரியது. பிறழ்வு இல்லாத ஒழுக்க நெறியில் தாமும் வாழ்ந்து, ஏனைய உயிர்களையும் வாழ்விக்கும் மனிதவாழ்வு தவத்திற்கு ஒப்பானது. அதற்கான நெறிகளைப் புவியின் தன்மைக்கு ஏற்ப வடிவமைத்து வழங்கியவை சமயங்கள். பன்முகம் கொண்ட சமயங்களின் நோக்கம் பயனுறு வாழ்வும் நிறைவுறு சமுதாயமுமே! இதற்கான பணித்தளத்தில் சிறப்பிடம் பெறுவது மொழி. மொழியின் இயங்குதளம் இலக்கியம். உணர்வில் கலந்து உயிரை உய்விக்கவும் உடலையும் பேணத் தூண்டிச் செயற்படுவது இதன் இயல்பு. தான்தோன்றித் தனமாகத் தறிகெட்டுத் தடம்மாறிப் போகாது, உலகை ஒருமைப்படுத்தி உயர்நிலை அடையச் செய்வதே இலக்கியத்தின் சிறப்பு. பழந்தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அக்கால மக்களின் வாழ்க்கை நெறியினை ஆராய்ந்து அறிவோம்.

"கல்வி தறுகண் ணிசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமித நான்கே"

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின்படி கல்வி, தறுகண், புகழ், கொடை என்னும் நான்கு பண்புகளினூடாகவும் பண்டைத் தமிழர் பெருமிதத்துடன் வாழ்ந்தனர் என்பது சங்க நூல்களால் அறியக் கூடிய உண்மையாகும். வீரத்தினைப் பெருமிதம் என்பார் பேராசிரியர். "எல்லாரொடும் ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்றல் பெருமிதம்." எனவே வீரம் மிகுந்த ஒருவன் மற்றவர்களைப் பார்க்கிலும் சிறந்து விளங்குவான் எனக் கூறப்படுகிறது. "கல்வி என்பது தவம் முதலிய வித்தை. தறுகண் என்பது அஞ்ச வேண்டியவற்றை கண்டும் அஞ்சாதிருத்தல். இசைமை என்பது இன்பமும் பொருளும் வருமெனினும் பழியோடு வருவனவற்றைச் செய்யாமை. கொடை என்பது உயிர், உடம்பு, உறுப்பு முதலிய எல்லாப் பொருள்களையும் கொடுத்தல்" என்று விளக்கியுள்ளார் பேராசிரியர். பண்டைத்தமிழர் இந்த நான்கிலும் சிறந்து விளங்கினர் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன.

ஒரு நாடு அனைத்து வகைகளிலும் முன்னேற்றம் பெறவேண்டுமாயின் கல்வி நிலை உயர்வில் இருத்தல் அவசியமாகும். கல்வியினால் அறிவை விளக்குதலும், தொழிலினால் பொருளைப் பெருக்குதலும், இல்வாழ்க்கையினால் அனைவருக்கும் உதவியாயிருத்தலும், கலந்த மனப்பான்மையினால் எவரிடத்தும் வேறுபாடில்லாதிருத்தலும் நம் முன்னோர்களின் சிறப்பான குணங்களில் ஒன்றாகும். மக்கள் எல்லோருக்கும் கல்வியின் அவசியத்தை அறிவுறுத்த எண்ணிய மன்னர் பெருமானாகிய ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்பவன், "அறிவுடையோன் ஆறு அரசு செல்லும்" என அறிவுறுத்திய தொடரின் மூலமும், "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே" என்ற தொடரின் மூலமும், "ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே, சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்னும் தொடரின் மூலமும் கற்றவர்களுக்கும் கல்விக்கும்

கொடுக்கப்பட்ட நிலையை அறியலாம். அக்கால மக்கள் கல்வியை அருமையாகப் போற்றி வந்தமையால் அவர்களது வாழ்க்கை அறிவொளி மிகுந்ததாக விளங்கியது. இது கல்வி பற்றிய தமிழரது பெருமிதத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

தறுகண் எனப்படுகின்ற வீரத்தைப் பார்ப்போம். பண்டைத்தமிழ்த் தாயரும், தந்தையரும், தம்மக்கள் வீர மக்களாக வாழவேண்டுமென்று விரும்பி பாலூட்டும் போதே வீரத்தையும் குழைத்து ஊட்டினர்.

"வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

என்று பொன்முடியார் என்ற புலவர் தன் மகனிடம் கூறும் போது, போரில் அஞ்சாது நின்று பகை மன்னனின் களிற்றினைக் கொன்று மீளுதல் காளையாகிய அவனுடைய கடன் என்று கூறுகின்றார். தமிழ் நாட்டரசர்கள் பகைவரோடு போருக்குச் செல்லும் முன் ஒரு நெறிமுறையைக் கைக்கொண்டனர். "ஆவும், பார்ப்பனரும், பெண்டிரும், பிள்ளைப்பேறில்லாதாரும் அரணை அடைக. நாம் போருக்கு வருவோம்" என முரசறைவித்தே போரைத் தொடங்கினர்.

வீரம் புகழ்ந்து பேசப்படுகின்ற சங்க காலத்திலே, "கெடுக சிந்தை கடிதிவள் துணிவே" என வீரத்தாயைப் புகழந்து போற்றுகின்றான் புலவன். மேலும் போர்ப்பறை கேட்கும் போது தன் சிறுமகனை அலங்கரித்துப் போருக்கு அனுப்புவதையும், கணவரையும் புதல்வர்களையும் போருக்கு அனுப்பி விட்டு அவர்கள் களத்தில் வீர சொர்க்கம் அடைந்ததை நேரில் சென்று பார்த்து உவகையுடன் கண்ணீர் சொரிந்ததையும், தன் மகன் முதுகில் விழுப்புண் பட்டு இறக்கவில்லை, மார்பில் விழுப்புண்பட்டு இறந்ததைப் பார்த்து மகிழ்ந்ததையும் பழந்தமிழர் இலக்கியங் களினூடாக அறிகிறோம். அத்துடன் பண்டைத்தமிழர் தம் பெண்களை வீரம், புகழ் அறிவு முதலிய நலன்களில் சிறந்தவர்க்கே மணம் செய்து கொடுத்தனர்.

இசைமை பற்றிய பெருமிதத்தை ஆராய்ந்தால் பண்டைத்தமிழர் நன்கு வீரம் மிக்கவர்களாக விளங்கினாலும் அவர்கள் ஆற்றிய போர் அறப்போரன்றி மறப்போர் அன்று. போர் நடக்கும் காலத்தில் அஞ்சி முதுகு காட்டிச் செல்வோர். நடுங்கும் உள்ளம் உடையவர், தலைமயிர் குலைந்தோர், படைக்கலம் இழந்தோர், போரில் புண்பட்டோர், தம்மிலும் இளையோர் ஆகிய இவர்கள் மீது பண்டைத்தமிழர் அம்பினைச் செலுத்தார். இக்காலத்தில் இதற்கு நேர்மாறான போர் புரிதலையே நாம் காண்கிறோம். "அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன் இழுக்கா மானம் உடையது அரசு" என்பது திருவள்ளுவர் கருத்து.

பண்டைத்தமிழர் வீரத்துடன் மட்டுமன்றி மானத்தோடும் விளங்கினர். "மானமென்பது தன் நிலைமையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு உண்டாகுமெனில் உயிரோடு வாழாமையும்" என்பார் பரிமேலழகர். சேரமான் கணைக்கால் இரும்பொறை என்பவன் சோழன் செங்கணானோடு போர் புரிந்து தோல்வியடைந்து சிறையில் கிடந்தான். ஒரு முறை சிறைக் காவலரைத் தண்ணீர் தரும்படி கேட்க, அவர்கள் உடனே அவனுக்கு தண்ணீர் கொடுக்காமல் சிறிது காலம் தாழ்த்திப் பின்னர் கொண்டு வந்தனர். சேரமான் மானம் மிக்கவனாகையால் அந்நீரைப் பருகாது இறந்தான். இதனால் பண்டைத்தமிழர் உயிரினும் மானத்தினை சிறந்த பொருளாகக் கருதினர் என்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது. உயிர் போனாலும் ஒருவன் தன் குடிப்பிறப்பிற்குப் பொருந்தாத மானங்கெட வரும் செயல்களைச் செய்தல் முறையற்றது என்பதை,

"இன்றியமையாச் சிறப்பினராயினும்
குன்ற வருப விடல்" என வள்ளுவர் கூறுகிறார். "மானம் இழந்த பின் வாழாமை முன் இனிதே" என்ற குறிக்கோளுடன் வாழ்ந்தனர் தமிழர். தமிழரின் மானத்தின் மாண்பிற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவன் சேரமான் பெருஞ்சேரலாதன் என்ற மாட்சிமை மிக்க மன்னன். ஒரு முறை வெண்ணி என்ற இடத்தில் சோழன் கரிகால் வளவனோடு போர் புரிந்தான். சோழன் செலுத்திய ஒரு அம்பு சேரமான் மார்பிற்பட்டு முதுகின் புறத்தே ஊடுருவிச் சென்றதால் சேரனது முதுகில் பெரும்புண் உண்டானது. போர்வீரர் தமது மார்பிலும் முகத்திலும் பெற்ற புண்ணையே விழுப்புண் எனக் கொண்டு மகிழ்ந்தனர். எனவே சேரமான் தான் முதுகில் புண்பெற்றமைக்கு நாணங் கொண்டு வடக்கிருந்து உயிர் துறந்தான்.

பெருமிதத்துடன் வாழ விரும்பும் ஒருவன் சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்தல் கூடாது. ஒருவன் தன் தாய் வறுமையினால் பசித்து வருந்தும் பெரிய துன்பத்தைக் கண்டாலும்கூட அவன் அத்துன்பத்தைப் போக்குவதற்குச் சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்யக்கூடாது என்பதை விளக்க வந்த வள்ளுவர்,

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"

எனப் பாடியுள்ளார். எனவே நமது செயல்கள் தூய்மை உடையனவாக விளங்குதல் வேண்டும் என்பதை தமிழர் வாழ்க்கை சுட்டிக் காட்டுகின்றது.

கொடையால் வருகின்ற பெருமிதத்தை ஆராய்ந்தால், சான்றோர் தமக்கென வாழாது பிறருக்குரியராக விளங்கினர் என்பது வரலாறு. இதனையே வள்ளுவரும்,

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

எனக் கூறிப் போந்தார். சிபிச்சக்கரவர்த்தி என்ற சோழமன்னன் புறாவிற்கு அடைக்கலம் கொடுப்பதற்குத் தன் தசையரிந்து தராசில் வைத்து, எடைக்கு ஈடாகாமையில் தானே தராசுத் தட்டில் ஏறினான் என்பது பாரதத்தில் கூறப்படும் செய்தியாகும். விருத்திரா சூரனை வெல்லும்பொருட்டு ததீசி முனிவர் தமது

முதுகு எலும்பை இந்திரனுக்குக் கொடுத்தார். தன் மரணத்திற்கும் அஞ்சாது, தனது கவச குண்டலங்களை அந்தண வடிவமுடன் வந்து இரந்து நின்ற இந்திரனுக்குக் கொடுத்துக் கர்ணன் போன்றாப் புகழ் பெற்றான்.


நாட்டுத் தலைவனது சிறப்பைக் கூறும்போது, "நினது குடையின் கீழ் வாழும் மக்கள், சோறு சமைக்கும் நெருப்புடனே கதிரவனின் வெயில் வெம்மையைத் தவிர வேறு வெம்மையை அறியார். வானவில்லைத் தவிர பகைவருடைய கொடிய வில்லைப் பார்த்தறியார். உழவுத் தொழிலுக்குரிய கலப்பை என்னும் படையைத்தவிர வேறு படைக்கலங்களைக் கண்டறியார். நின்னாட்டில் கருவுற்ற மகளிர் வேட்கையினால் விரும்பி உண்பதல்லாது பகைவரால் உண்ணப்படாத மண்ணினை உடையாய் நீ" என போரின்றி அமைதியாக மக்கள் வாழ்வதனை நன்குணர்ந்த குறுங்கோழியூர்கிழார், சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையின் ஆட்சியினைப் பாராட்டுகிறார்.

செய்ந்நன்றி மறவாமை மானமுடைய தமிழர்களது பண்புகளில் தலை சிறந்தது. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் தம்மை ஆக்கியவருக்காக இன்னுயிரையும் தந்து செஞ்சோற்றுக்கடன் தீர்த்துக் கொள்ளும் மனத்திண்மையே வீரமாகும். உலகோர் உவந்து ஏத்தத் தான் பெற்ற அருச்சுனனுக்காகக் குந்தி கர்ணனிடம் சென்று, "பாண்டவர் பால் வந்திடுக" என அருள் வேண்டி நிற்கின்றாள். "இன்னான் என அறியாப் பருவத்திலும் மன்னர் வணங்க முடி சூட்டியும் தன்னெச்சில் தான் உண்ணாத தன்மை வாய்ந்தவனாகிய துரியோதனன், தனது நண்பனது எச்சிலை அவனுடன் உண்டு உறவாடியமைக்காக வெஞ்சமரில் தன்னுயிரைக் கொடாது போகேன்" என்ற வீரவுரை பகர்கிறான் கர்ணன். இத்தகைய செய்ந்நன்றி மறவாப் பெருமிதம் தோன்றுவது பழந்தமிழர் வாழ்வியலிலே நன்கு புலனாகும்.

எனவே பண்டைத்தமிழர் கல்வி, தறுகண், புகழ், கொடை, போன்றவற்றால் பெருமித வாழ்க்கை வாழ்ந்தனர் என்பது தெளிவாகின்றது. நாமும் அவர்களின் வழியைப் பின்பற்றி பெருமித வாழ்க்கை நடத்திப் பொன்றாப் புகழ் பெறுவதுடன், தமிழர் வாழ்க்கை நெறிகளை கட்டிக் காப்பதில் முன்னின்று செயற்பட முற்பட வேண்டும்.

திருமதி. க. விஜிதா
(ஆசிரியர்)
தமிழ்த்துறை
யா/சென் ஜோசப்ஸ் வித்தியாலயம்.

# உன் வரலாற்று வானத்திலே யானும் ஒரு மின்னும் தாரகையோ...?



நாம் கண்ணால் காணமுடியாத தெய்வம் ஒன்றே ஒன்று. ஆனால், நாம் அன்றாட வாழ்க்கையில் கண்ணால் காணும் தெய்வங்கள் எண்ணில் அடங்கா. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்கள், அடுத்த நிலையில் குருக்கள், நல்லாசான்கள், அதிகாரிகளைக் குறிப்பிடலாம். இந்த வகையில், சின்ன வயது முதல் என்னை வளர்த்தெடுத்த முன்னாள் வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் எம். சிமியாம்பிள்ளை ஐயா அவர்களை முன்னிறுத்தலாம்.

நவாலியூர் சென்.பீற்றர்ஸ் பாடசாலையை முன்மாதிரிப் பாடசாலையாக ஆக்கி, சிறந்த அதிபர் என்னும் பெயரோடு செயற்பட்டுக் கொண்டிருந்த என்னை ஒரு தினம் ஐயா அவர்கள் அலுவலகத்துக்கழைத்து, "அல்வறெட், கொலம்பகம் றோ.க.பாடசாலை சரித்திரப் பிரசித்தி பெற்ற கத்தோலிக்கப்பாடசாலை தற்போது வீழ்ச்சியடைந்து விட்டது. எழுச்சி பெறச் செய்வதற்கு நீ தான் சரியான ஆள் இதோ, இடமாற்றக் கடிதம், சென்று பொறுப்பினை ஏற்றுக்கொள். யான் உதவியாக இருப்பேன்'' என்று அன்பாகக் கேட்டு மாற்றக்கடிதத்தை என் கைகளில் தந்தனுப்பினார். யானும் மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு கடிதத்தைப் பெற்றுக்கொண்டு சென்றேன். இது எனது பாடசாலை, பண்டிதர் யோசேப் ஐயா அவர்களின் தலைமையில் கொலம்பகம் புனித வளனார் சாதனா பாடசாலை என்ற பெயருடன், ஆசிரியபணிக்கான புகுமுகப் பரீட்சைக்கு (Entrance Exam) ஒரு கழகமாகவும் புனித வளனார் ஆசிரிய கலாசாலை மாணவர்களுக்கு ஒரு சிறந்த பயிற்சிக் களமாகவும் (Practicing School) விளங்கி வந்தது. அத்தோடு ஒழுக்கம், கல்வி, ஆன்மீகம், தேக சாதனை ஆகிய சகல துறைகளிலும் உச்சப்புகழ் பெற்றுத் திகழ்ந்திருந்தது இவ்வித்தியாலயம். 1958களில் பண்டிதர் யோசேப்பு ஐயா அவர்களின் தலைமையில் திருவாளர்கள் ஆசியப் பெருந்தகைகள் லூக்காஸ் மாஸ்டர், சின்னப்பு மாஸ்டர், பொனிப்பாஸ் மாஸ்டர், சில்லாலை அந்தோணிப்பிள்ளை மாஸ்டர், சங்கீத வித்வான் யேமஸ் (சங்கிலி மாஸ்டர்) போன்ற தெய்வப் பிறவிகளிடம் கல்வி பயிலக் கிடைத்த பாக்கியமே பெரும் பாக்கியம், பாஷையூர் அலோஸியஸ், யேசுரெத்தினம், கட்டைத்தம்பி அந்தோனிப்பிள்ளை, பவுடர் பேபிகள், செயோன், ஜோர்ஜ், நாவாந்துறையூர் யோசுதாஸன், மனுவேற்பிள்ளை, சந்தியோகு, அருளானந்தம், பீற்றர், போன்றோருடனும், ரெம்பிள்றோட், சூ.சிறில் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) நல்லூரடி பரமசிவம், அரியாலையூர் சு. மோசேஸ் போன்ற அருமை நண்பர்களுடன் மிகவும் பண்போடும், பாசத்தோடும், நட்போடும் கல்வி பயின்று களிப்போடு காலத்தைக் கழித்த சம்பவங்களை எல்லாம் அசைபோட்டுக்கொண்டு இந்தப் பாடசாலையில் அதிபராகப் பணியாற்றக் கிடைத்த பாக்கியத்திற்காக இறைவனுக்கு நன்றி கூறிப் பணியினைப் பொறுப்பேற்கும் நாளுக்காகக் காத்திருந்தேன். கூம்பும் பருவம் வரை கொக்கு ஒக்கக் காத்திருந்து பாடசாலையின் கவிநிலை, சூழ்நிலைகள் பற்றி அவதானித்து, அறிந்து கொண்டிருந்தேன்.

குருசைக் கண்ட "ட்றகுலாக்கள்" போல சில ஆசிரியர்கள் என் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். "பொல்லாத அதிபர் ஒருவன் வருகிறான் விட்டோமா பார்" என்று வரிந்து கட்டிக் கொண்டிருந்தார்கள். வருவது தனது நண்பன் அல்வறெட் என்பதை அறியாமல் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் கட்டைத்தம்பி அந்தோனிப்பிள்ளை கூட, என்னைப் பற்றிக் கன்னா பின்னா என்று எதை எல்லாமோ எழுதிக் கொண்டு கல்விப் பணிமனைக்குச் சென்று கொண்டிருந்தார். அப்போது தற்செயலாக வழியில் என்னைச்சந்திக்க நேரிட்டது, அதிபராக வருவது நான் தான் என்பதைத் தெரிந்து கொண்டதும் நனி மகிழ்வெய்தி, கையில் இருந்த கடிதத்தை வழியிலே கிழித்து எறிந்து விட்டு, "வா அண்ணே சீக்கிரம், வந்து கடமையைப் பொறுப்பேற்றுக் கொள்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

15.03.1983 இல் சில ஆசிரியப் பிரகிருதிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் கடமையை ஏற்றுக்கொண்டேன், பொல்லாத அதிபர் என்று முன்னரே அறிமுகப்படுத்தப்பட்டு விட்டதால் நல்ல ஆசிரியர்கள், ஆசிரியைகள் என்னை அருவெறுப்பாகப் பார்த்தார்கள். மாணவர்கள் பயந்தார்கள், மெல்லெனப் பாயுந் தண்ணீர் கல்லையும் ஊடுருவிப் பாயும் அல்லவா? சகித்துக் கொண்டு பொறுமையாக நடந்து கொண்டேன். உதவியதிபர் திரு. பெர்ணான்டோ அவர்கள் சிரேஷ்ட உதவி ஆசிரியை குணமணி அம்மையார் போன்றோர் எனக்குத் தைரியமூட்டிக் கொண்டே இருந்தார்கள்.

பிரச்சினைகளை இனங்காண்கின்றேன்.

1. **மனிதவளப் பிரச்சினை**
   ஆசிரியர்கள், மாணவர்கள்

2. **பௌதீகவளப் பிரச்சினை**
   கட்டிடம், தளபாடம், குடிநீர், பாடசாலைச் சுற்றாடல்

3. **முகாமைத்துவப் பிரச்சினை**

4. **ஒழுக்கம், ஒழுங்குப் பிரச்சினை**
   மாணவர்கள், ஆசிரியர்கள்

5. **கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுக் குறைபாடுகள்**

6. **சமூகத் தொடர்பு அற்ற நிலைமை**

இனங்காணப்பட்ட இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதே எனக்குப் பெருஞ்சவாலாக இருந்தது.

## 1) மனித வளப் பிரச்சினையை முகாமைத்துவம் செய்தல்

என்னைக் கற்பித்த சிரேஷ்ட ஆசிரியர் ஒருவர் தம்முடன் சிலரைச் சேர்த்து வைத்துக் கொண்டு சில சேட்டைகள் புரிந்து கொண்டிருந்தார். இவர்களை வழிக்குக் கொண்டு வருவதென்பது முடியாத காரியமாக இருந்தது. நல்ல ஆசிரிய, ஆசிரியைகள், பலர் நன்கு ஒத்துழைப்புத் தந்து கொண்டிருந்தனர். தங்கள் தாளங்களுக்கெல்லாம் என்னை ஆட வைக்க முடியாது என்பதை அறிந்தவர்கள் தாமாகவே மாற்றலாகிச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டது. இவர்களின் இடங்களுக் கெல்லாம் தகைமை சான்ற சிறந்த ஆசிரியர், ஆசிரியைகளைத் தந்து உதவினார் கல்விப்பணிப்பாளர்.

மாணவர்களைப் பொறுத்தளவில் பாடசாலையில் இருந்து விலகிச் சென்றவர்கள் (School Leavers), இடைவிலகுவோர் தொகையும் (Drop Outs) அதிகரித்திருந்தது. இத்தகைய மாணவர்களை மீண்டும் பாடசாலைக்கல்வியில் ஈடுபாடு கொள்ளச் செய்ய எனது ஆசிரியர்கள் மிகவும் பாடுபட்டார்கள். இடை விலகிய மாணவர்களுள் தற்போது யாழ் மாநகர சபையின் எதிர்க்கட்சித்தலைவரும், பிரபல சட்டத்தரணியுமான திரு. முடியப்பு றெமீடியஸ் அவர்கள், யாழ் மக்கள் வங்கியில் உதவி முகாமையாளர் திரு. பிரான்சிஸ் அவர்கள் ஆகியோரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். அப்படி விலகிச் சென்றவர்களை விட்டிருந்தால் இன்று இத்தகைய பெருமை மிக்கவர்களை இழந்திருப்போம் அல்லவா?

## 2) பௌதீக வளப்பிரச்சினையும் முகாமைத்துவமும்

1. பாடசாலை வளவு : வேலிகள் எதுவுமற்ற மூளி வளவுக்குள் 100 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த கட்டடம் பிரதான மண்டபமாக அமைந்திருந்தது. வளவின் வட எல்லையில் 100'x20' கட்டிடமும், தெற்கே 60'x20' கட்டிடமும் ஆரம்ப வகுப்புக்களுக்கானவையாக இருந்தன. அலுவலக அறை என்று ஒன்று இருக்கவில்லை.

புதிய கட்டடம்: 1983 ஜுன் மாத நடுப்பகுதியில் பெரிய அளவில் விளையாட்டுப் போட்டியை ஒரு வைபவமாக நடாத்தி வைத்தோம். பெற்றோரும் பெரும் ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்கள். பிரமத அதிதியாக கல்விப்பணிப்பாளர் S.சிமியாம்பிள்ளை அவர்களும், சிறப்பு அதிதியாக அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிவேலு லோகேஸ்வரன் அவர்களும் கலந்து கொண்டார்கள். அதன் பயனாக முதன் முதலாக 50'x20' மாடிக்கட்டிடம் ஒன்றுக்கான நிதி கிடைத்தது. கீழ்த்தளத்தில் அலுவலகமும், ஆசிரியர் ஓய்வு அறையும் மேற்றளத்தில் இரு வகுப்பறைகளும் அமைந்தன. தொடர்ந்து கல்வியாளர் எனது நண்பர் M.M மன்சூர் அவர்களின் விசேட சிபார்சின் பேரில் இணைந்த 70'x20' மாடிக்கட்டிடத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டு அக்கட்டிடமும் அழகாக அமைக்கப்பட்டு, மேற்றளம் திரு.ஞானப்பிரகாசம் அதிபராக இருந்த காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

2. **தளபாடங்கள்:** அதிபருக்குக் கூட வலப்பக்கச்சட்டம் உடைந்த, பின்னல் கிழிந்த மிகப்பழைய நாற்காலி, பொருத்தமற்ற மேசை, இப்படி என்றால் மாணவர்கள், ஆசிரியர்கள் தளபாட நிலைமை எப்படியாய் இருந்திருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம். எனது நாற்காலியின் அவல நிலையைப் புரிந்து கொண்ட (பெற்றார் ஒருவர்) கொழும்புத்துறையைச் சேர்ந்த திரு.ரெட்ணசிங்கம் என்ற தச்சுத் தொழிலாளி சிறந்த நாற்காலி ஒன்றைச் செய்து தந்திருந்தார். இது இன்று அடுத்த வளவில் சூசையப்பர் கோவிலின் பீடத்தின் முன்னால் இருக்கிறது என்று அறிந்து பெருமை அடைகின்றேன். அப்போது இருந்த கல்விக்கணக்காளர் அழகிய ஆபிஸ் மேசை ஒன்றைத் தந்து உதவினார். கல்விப்பணிப்பாளர் மூலம் வந்து சேர்ந்த தளபாடங்கள் பெற்றோர், மற்றோர் மூலம் கிடைத்த தளபாடங்கள். இவை மூலம் தளபாடப்பற்றாக்குறை பூர்த்தி செய்யப்பட்டது.

3. **பாடசாலைப் பாதுகாப்புச் சுற்றுமதில் :** பாடசாலைச் சுற்றுமதிலை உயர்த்திக் கட்டியமைக்காக சென்.ஜோண்ஸ் கல்லூரி அதிபர். கௌரவ ஆனந்தராசா அவர்கள் அகால மரணத்தை அடைய வேண்டிய துர்ப்பாக்கியமான சந்தர்ப்பத்திலேயே நாமும் சுற்று மதில் அமைக்க திட்டமிட்டோம். செயற்படுத்தினோம் 538 அடி நீளம், 6 அடி உயரமான சுற்றுமதில் கட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 'எஸ்ரிமேற்' தொகை அண்ணளவாக இரண்டு இலட்சம் ரூபா. அப்போதைய இந்தியன் ஆமியின் அட்டகாசச் சூழ்நிலையில், எங்கள் பாடசாலையில் இடம் பெயர்ந்து வருந்திருந்த கரையூர் மக்கள் கூடக் காசுகள் தந்து உதவினர். பாஷையூர் பெருங்குடி மக்கள், கொழும்புத்துறை செபமாலை மாதா கோவில் பங்கைச் சேர்ந்த மக்கள், எனது நண்பர்கள் என்று பலரும் செய்த பேருதவியோடு ஓரளவு நிதி சேகரிக்கப்பட்டது. கொழுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது, வீடு வீடாகச் சென்று நிதி சேகரித்து உதவிய திருமதி தங்கநாயகம், திருமதி. அன்ரனி, திருமதி குணமணி, செல்வி சுவாம்பிள்ளை ஆகிய ஆசிரியைகளை மறக்கவும் முடியுமோ? குறை நிதியைப் பற்றிப் பொருட்படுத்தாது முழு வேலையையும் முடித்துத்தந்தவர் ஈச்சமோட்டையைச் சேர்ந்த கட்டிட ஒப்பந்தக்காரர் [illegible] தியாகராசா என்பவர். வளன்புர ஒழுங்கை திரும்பும் மூலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டு, அப்போதைய குருமுதல்வர் வண. செல்வராசா அடிகளாரால் ஆசீர்வதிக்கப்பட்ட புனித சூசையப்பர் திருச்சுரூபமும் [illegible] தியாகராசா அவர்களின் அன்பளிப்போடு கூடியதே.

பாடசாலையின் முன்பக்கப் பெரிய கேற் பாண்டியன்தாழ்வைச் சேர்ந்த, சிறந்த செப்புத் தொழிலாளி (பெயர் நினைவில் இல்லை, எனது நண்பர்). அவர்களின் உபயம் ஆகும். பாடசாலைத் தாழ்வாரத்தின் கீழ் மழையில் நனைந்து, வெயிலில் உலர்ந்து, தேடுவார் அற்றுக் கிடந்த அர்ச.சூசையப்பரை பாடசாலை முகப்பிற்குள் மிகப்பௌவியமாகக் கொலு வீற்றிருக்கச் செய்தவரும் மேற்கூறப்பட்ட அன்பரே ஆவார்.

**4. குடிநீர்ப்பிரச்சனைக்குத் தீர்வு:** தவித்து வருவோருக்குத் தாகத்துக்குத் தண்ணீர் வழங்குவது புண்ணியங்கோடி, இந்து சமயத்தவர் இதனை ஒரு சமய நெறியாகவே கடைப்பிடித்துத் தண்ணீர்ப்பந்தல் அமைத்து இந்தப் புண்ணியதானத்தை செய்து வருகின்றனர். 'எங்கட சனத்துக்கு இதில் அக்கறை கிடையாது' என்பதற்கு இந்தப் பாடசாலையே சான்று கூறியது. உச்சி வெய்யிலைப் பாராது எங்கள் பிள்ளைகள் வளன்புரம் சென்று, வாளிகளில் தண்ணீர் எடுத்து, தலையில் வைத்துச் சுமந்து, குடித்துக்கொண்டும், குளித்துக் கொண்டும் குறைவாளித் தண்ணீரைத் தம் சகோதர மாணவர்களுக்குத் தானம் பண்ணி வந்த நிலைமை என் நெஞ்சை நெருடியது. வண பிதா ஒருவர் வளவுக்குள் குறித்துக் காட்டிய இடத்தில், எனது சொந்தப்பணம் 17ஆயிரம் ரூபா செலவில் கிணறு ஒன்றைத் தோண்டி, என்னைப் பெற்ற அம்மாத்தெய்வத்தின் பெயரால் என் அருமைப் பிள்ளைகளின் தாக சாந்திக்கு வழியமைத்து வைத்தேன். இரு வருடங்களுக்கு முன் 10 ஆயிரம் ரூபா அன்பளிப்புச் செய்து, அப்போதைய அதிபர் திரு.ஞானப்பிரகாசம் அவர்களை, குடிப்பதற்கு குழாய் இணைப்பினை மேற்கொள்ளும் படி கேட்டிருந்தேன்.

**5. பூம் பந்தல்:** பாரி மன்னன் தேரிற் செல்லும் போது வழியோரம் முல்லைக் கொடி ஒன்று நிலத்தில் படர்ந்து, துவண்டுபோய்க் கிடப்பதைப் பார்த்துப் பதைபதைத்து ஏறி வந்த தேரையே முல்லைக்கு ஈந்து விட்டு நடந்து சென்றானாம். எங்கள் பாடசாலையின் ஒரு ஓரத்தில் இனந்தெரியாத இளங்கொடி ஒன்று நிலத்தில் படர்ந்து மலர்ந்து, துவண்டு கிடப்பதைக் கண்டு, வளன்புரத்தைச் சேர்ந்த ஒருகால் ஊனமுற்ற எனது மாணவப்பிள்ளை சதீஸ், என்னை அழைத்து கண்ணீர் மல்கி, இந்தக்கோலத்தை எனக்குக் காட்டி, இந்தக் கொடிக்கு ஒருவழி செய்யும் படி கேட்டுக்கொண்டான். மறுநாள் எங்கள் பாடசாலையின் முன்தெருவால் படுகுஷியாகச் சென்ற பாஷையூர் வாலிபர்களை மறித்து இந்த நிலைமை பற்றி எடுத்துரைத்தேன். உடனடியாகவே ஏற்பாடு செய்தார்கள். (இந்த உத்தம வாலிபர்கள்) பாரியின் தேர் என்ன, பத்துமடங்கு உயரமான பந்தர் அமைக்கப்பட்டது. படர்ந்திருந்த கொடியுடன், கொழும்பு மாநகரில் இருந்து கொண்டு வரப்பட்டு தழைக்கச் செய்த கொடிகளும் வளர்ந்து படர்ந்து, துவண்டு, தொங்கி, அசைந்து ஆடி ரம்மியமாக மனதைக்கவர்ந்த காட்சி எங்கள் சிறார்களை மாத்திரம் அன்று, தெருவால் போகும் மக்களையும் போகாது இழுத்து நின்றது. இப்போது அந்தப் பந்தலே இல்லையாம், பதறுகிறது நெஞ்சம். பௌதீக வளங்கள் யாவற்றையும் வெகுபக்குவமாக காப்பாற்றித்தந்த அலோஸியஸ் என்ற காவலாளியையும் நினைவு கூராவிடின் பெருங்குறையாகும். கால் ஒன்று ஊனமென்றாலும், கடமையில் எதிர்த்து நின்று அடி வாங்கியும் அடங்காத தமிழனாக நின்று காவல் பார்த்தவர்.

"மெத்தக்கவனமாய் கூலியும் வாங்காமல் காவல் புரிபவன் வேறுயார்?"

3. முகாமைத்துவம்

ஒழுக்கம், ஒழுங்குப்பிரச்சினை

ஒரு கல்வி நிறுவனத்தின் மூலம் பிள்ளைகளிடம் அறிவு, திறன், விருத்தியோடு மனப்பாங்கிலும் நல்ல மாற்றங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும். இதற்கு

I) மையக் கலைத்திட்டம் - CORE CURRCULAM

II) இணை கலைத்திட்டம் - CO-CURRICULAM

III) மறை கலைத்திட்டம் - HIDDEN CURRICULAM

என்ற மூன்று வகை கலைத்திட்டங்களையும் கருவியாகக் கையாளுகின்றோம். பிள்ளைகள் கண்டு, கேட்டு, அனுபவித்து வரும் திறன்கள், பண்புகள், பழக்க வழக்கங்கள் யாவும் மறைகலைத்திட்டத்தின் பாற்பட்டு நல்ல ஆளுமையை உருவாக்கி விடும். இவர்கள் சமூகத்திற்கு சிறந்த நற்பிரஜைகள் ஆகிவிடுவார்கள். நற்பிரஜைகள் ஆக்காவிட்டாலும் பரவாயில்லை அவர்களைத் துர்ப்பிரஜைகளாக ஆக்காமல் இருந்தால் அதுவே போதுமானது அல்லவா? ஆனால் இங்கே சிறந்த நல்ல ஆசிரியர்களுக்கும் சில குழப்பக்காரர்களான சிரேஷ்ட ஆசிரியர்கள் இடைஞ்சலாக இருந்தார்கள். கடமையைத் தாமும் செய்வதில்லை, ஏனையவரைச் செய்ய விடுவதும் இல்லை. பாடசாலை நேரத்தில் மாமர நிழலில் அமர்ந்து மது அருந்துபவர்களும் இருந்தார்கள். வியாபாரத்துக்குச் செல்பவர்களும் இருந்தார்கள். காதலித்துத் திருமணம் செய்து கொண்ட ஒரு ஆசிரியத் தம்பதியினர் பாடசாலைக்குள்ளும் மாணவர் முன்னிலையிலும் தம்மை மறந்து சல்லாபம் செய்து கொண்டிருப்பார்கள். தாங்கள் நினைத்த போது வந்து, நினைத்த நேரம் போவார்கள். வேலைத்திட்டமும் கிடையாது. பாடத்திட்டமும் கிடையாது. படிப்பித்தால்லவோ இவையெல்லாம் தேவை. இந்த நிலைமையில் மாணவர் வரவை எதிர்பார்க்க முடியுமா? ஒழுக்கம், ஒழுங்கை எதிர்பார்க்கத்தான் முடியுமா? வேறு அதிபராயிருந்தால் 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி' என்று ஓடியிருப்பார். நான் இருந்தேன், இவர்கள் ஓடிச் சேர்ந்து விட்டார்கள். இருந்த நல்லாசிரியர்களோடு இன்னும் பல நல்ல ஆசிரியர், ஆசிரியைகளைச் சிமியாம்பிள்ளை ஐயா அவர்கள் தந்து உதவினார். பின்னர் உப அதிபர். திரு.S.E. பெர்னான்டோ அவர்களின் உதவியுடன் புத்தூக்கம் பெற்று, புதுப் பொலிவுடன் பாடசாலையை மிளிரச் செய்தோம். நேரத்திற்கு பாடசாலைக்கு வருவதென்பது பழக்கதோஷம் காரணமாக சில ஆசிரியர்களுக்கும், பல மாணவர்களுக்கும் கஷ்டமான காரியமாகவே இருந்தது. காலை 7.45 மணிக்குப் பாடசாலை ஆரம்பமாகும். 7.50க் கெல்லாம் கேற் பூட்டப்படும். ஆசிரியர்களாயிருந்தாலும் சரி மாணவர்களாயிருந்தாலும் சரி திரும்பிப் போய் விடவேண்டியதுதான். ஆசிரியர்களுக்கு அந்த நாள் அவர்களது சொந்த லீவு, மாணவர்களுக்கு மறு நாள் தண்டனை. ஆரம்பத்தில் குழப்ப நிலையைப் போக்கி, ஒழுக்கம், ஒழுங்கை நிலை நிறுத்தவதற்கு நிர்வாகத்துக்குச் சற்று சர்வாதிகாரப் போக்கும் தேவைப்பட்டது. ஒரு ஆசிரியை செல்வி.சுவாம்பிள்ளை என்பவர் ஒவ்வொரு நாளும் பிந்தி வந்து திரும்பிச் செல்பவராகவே இருந்தார். சுகவீனம் காரணம் என்று பின்னர் தெரிந்து கொண்டேன் அவர் பெயரில் 300ரூபா சைக்கிள் கடன் எடுத்து, மிகுதிக் காசை நானே போட்டு, ஒரு லேடீஸ் சைக்கிள் வாங்கி நானும்

மாணவர்களுமாகச் சேர்ந்து பாடசாலை வளவுக்குள்ளேயே சைக்கிள் ஓடப்பழக்கி வைத்தோம். பின்னர் தொடர்ந்து பாடசாலைக்கு மிகவும் நேரத்துக்கு வந்து மேலதிக வேலைகளையும் செய்து உதவி வந்தார். அந்த உத்தமச் சகோதரி இப்போது எங்கிருக்கிறாரோ தெரியவில்லை.

இன்றும் என் மனதை உருக்கிடும் ஒரு சம்பவம். 10ஆந் தரத்தில் விஞ்ஞானம் கற்பிக்கும் ஒரு ஆசிரியர் டியூஸனில் பேர் பெற்றவர். பிள்ளைகளின் பயிற்சிக்கொப்பிகளைச் சுமந்து கொண்டு போயும் வந்தும் வகுப்பிலே வைத்துத்திருத்திக் கொண்டு இருப்பார். இவரன்றோ நல்ல ஆசிரியர். பிள்ளைகள் மேல் என்னே அக்கறை! என்று இவரைப் பல நாள் பாராட்டியதும் உண்டு. ஒரு நாள் மழை பெய்து கொண்டிருந்தது. இவரின் வகுப்பறையில் ஏதோ அசம்பாவிதம், ஆரவாரம், நான் விழுந்தடித்து ஓடிப்போய் விசாரித்தேன். பிறிம்ஸ்ரன் என்னும் பெயருடைய சம்மனசுக்குஞ்சு போன்ற பிஞ்சுப் பாலகனைக் கன்னத்தில் அறைந்து, அடித்தது மாததிரமன்றி, ஆவேசத்துடன் அவரைத் தூக்கி அரைச்சுவருக்கு மேலாக வெளியிலே மழை வெள்ளத்திலே வீசியும் விட்டார் அந்த விஞ்ஞான ஆசிரியர். விசாரித்துப்பார்த்தால் விடயம் அன்றுதான் அம்பலத்துக்கு வந்தது. இந்த ஆசிரியர் இவ்வளவு நாளும் திருத்தியது எங்கள் பாடசாலைப் பிள்ளைகளின் பயிற்சிக் கொப்பிகள் அல்ல டியூசனில் இவரிடம் படிக்கும் பிள்ளைகளுடையது. இது பற்றித்தான் கேட்டு விட்டான் பிள்ளை பிறிம்ஸ்ரன். பிறிம்ஸ்ரன் வீட்டிலே செல்லப்பிள்ளை, பாடசாலையில் நல்ல பிள்ளை இந்தச் சம்பவத்தின் பின் வெறுப்படைந்து, வேறுபாதையிற் சென்று, மண் மீட்புக்காய்த் தன்னுயிரை ஈந்து, வீரமரணம் அடைந்து விட்டார் என்று அறிந்தேன். அப்பாலனை நினைத்து இன்றும் நெஞ்சம் வேகின்றேன்.

## 5. கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

உதவி அதிபர் திரு. S. E பொ்ணாண்டோ அவர்கள் பாஷையூரைச் சேர்ந்தவர். சிரேட்ட ஆங்கில ஆசிரியர். இவ்வூர்ப்பிள்ளைகளின் முன்னேற்றத்தில் மிகவும் கரிசனை உள்ளவர். எனவே கற்றல் கற்பித்தற் செயற்பாடு முழுவதையும் மேற்பார்வை செய்யும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. திருமதி. குணமணி, திருமதி. றெஜீனா, திருமதி. இராஜவரோதயம், திருமதி. தங்கநாயகம், திருமதி. அன்ரனி, செல்வி. சுவாம்பிள்ளை போன்ற சிறந்த ஆசிரியர்களும், திரு. பீற்றர், திரு. இளங்கோ, திரு. கிறிஸ்ரி, திரு. கிறிஸ்தோப்பர், திரு. அம்புறோஸ், திரு.அடைக்கலம் போன்ற ஆசிரியர்களும், விலையேறப்பெற்ற முத்தான ஆசிரிய சகோதரர்கள் பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து ஊனினை உருக்கி உள்ளொளி பரப்பி உவப்பிலா ஆனந்தமாய் அறிவுத் தேனினைச் சொரிந்து ஊட்டிய தெய்வங்கள். இவர்களின் ஊக்கத்தாலும், உழைப்பாலும் எங்கள் பாடசாலைக்கல்வியில் ஒழுக்கத்தில், ஆன்மீகத்தில், கலைகளில் நிலை உயர்ந்து நின்று புகழ்பரப்பியது.

கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர் மிகவும கண்ணியமானவர். பிள்ளைகளை நேசித்துக் கற்பிப்பார். ஆனால் O/L பரீட்சையில் பிள்ளைகள் கணித பாடத்தில் சித்தி பெறும் விகிதம் குறைவாக இருந்தது. இக்குறையினை நிவிர்த்தி செய்வதற்கு ஒரு வழியினைத் தேடி வைத்தேன்.

அப்போது கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் கணித பாடத்தைச் சிறப்பாகக் கற்பித்துக் கொண்டிருந்தவர் எனது ஆப்த நண்பர் திரு. எம். சுந்தரம் மாஸ்டர் ஆவார். அவரிடம் உதவி பெற்று இரவு நேரங்களில் எங்கள் பிள்ளைகளுக்குக் கணிதபாடத்தை நன்கு கற்பிக்க வைத்தேன். காசு பணம் வாங்காமல் இந்த ஆசிரியர் பெருந்தகை சுந்தரம் மாஸ்டர் செய்த உதவி கல்மேல் எழுத்திற்கு நிகர். இவரிடம் படித்து இன்று உயர்ந்து நிற்பவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் பிரபல சட்டத்தரணி K. றெமீடியஸ் வங்கியாளர் பிரான்சீஸ், எம். ஏ. பட்டதாரி எல்விஸ் (அவுஸ்ரேலியா) ஆகியோர்.

6. சமூகத்தொடர்பு

ஒரு கல்வி நிறுவனத்தின் முன்னேற்றத்துக்குச் சமூகத் தொடர்பு, சமூக உள்ளீர்ப்பு, சமூகப் பங்களிப்பு மிகவும் அவசியமாகும்.

1. பெற்றோர் 2. அயலார்
3. சான்றோர் 4. சமய நிறுவனங்கள்
5. அரச நிறுவனங்கள் 6. அரச சார்பற்ற நிறுவனங்கள்

போன்ற அனைத்துச் சமூக உறுப்புக்களுடனும் அன்றாடம் தொடர்புகளை வைத்துக் கொள்ளல் வேண்டும். இவற்றை விட, நமது பாடசாலையோடு தொடர்புபட்ட கல்வி நிர்வாகத்துறையினரோடும் அன்றாடத் தொடர்புகளை வைத்துக் கொள்ளல் வேண்டும். பெற்றோர் தொடர்பும் பங்களிப்பும் மிக முக்கியமாகும். யான் பாடசாலை அதிபராகப் பதவியேற்கும் வரைக்கும் பெற்றோருக்கும் பாடசாலைக்கும் தொடர்பே இல்லாமல் இருந்தது. ஏசுதற்கும் வருவார்கள், ஏற்றும் கொள்வோம். பேசுவதற்கும் வருவார்கள், கலந்துரையாடுவோம். உதவுதற்கும் வருவார்கள் ஒன்றிணைவோம். பாடசாலை அபிவிருத்திக் கூட்டங்களுக்கும் அழைப்பு விடுத்தால் எத்தகைய கூட்டமாயினும் ஏகப்பட்ட பெற்றோர் வந்து கூடி விடுவார்கள். தந்தையர்கள் தொழில் நிமித்தம் சென்றாலும் பாஷையூர்த் தாய்க்குலம் வந்து சேர்ந்து பக்குவமாய்க் கலந்துரையாடிச் செல்லும்பாங்கு சொல்லுந்தரமன்று.

வைபவங்கள் விழாக்கள் நடைபெற்றால் பாடசாலை வளவே நிறைந்துவிடும் அளவுக்குத் திரண்டு விடும் பெற்றோர் கூட்டம். அதிதிகள் கூட அசந்துவிடுவார்கள். இவ்வாறான பாஷையூர் மக்களின் இத்தகைய பக்குவமான பங்களிப்பே இப்பாடசாலையின் பன்முகப்பட்ட வளர்ச்சிக்கும் காரணமாக இருந்தது.

“உங்கள் பாடசாலை ஒரு சிறந்த குடும்பமாகத் திகழ்கின்றது. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மாத்திரமன்று. இங்கு குழுமியிருக்கும் பெற்றோரும்

இக்குடும்ப அங்கத்தவர்களே என்பதை நாம் தெரிந்து வைத்திருக்கின்றோம். இந்தச் சூழல் நிலையைக் குழப்புவதற்குச் செயற்படும் எந்த ஒரு ஆசிரியரானாலும் இந்தப் பாடசாலையில் தொடர்ந்திருக்க மாட்டார்" என்று எங்கள் பாடசாலை வைபவம் ஒன்றுக்குப் பிரதம அதிதியாக வருகை தந்திருந்த முன்னாள் யாழ்ப்பாணக் கல்விப்பணிப்பாளர் அமரர் சபாநாயகம் ஐயா அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். இத்தகைய மிக்கச் சமூக உறவுடன் எங்கள் பாடசாலை பெருமையுடன் விளங்கியது.

ஒரு அதிபர் தனது பாடசாலையில் அன்றாடம் அவதானிக்க வேண்டிய வெளியக மேற்பார்வையில் அடங்க வேண்டிய முக்கிய விடயங்கள் இரண்டு.

1. தாகசாந்திக்காகப் பிள்ளைகளுக்குச் சுத்தமான குடிநீர் விநியோகம்
2. மலசலகூடங்களின் புனிதம்

எங்கள் பாடசாலைக்கு சுத்திகரிப்பாளர் இல்லை. கூலி கொடுத்துப் பிடிக்க முடியாது. யான் காலை 7.15க்கெல்லாம் பாடசாலைக்குப் போய்விடுவேன். பிள்ளைகள் சிலரும் வந்து விடுவார்கள். வேட்டியை மடித்துக்கட்டிக் கொண்டு விளக்குமாறும் வாளியிற் தண்ணீருங் கொண்டு கழிவறையைச் சுத்தமாக்கத் தொடங்கி விடுவேன். விடுவார்களா பிள்ளைகள்? உதவிக்கு வந்து விடுவார்கள். பின்பு பீற்றர் மாஸ்டர், இளங்கோ மாஸ்டர் ஆகியோரும் வந்து விடுவார்கள். எங்கள் குடும்ப விடயங்களை நாங்களே கவனிப்போம் குறைகூற இடமில்லையே.

ஒரு பாடசாலையில் பெண் ஆசிரியைகள் கூடிய தொகையில் இருந்தால் பிரச்சனைகளும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். அத்தோடு இடைவேளை நேரங்களில் தத்தம் குடுவைகளில் கொண்டு வந்திருக்கும் பானங்களை அருந்திக் கொண்டு கூடிப்பேசிக் குழப்பங்கள் உருவாகவும் காரணமாகி விடுவார்கள். இதற்கு ஒரு வழி கண்டேன். வண. பிதா. P. M இம்மானுவேல் அவர்கள் உதவியுடன் மின்சார இணைப்புப் பெற்றுக் கொள்ளப்பட்டது. ஏனைய உபகரணங்கள் பாத்திரங்களை என் சொந்த செலவில் வாங்கித் தேநீர் தயாரிப்பு வேலைகளை நாங்களே செய்து இடைவேளை நேரங்களில் ஒன்றாகவே தேநீர் அருந்தி வந்தோம். ஒற்றுமை, மகிழ்ச்சி, ஓய்வு எல்லாமே நல்லாய் நிலவியது.

ஒரு முறை பாடசாலையில் ஏதோ வைபவம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை திறப்புக் கோர்வை ஒன்று தவறிவிட்டது. தவறவிட்டது குயின்ரன் என்ற மாணவன் தான் என்று அவனை ஓங்கி அறைந்து விடடேன் ஆத்திரத்தில். அன்று இரவு எனது வசிப்பிடத்தில் அந்தத்திறப்புக் கோவை இருத்ததைக் கண்டேன். தவறை உணர்ந்து துடித்தேன். மறுநாட்காலைக் கூட்டத்தில் எல்லோர் முன்னிலையிலும் குயின்ரனை அழைத்து, அணைத்து, தவறுக்காக வருந்தி மன்னிப்புக் கோரினேன். பிழையென்றால் பெரியவரானாலும் சிறியவரிடம் மன்னிப்புக் கேட்பது தான் சரியானது.

15.03.1983 தொடக்கம் 14.05.1989 வரை இந்தப் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி வந்திருக்கின்றேன். மொத்தமாக 6 ஆண்டுகள் 3 மாதங்கள் அதிபர்

தரம் iii இல் பதவியேற்று அதிபர் தரம் ii, அதிபர் தரம் i, கொத்தணி அதிபர் தரம், கல்விப்பணிப்பாளர் தரம் போன்ற சகல பதவி உயர்வுகளும் இந்தப் பாடசாலையில் இருந்தே கிடைக்கப்பெற்றமை எனது பெரும் பாக்கியம். அர்ச். சூசையப்பரின் அருட்கொடை. இந்தப்பதவியுயர்வுகளும் புகழும், கிடைக்க என்னைப் பெற்ற என் அருமை அம்மாவின் அருட்கடாட்சமும், என்தாயைப்போல் அன்புகாட்டி, என்னைப் பெருமைப்படுத்தி, என் வளர்ச்சிக்கெல்லாம் மறை முகத்துணையாய் இருந்த என்னருமைச் சகோதரங்கள் பாஷையூர் மக்களின் பரிவும் பாசமுந்தான் என்பதை மிகப்பணிவுடனும் நன்றியுடனும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பெற்றோர் என்னை நம்பியே தம் பிள்ளைகளை ஒப்படைத்திருந்தார்கள். பெரிய பெரிய இயக்கக்காரர்கள் பிள்ளைகளை அழைத்துச் செல்ல வந்தாலும் கோழி தன் குஞ்சுகளைப் பாதுகாப்பது போல் பயப்படாமல் பாதுகாப்பேன். பாடசாலை நேரங்களில் வெளியில் யாரும் கூட்டிச் செல்ல விடமாட்டேன். பெற்றார் என் நிர்வாக விடயத்தில் தலையிடமாட்டார்கள். பிள்ளைகள் மீது என்ன நடவடிக்கை எடுத்தாலும் ஏன் என்று கேட்க மாட்டார்கள். நிதி விடயத்தில் கணக்கு வழக்குகளைப் பரிசோதித்துப்பார்க்க மாட்டார்கள். கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்துப் போடுவார்கள். பாஷையூர்த் தாய்குலம் என்மீது காட்டிய பரிவு தாயன்பையும் விஞ்சியது. நண்பன் கட்டைத்தம்பி அந்தோனிப்பிள்ளை குடும்பம் எனக்கு அளித்து வந்த மதிய போசனம் என் உடம்பில் இரத்தமாக ஊறி இன்றைக்கும் தெம்பை ஊட்டி நிற்கிறது. இத்தகைய என் உடன் பிறப்புகளுக்கு உயிர் உள்ளவரை ஏன் அதற்கு மேலும் நன்றியுள்ளவனாக இருக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

## நிற்க, நிறைவாக!

எனக்குப் பின் இப்பாடசாலைக்குத் திரு. பெனடிக் என்பவர் அதிபர் ஆனார். இவர்காலத்தில் கோவிலாக வணங்கப்பட வேண்டிய, நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்த, அதிவண தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் அழிக்கப்படக்கூடாது என்று கேட்டுக்கொள்ளப்பட்ட புனித மண்டபம் அடியோடு அழிக்கப்பட்டது கவலை அளிக்கின்றது. திரு. அருளானந்தம், திருமதி. சின்னத்துரை போன்றவர்களும் வந்தார்கள் இருந்தார்கள், சென்றார்கள். பிற்பாடு வந்திருந்த திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் பல அபிவிருத்திகளுக்குக் காரணமாகித் தடம் பதித்து புனிதர் சாள்ஸ் வித்தியாலயத்திற்குச் சென்றார்.

தற்போது அதிபராக கடமையேற்றுள்ள பாவிலு - வின்சென்ற் நடனசிகாமணி நமது மண்ணின் மைந்தன், நம்ம வீட்டுப்பிள்ளை, இப்பாடசாலையில் தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றி தற்போது பெருந் தொண்டுகள் ஆற்றவே வந்துள்ளார். தீர்க்கதரிசிகளுக்கு சொந்த நாட்டில் மதிப்பில்லை என்றார் யேசு. இக்கூற்றினை மாற்றி, இவரை வைத்து இவருக்கு ஆக்கமும், ஊக்கமும், ஒத்துழைப்பும் கொடுத்து, எமது பிள்ளைகளின் உயர்வுக்கு, எமது பாடசாலையின் உயர்வுக்கும், எமது சமூகத்தின் உயர்வுக்கும் உறுதுணை புரிவோமாக.

**திரு. ஜி. பீ. அல்வ்றெட்**
இப்பாடசாலையின் முன்னாள் அதிபர்,
ஓய்வுநிலைக் கல்விப்பணிப்பாளர்,
கல்வியமைச்சு

# ஆரம்பக்கல்வியும் பெற்றோரின் பங்களிப்பும்

ஆரம்பக் கல்விப் பருவம் என்பது பிள்ளை விருத்தியின் தீர்க்கமான ஒரு பருவமாகும். எதிர்காலத்தில் வெற்றிகரமான ஒரு பிரசையாகச் செயற்படுவதற்குத் தேவையான பல ஆற்றல்களின், எண்ணங்களின், இலக்குகளின் நோக்கங்களின் உருவாக்கமும் இசைவாக்கமும் இப் பருவத்திலேயே நிகழும். அதற்காக பிள்ளைகளின் வளர்ச்சிக்கு சாதகமாக, அதற்கு தூண்டுகோலாக அமையத்தக்க சூழலை உருவாக்குவது இன்றியமையாதது.

இச் சூழலை உருவாக்குவது யார்? பாடசாலையா? பெற்றோரா? என்பது கேள்விக் குறியாக எழும் என்பதில் ஐயம் இல்லை. இக் கேள்விக்குறி யாரிடம் எழுகின்றதோ அவர்தான் அச்சூழலை அமைப்பவராக அமைவார். அமைய வேண்டும். இவ்வினா இருபாலாரிடமும் கட்டாயமாக எழ வேண்டிய சிந்தனையாகும். நம் பிள்ளைகளை எவ்வாறு வளர்ப்பது? எப்படி வரவேண்டும் என்பது எல்லாப் பெற்றோரிடமும் எழுவது உண்மை. ஆனால் எப்படி எவ்வாறு எப்போது என்ற உணர்வு உள்ளூரத் தோன்றி அதற்கு விடை காண்பதற்காக முயற்சிப்பது பெற்றோரின் தலையாய கடமையாகும்.

ஒரு குழந்தையின் சகல வளர்ச்சிகளும் கருவிலேயே ஆரம்பமாகிறது. எனவேதான் அந்தத் தாய் நல்லவற்றைச் செய்ய வேண்டும் என்றும் நல்ல அறிவுள்ள நூல்களை கற்பதுடன் முத்தமிழை ரசிக்க வேண்டும். அது மட்டுமல்ல நல்ல போசாக்குள்ள உணவுகளை உட்கொள்வதில் ஆர்வம் காட்ட வேண்டும் என்பது எவ்வாறு தோன்றுகின்றது? ஏன் தோன்றுகிறது? என்று நோக்கும் போது உங்கள் குழந்தைகள் உடல், உள, ஆரோக்கியத்துடன் பிரசவிக்க வேண்டும் என்பதாகும். அக்குழந்தை பிரசவித்து வளர்ச்சி அடைந்து வரும் போது எப்போது எவ்வாறு வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். ஆனால் அதனை அவர்கள் தவற விட்டு விடுகிறார்கள். அதாவது அவனுடைய செயற்பாட்டுக்கு ஏற்ப தேவைகளை அறிந்து அத்தருணத்திற்கு ஏற்ப செயற்பாடுகளை அவனுடன் சேர்ந்து வழங்க தவறிவிடுகின்றார்கள். எனவே அவனுடைய திறன்களை அறிந்து செயற்பட்டால் அவனை ஒரு நல்ல அறிவுள்ளவனாக வளர்த்து விட முடியும்.

"எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல குழந்தைகள் தான் அவர் நல்லவர் ஆவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்ற கூற்று, ஒரு தாய் பாலூட்டுவது தொடக்கம் சோறூட்டும்வரை நல்ல எண்ணக்கருக்களையும், சிந்தனைகளையும் ஊட்டி வளர்க்க வேண்டும். எனவே ஒரு குழந்தை ஆரம்ப பாடசாலை வரும் பருவத்துக்கு முன் முழு நேரமும் குடும்பத்தாருடன், அதாவது கூடிய பங்கை தாயுடனேயே கழிக்கின்றது. எனவே அவர் நல்ல எண்ணக் கருவினை பிள்ளைக்கு, தமது குடும்பச் சூழல் தொடர்பாடல் மூலம் புகுத்த வேண்டும். அதாவது தமது குடும்பச் சூழலை கோயிலாக அமைத்துக் கொடுப்பது பெற்றோரின் முக்கிய கடமையாகும்.

இந்தப் பருவத்தில்தான் பிள்ளை தனது ஆரம்பக்கல்விக்கு அடி எடுத்து வைக்கின்றான். தமது அயற்சூழலுடன் இடையறாது தொடர்புற்று அனுபவங்களை பெறுவதற்கும், செயற்பாடுகளின் ஊடாக சூழலுடன் தொடர்பு கொள்வதற்கும், மகிழ்ச்சியையும் களிப்பையும் அனுபவிப்பதற்கும், தாம் செய்யும் வேலைகளினூடாக வெற்றி உணர்வை அனுபவிப்பதற்கும் பெற்றோர் ஆசிரியர்களினது அன்பு, கவனிப்பு, அரவணைப்பு, காப்பு என்பவற்றை எதிர்பார்க்கின்ற பருவமாகும். இத்தேவை ஏற்படும் போது தவறாது வழங்குவதற்கு ஆசிரியர்களுடன் பெற்றோர் இணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறான வாய்ப்புக்களை ஆசிரியருடன் பெற்றோர் இணைந்து ஏற்படுத்தினால் பிள்ளையின் விருத்தி உச்ச அளவில் நிகழ்வதற்கு தூண்டு கோலாக அமைவதில் ஐயம் இல்லை. பிள்ளை ஐந்து வயதை பூர்த்தி செய்யும் வேளை வீட்டுச் சூழலில் இருந்து வேறு ஒரு சூழலை எதிர் நோக்கப் போகின்றான் என்ற எண்ணம், சிந்தனை பெற்றோர் மனதில் எழுகின்றது. எழ வேண்டும். இச்சூழல் மாற்றத்துக்கு ஏற்ப தமது குழந்தைகள் மாற்றப்பட வேண்டும் என சிந்திக்கும் போது ஆசிரியருடனான பெற்றோர் தொடர்பாடல் மிக நெருக்கமானதாக அமைய வேண்டும்.

பிள்ளையின் சிந்தனை ஆற்றல், திறன், மனப்பாங்கு, எவ்வாறு வடிவம் கொடுக்கின்றது. அவனுடைய தேவை கருதி நாம் எவ்வாறான சேவை செய்ய வேண்டும் என்ற சிந்தனை எழுகின்ற பொழுது அதனை தனிமையான செயற்பாடாக செயற்படுத்த முடியாது. எனவே பெற்றோர் அவனை வழிநடத்தும் வழிப்படுத்தும் ஆசான்களுடனான ஒரு கூட்டு முயற்சியாக அமைந்து விட்டால் சொல்லில் வடிக்க முடியாத திறமையை அவனிடத்து காண முடியும்.

“ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா...” என்ற பாரதியாரின் பாட்டிற்கு அமைவாகவே குழந்தைப்பருவம் அமைகிறது. இப்பருவத்திலேயே தேடுதல், ஆராய்தல், சேகரித்தல், போன்ற ஊக்கம் வளர்ச்சி பெறுவதினால் அவனுடைய அறிவு, திறன், மனப்பாங்கை நல்ல மகிழ்ச்சி ஊட்டும் வகையில் அதாவது பிள்ளை உள்ளம், கள்ளம் இல்லாத அன்பு, பாசம், கருணை, அழகு என்பவற்றை கவரும் பருவம். ஆகையால் அவனுடைய தேவைகளை வேளைதவறாது பூர்த்தி செய்வதற்கு ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுடன் பெற்றோர் அயராது உழைக்க வேண்டும். எனவே அவற்றை எல்லாம் உற்று நோக்கும் போது ஒருவனுக்கு அடி அத்திவாரமாக அமைவது ஆரம்பக்கல்வி ஆகும். இதனை திறன்பட, திடகாத்திரமாக அமைப்பதற்கு பெற்றோரின் பங்களிப்பு ஆரம்பக்கல்வியின் வளர்ச்சிக்கு ஆணி வேராக அமைகின்றது.

த. பேரின்பம்
ஆசிரியர் (அதிபர் தரம் 3)
யா/சென் ஜோசப்ஸ்வித்தியாலயம்.

# நீங்களும் விஞ்ஞானியாகலாம்

உலகம் போற்றும் விஞ்ஞானிகள் பல்வேறு நாடுகளில் தோன்றி நமக்கு பல அரிய கண்டு பிடிப்புக்களையும் சாதனைகளையும் நிகழ்த்தி உள்ளார்கள். இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, நோர்வே, கிறீஸ் மற்றும் நம்நாட்டு விஞ்ஞானிகள் எனப் பல்வேறு நாடுகளில் விஞ்ஞானிகள் தோற்றம் பெற்று, பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளனர். இவ் விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாறுகளையும், அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையையும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைக் கண்டு பிடித்தமையையும் நோக்குவோமாயின் நாமும் விஞ்ஞானிகளாக மாறலாம் என்ற சிந்தனை தோன்றும்.

விஞ்ஞானிகளின் விடாமுயற்சி, சிந்திக்கும் ஆற்றல், செயற்பாட்டுத்திறன் போன்ற காரணிகளே அவர்கள் விஞ்ஞானியாவதற்கு தூண்டுகோலாய் அமைந்தது எனலாம். விஞ்ஞானிகளின் சிறுவயது வாழ்க்கை முறைகளைப் பார்க்கும் போது, சிறுவயதில் எப்படி இருந்தவர்கள் பின்னர் எவ்வாறாக மாறினார்கள் என நினைத்துப் பார்க்கும்போது நம் மனதிலும், நாம் ஏன் விஞ்ஞானியாக வர முடியாது என நினைக்கத் தோன்றும்.

முதலில் 1847ல் அமெரிக்காவில் பிறந்து மின்குமிழியைக் கண்டு பிடித்த தோமஸ் அல்வா எடிசனைப் பார்க்கும் போது, ஒரு நாள் இவன் தன்வீட்டின் ஓர் மூலையில் சென்று அமர்ந்து கொண்டான். வெகுநேரம் வரை அதே இடத்தில் இருப்பதை அவதானித்த தந்தையார் "நெடுநேரமாக அதே இடத்தில் உட்காந்திருக்கின்றாயே! என்ன தான் செய்து கொண்டிருக்கின்றாய்?" என்று கேட்டார். "நான் அடை காக்கிறேன்" என்றான் அந்தச் சிறுவன். கோழியானது தன்முட்டைகளை அடை காத்துக் குஞ்சு பொரிப்பது போல நானும் குஞ்சு பொரிக்க முயற்சி செய்கிறேன் என்றான். முட்டைகளை அடைகாக்க நீயென்ன கோழியா என்று வேடிக்கையுடனும் வேதனையுடனும் கேட்டார் அவன் தந்தை. சாதாரண கோழியால் செய்ய முடிகின்ற வேலையை என்னால் செய்ய முடியாதா? என்று திருப்பிக் கேட்டான். இப்படி இடக்கு மடக்குத்தனமான கேள்விகளைக் கேட்கின்ற இந்தச் சிறுவனுக்கு பள்ளிக்கூடத்தில் மக்கு என்று பெயர். இதனைப் போன்று பதில் சொல்ல முடியாத கேள்விகளை எல்லாம் கேட்டு விடுவான்.

இவனது தாயார் இவனுக்கு பல அறிவுரைகளைக் கூறுவார். இவன் எட்டு வயதிலேயே சம்பாதிக்கத் தொடங்கினான். தன் தோட்டத்தில் விளைந்த காய்கறிகளை விற்று, அதில் கிடைக்கின்ற பணத்தை தன் தாயிடம் கொடுத்தான். அதில் தனக்கு கிடைத்த மீதிப்பணத்தைக் கொண்டு விஞ்ஞானப் புத்தகங்களையும் அது சம்பந்தப்பட்ட கருவிகளையும் வாங்கி வைத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்தான்.

பின்னர் ஆராய்ச்சிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தினான். கையில் பணம் இல்லாமல் பட்டினியால் பரிதவித்த வேளையிலும் விடாமுயற்சியையும், ஊக்கத்தையும் கைவிடாது பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைக் கண்டு பிடித்தான். புகைவண்டியில் நாளிதழ் விற்கும் வேலையிலும் ஈடுபட்டு பின்னர் தந்தித் தொழிலில் நுழைந்தான். ஒரே கம்பியில் பல செய்திகளை அனுப்பும் புதுமையைக் கண்டுபிடித்தான். இவர் பல விஞ்ஞான சாதனைகளை உருவாக்கினான். எல்லாவற்றிற்கும் மேலாக இவர் கிராமபோன் என்ற கருவியை வழங்கினார். சினிமாவையும் கண்டுபிடித்தான். இவனை, 'சினிமாத் தொழிலின் தந்தை' என்று இவ்வுலகத்தார் போன்றுகின்றனர்.

அடுத்து வானவூர்தியைக் கண்டுபிடித்தவர்களான ரைட் சகோதரர்களின் வாழ்க்கையைப் பார்ப்போமாயின், ஒரு நாள் இவர்களின் தந்தை அதிசய பொம்மையுடன் வீட்டிற்குச் சென்று தன் புத்திரர்களிடம் பொம்மையைக் கொடுத்தார். ஒருவனுக்கு வயது பதினொன்று, மற்றவனுக்கு வயது ஏழு. அண்ணா அந்த பொம்மைக்கு சாவி கொடுத்தான். தம்பியோ கண்வெட்டாமல் பார்த்தான். அந்த பொம்மை சிறிது நேரம் காற்றில் பறந்தது. அவர்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்தார்கள். அளவுக்கதிகமான இயக்கத்தின் காரணமாக பொம்மை உடைந்து விட்டது. தம்பி உடனே அழுதான். நாம் இதைப்போன்று இரு மடங்கு பெரிதான பொம்மையைச் செய்வோம், அதனைப் பறக்க விட்டு மகிழ்வோம் என்று கூறித் தேற்றினான். பின் தம்பியையும் துணைக்கு வைத்துக்கொண்டு பொம்மையை உருவாக்கினான். ஆனால் அது பறக்க மறுத்து விட்டது. இருவரும் ஏமாற்றமடைந்தனர். ஆனால் தங்கள் முயற்சியைக் கைவிடவில்லை.

இருபத்தைந்து ஆண்டுகள் கடுமையாக ஊக்கத்துடன் உழைத்து பல தோல்விகளைச் சந்தித்து முடிவில் அவர்களது முயற்சியானது வெற்றி பெற்றது. 1903இல் இருவரும் ஒன்று சேர்ந்து பொம்மை ஒன்றினை காற்றில் பறக்க விட்டார்கள். அது வெறும் விளையாட்டுப் பொம்மையல்ல, உலகத்தில் முதல் விமானம். அண்ணனின் பெயர் வில்பர்ரைட் தம்பியின் பெயர் ஆர்வில்ரைட். வில்பர் இளமையில் புத்தகப்புழுவாக படித்துக்கொண்டு இருப்பார். ஆர்வில் ரைட் குறும்புக்காரர். பள்ளிக்குச் செல்லாமல் நண்பனின் வீட்டிற்குச் சென்று தையல் இயந்திரம் வேலை செய்யும் விதத்தை கண்டறியும் சிந்தனையில் ஆழ்ந்து விடுவார். பள்ளிகூடம் சென்று வரும் உத்தம மாணவனைப்போல் குறித்த வேளையில் வீடு திரும்புவார். திருட்டுத்தனம் வெளிப்பட, தவறை உணர்ந்து ஒழுங்காக பள்ளிக்கு சென்று வந்தார். சகோதரர்கள் இருவரும் ஒருவரின் கருத்துக்கு மற்றவர் மதிப்பளித்து மனிதப்பண்பாலும் உடன்பிறப்பு பாசத்திலும் எடுத்துக்காட்டாக விளங்கினார்கள். ரைட்சகோதரர்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை. அவர்களுக்கு திரைமறைவில் ஊக்கம் காட்டி வந்த கேதரின் என்ற சகோதரியும் திருமணமே செய்து கொள்ளாமல் எப்போதும் அவர்களுடனே வாழ்ந்து வந்தாள்.

இவர்கள் முதலில் பத்திரிகை வியாபாரம் செய்தார்கள் இது இலாபம் தராமல் போக மிதிவண்டி செப்பனிடும் தொழிலைத் தொடங்கினார்கள். மெல்ல புது வண்டிகளையும் தயாரித்தனர். வருமானம் அதிகரித்தது. புதிதாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற கட்டுக்கடங்காத ஆர்வத்துடன் இருந்து வந்த அவர்களுக்கு ஜெர்மனில் ஆட்டோவின் வித்தால் என்பவர் நழுவத்தில் (Glider) பறந்தார் என்ற செய்தி எட்டியது. "நழுவம்" என்பது விமானம் போன்ற அமைப்புக் கொண்டது. இதே துறையில் சோதனை செய்த கான்யூட், லாங்கி போன்ற பிற அறிவியல் அறிஞர்களின் கருத்துக்களையும் ஆராய்ச்சிகளையும் ஊன்றிப் படித்தார்கள்.

ஒருமுறை தன் முயற்சியில் தோல்வியுற்ற வில்பர்ரைட் மனமுடைந்து "இனி ஆயிரம் ஆண்டுகள் வரை எந்த மனிதனாலும் காற்றில் பறப்பதற்குக் கற்றுக்கொள்ள முடியாது" என்று கூறினார் ஆனால் அவருடைய அருகிலிருந்த கான்யூட் "நீங்கள் உங்கள் முயற்சியைக் கைவிட்டால் உண்மையாகவே மனிதனால் ஆயிரம் ஆண்டுகள் வரை பறக்க முடியாது" என்று கூறி அவர்களுக்கு ஊக்கம் காட்டினார். இதனால் 1903ல் வானவூர்தி முதன்முதலாகப் பறந்தது. எனவே ரைட்சகோதரர்களின் விடாமுயற்சியே இச் சாதனைக்கு வழிகோலியது எனலாம்.

அடுத்து ஒளி, புவியீர்ப்பு போன்றவற்றில் பல கண்டுபிடிப்புக்களைத் தந்த சேர் ஐசக் நியூட்டனைப் பற்றிப் பார்ப்போமானால் இவர் பிறக்கும் போது தந்தை இறந்துவிட்டார். இவன் சிறுவயதாக இருக்கும் போது மிகவும் மெலிந்த சிறுவனாகக் காணப்பட்டான். ஒரு நாள் பாடசாலை மைதானத்தில் மெலிந்த சிறுவனை, வாட்டசாட்டமான சிறுவன் அடிக்கடி வம்புக்கு இழுத்துக்கொண்டிருந்தான். மெலிந்த சிறுவன் ஆத்திரமடைந்து மற்றவனை அடிக்கத் தொடங்கினான். இருவரும் சண்டை பிடித்து யாரும் எதிர்பாராத வகையில் மெலிந்த சிறுவன் ஆத்திரமடைந்து மற்றவனை அடிக்கத் தொடங்கியபோது இறுதியில் மெலிந்த சிறுவன் வெற்றி அடைந்தான். சண்டையில் அவனை வென்ற அன்றே படிப்பதிலும் வெற்றிபெற வேண்டும் என்ற தீர்மானத்திற்கு அவன் வந்தான். அதனால் இடைவிடாது படிக்கத்தொடங்கி கல்வியில் நன்கு தேர்ச்சி பெற்று அதன் பயனாக வாழ்க்கையிலும் சிறந்த முறையில் வெற்றி பெற்றான்.

இவர் இளமைக்காலத்தில் பட்டம், நீர்க்கடிகாரம், காற்றாலை ஆகிய விளையாட்டுப் பொருட்களை செய்வதில் ஆர்வமாக இருந்தார். பின்னர் இவரின் மாமனார் இவரை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சேர்த்தார். நியூட்டன் தன் ஆராய்ச்சியை இலத்தீன் மொழியில் இயற்கைத் தத்துவங்களின் கணிதக்கோட்பாடு என்ற பெருங்கட்டுரையாக எழுதினார். பின்னர் புதிய ஈர்ப்பு ஆற்றல் பற்றிய அவருடைய ஆராய்ச்சி அறிவியல் உலகில் மாபெரும் மதிப்பைப் பெற்றது.

எனவே இவருடைய சிந்தனைத்திறனும், விடா முயற்சியும் இவர் பல கண்டுபிடிப்புக்களைக் கண்டு பிடிக்க உதவியது.

அடுத்து இந்திய விஞ்ஞானிகளில் இந்திய நாட்டின் குடியரசு தலைவராகவும், அறிவியல் அறிஞராகவும் விளங்கிய அப்துல் கலாமைப் பற்றிப் பார்ப்போமாயின் இவர் மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த மரைக்காயர் குடும்பத்தில் பிறந்தார். ஐந்தாம் வகுப்பு தமிழ் வழி ஆரம்பக்கல்வியையும் பின்னர் மேனிலைப்பள்ளியில் ஆங்கில வழிப்பாடத்தையும் படித்தார். இவர் சிறுவதிலேயே புளியங்கொட்டை விற்றுப் பணம் சேகரித்தார். பள்ளி விடுமுறை நாட்களில் சைக்கிளில் போய் வீடுவீடாகச் செய்தித்தாள் போடும் வேலையையும் செய்தார். பின்னர் திருச்சி செண்ட் கல்லூரியில் சேர்வதற்கு 1200/= கட்ட முடியாத ஏழ்மை நிலை. இதனால் அவரது சகோதரி நகை அடகுவைத்து பணம் கட்டினார். இந்திய விஞ்ஞானிகளில் மேல்நாடு சென்று படிக்காதவர்களில் அப்துல்கலாமும் ஒருவர்.

இவர் அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித்துறையில் பணியில் அமர்வுற்று 1963ம் ஆண்டு தனது 27ம் வயதில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறையில் பணியில் அமர்ந்தார். செயற்கைக்கோள் ஏவுவதில் தனித்திறமை பெற்றார். இவரிடம் ஏவுகணை உருவாக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது. இவரது எண்ணமெல்லாம் ஏவுகணை, செயற்கைக்கோள், போர்விமானங்கள் போன்ற ஆராய்ச்சியிலேயே இருக்கிறது.

இவர் மென்மையான மனம் கொண்டவர். கவிதை, இலக்கியம், இசை, எழுத்து போன்றவகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக இருக்கின்றார். உலக மக்கள் அனைவருமே அன்பைக் கடைப்பிடிக்க வேண்டும். எல்லோரும் சகோதர ஒற்றுமையுடன் ஒருவருக்கொருவர் உதவி செய்தபடி வாழ வேண்டும் என்ற கருத்தை உடையவர். எனவே இவரின் வாழ்க்கையை அவதானித்து நாமும் வாழப்பழக வேண்டும்.

நாம் இப்போது பெண் விஞ்ஞானிகள் பற்றிப் பார்ப்போமாயின், முதல் விண்வெளி மங்கையாகிய வலண்டினா வால்டிமிரோவா தெரஷ்கோவாவைப் பற்றிப் பார்ப்போம். இவர் 1963ல் புவியை பலமுறை வலம் வந்து சாதனை படைத்த முதல் விண்வெளி வீராங்கனை ஆவார். இவரது தந்தை படிப்பு முடிந்த பின் இராணுவத்துணி தயாரிப்பில் ஈடுபட்ட வேளை இராணுவ உயரதிகாரிகளான பராசூட்டில் குதிக்கும் பிரிவைச் சேர்ந்தவர்களுடன் நட்புக்கரம் பூண்டு பராசூட்டில் குதிப்பதை தனது பொழுது போக்காகக் கொண்டார்.

சோவியத் விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்தில் பங்காற்றிய இவர் விண்ணிற்கு செல்வதற்கு தேவையான பயிற்சியை முடித்தார். முதலில் விமானியாகப் பயிற்சி பெற்று வேறு பல பயிற்சிகளையும் பெற்று இறுதியில் புவிக்கோளத்தை 48

முறை சுற்றி வந்து சாதனை நிகழ்த்தினார். விண்வெளி ஆராய்ச்சி என்கிற ஒன்று இருக்கும் வரையில் இவரை அணுக முடியாது. வலன்ரினாவின் ஆர்வமும் விடாமுயற்சியுமே இவரை உலகிற்கு எடுத்துக் காட்டியது.

அடுத்து இந்திய பெண் விஞ்ஞானி கல்பனா சௌலாவைப் பற்றிப் பார்ப்போமானால், "வளரும் பயிரை முளையிலே தெரியும்" என்பது போல கல்பனாவின் பிள்ளைப்பருவம் அமைந்திருந்தது. தன் சகோதரனுடன் போட்டியிட்டு சைக்கிள் ஓட்டியமை, விமானம் ஏறுவதையும், இறங்குவதையும் அவதானிப்பது. தானும் இவ்வாறாக விமானத்தில் பறக்க வேண்டும் என உள்ளங் கொண்டது முதலிய பண்புகள் காணப்பட்டது. இவர் விமானவியல் படித்தார். விமானவியல் படித்த மாணவர்களில் ஒரே ஒரு பெண்மாணவியாய் பயின்று, விஞ்ஞானமானிப்பட்டத்தைப் பெற்றார். முதுமாணிப்பட்டத்தையும் பெற்றார். இவரது கணவர் ஒரு விமானப் பயிற்சியாளராவார்.

இவர் நாஸாவின் ஆய்வு மையத்தில் பல சோதனைகள் செய்தார். 15 நாட்கள் அண்ட வெளிப்பயண அனுபவம் பெற்றார். இவர் இசையின் மீது அதிகம் நாட்டம் கொண்டவர். 27 முறை விண்வெளிக்கு சென்று திரும்பி, கொலம்பியாவில் 2003ல் இவர்களது பயணம் இறுதியாக அமைந்தது. 16 நாட்கள் பணிகளை முடித்து, 16 நிமிடங்கள் இறங்குவதற்கு இருக்கும் போது விண்வெளிக்கப்பல் வெடித்துச் சிதறியது. உறவினரும் உலகமும் இச் செய்தி கேட்டு மிகவும் துயரடைந்தனர்.

இவ்வாறாக விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாறுகளையும் அவர்களின் செயற்பாடுகளையும் பார்க்கும் போது நாங்களும் ஒரு விஞ்ஞானியாக வரலாம் என்ற எண்ணம் உங்கள் மனதிற்குள் வரவேண்டும். எனவே நீங்களும் புத்தாக்க செயற்பாடுகளில் ஈடுபட்டு, புதிய கண்டு பிடிப்புக்களைக் கண்டு பிடித்து விஞ்ஞானியாக வர முயற்சிக்க வேண்டும். எனவே ஆர்வம், விடாமுயற்சி, செயற்பாட்டுத்திறன், சிந்தனாசக்தி என்பவற்றில் கவனம் செலுத்தி விஞ்ஞானியாவோம்.

திருமதி. ஜெயந்தினி சிவபாதம்
ஆசிரியர், சென்ஜோசப்ஸ்வித்தியாலயம்
(விஞ்ஞானம்)

## ஆங்கில மன்றம் - அதிபர் பொறுப்பாசிரியருடன்



இடமிருந்து வலம் (அமர்ந்திருப்போர்)

திரு. G. அமலதாசன்,

திரு. P. வின்சென்ற் (அதிபர்).

நிற்பவர்கள் (இ.வ)

K. ஜெனவில், W. ஜயந்போர்மினஸ், R. சாம்சன்.

## கத்தோலிக்க மன்றம் - அதிபர் பொறுப்பாசிரியருடன்





இடமிருந்து வலம் (அமர்ந்திருப்போர்)

திரு. P. வின்சென்ற் (அதிபர்)

திருமதி. S. ரவிலிங்கன்.

நிற்பவர்கள் (இ.வ)

P. பார்த்தீபன், R. நிஷாந்தன், S. நிலக்சன்

## தமிழ் மன்றம் - அதிபர் பொறுப்பாசிரியர்களுடன்



இடமிருந்து வலம் (அமர்ந்திருப்போர்)

திரு. R. ஞானேஸ்வரன்,

திரு. P. வின்சென்ற் (அதிபர்)

திருமதி. K. விஜிதா

நிற்பவர்கள் (இ.வ)

W. ஜயந்போர்மினஸ், S. மதன்ராஜ்,

J. கிரிஷாந், R. சாம்சன்

## கணித, விஞ்ஞான மன்றம் - அதிபர் பொறுப்பாசிரியர்களுடன்



இடமிருந்து வலம் (அமர்ந்திருப்போர்)

திரு. A. நிரஞ்சன், திரு. P. வின்சென்ற் (அதிபர்), திரு. J. கோகுலவாசன்

நிற்பவர்கள் (இ.வ)

M.ஞானதீபன், S. நியூட்டன், W. ஜயந்பேர்மினஸ்



150வது வருட நிறைவு விழாவில் பாடசாலைகளுக்கு இடையிலான
19 வயதின்கீழ் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் பங்குபற்றிய
யா/சென். சாள்ஸ் ம.வி. அணியும் , யா/சென். ஜோண்ஸ் கல்லூரி அணியினரும்,
பிரத விருந்தினர், அதிபர், பழைய மாணவர் சங்கச் செயலர் மற்றும் நடுவர்களுடன்

# Learning English Language



It is acclaimed that English is an international language. It is spoken by more than 300 million native speakers and between 400 to 800 million foreign users. Englis is important to every individual to grow in knowledge as most books are written in English. One who knows to speak English can travel to any part of the world and transact business to his advantage.

A language is a systematic means of communication by the use of sound or conventional systems. It is the code we use to express ourselves and communicate to others. It is a communication by word of mouth. According to linguists language is learnt through use and through practice. In their view, the more one is exposed to the use of language, the better one learns.

Nowadays in schools English language is taught from grade 3. When the chidren are young the grasping power of the language is more. So in schools it would be better if the children learn English from grade one.

English language can be learned by four major skills such as listening, speaking, reading and writing.

All English learners do not receive any native language support. They are in English only classes. How do teachers enhance instruction for the children? They achieve it by best teaching practices.

According to Claude Goldenberg, a professor of education "the challenge these children face is learning acedemic content and skills while learning the language in which these skills are taught and practised."

As language and vocabulary become more complex and subject matter more difficult for students, Students need instructional modifications, to make the content more accessible and comprehensible taking their language limitations into consideration.

We can compare a grade one student to a new baby. Babies learn their language gradually. First they learn to listen. They learn to speak. After that they learn to read and then learn to write.

We are living in modern fast moving world. So the pupils must be given the opportunity of listening audio cassettes which facilitate learning English. So many English Programmes are being telecast in televisions which are very helpful for English learners. Therefore let the pupils watch and listen to that programmes so that they can improve their standard of English.

The news read by newsreader in B.B.C. channel read it with correct pronunciation of words, pause and intonation. Children like to watch cricket in television. When the running commentry goes on children can watch the play as well as listen to the comments. Thus they learn many vocabulary and word order of the sentences.

To enable the childten to speak English we have to encourage the children to participate in English dialogue, conversation and oratory. Practicing role play, reciting poems, individually or in groups help the children to speak English. Loud reading also helps the children to hear their own pronunciation whenever their pronunciation is incorrect the teacher can guide them with correct pronunciation. Prounuciation is a type of speaking skill that must be practiced in order to improve their communication.

Reading is a part of education. Reading gives wider knowledge of various things. By reading vocabulary is enriched. Schools have libraries of books on all subjects. The chilren could go to the the library and read English books at any time or when they are free. Small children love to read the Lady Bird books with pictures. They should be encouraged to read English story books and newspapers. Reading newpapers give children the knowledge of current affairs. Reading classical books inprove their standard of English. Francis Bacon says “Reading maketh a full man”

Another method is to write sentences using the given words. To write a sentence we have to know the word order. That is Subject, verb, object and so on. Asking the chilren to write a few sentences for a given topic or to write a short story in English will motivate them and the chilren will learn to write gradully. Further they can be asked to write a few sentences about the picture given. Thus we can bring out their creative ideas in writing.

Spelling is a skill that makes understanding the written word easier. Grammar and vocabulary are other micro skills. Spelling is defined as the action practice or art of naming the letters of words of reading letter by letter or of expressing words by letters. We can promote learning the spelling of words by giving dictation of English words or fill in the blanks of the missing letters in English words.

Vovabulary means the range of words in any language. Words are the vehicle of thought and as we are constantly trying to communicate our thoughts, we must master the use of as many words as possible. The vocabulary of the English language consist of over 4,000,000 words which include words drawn from Greek, Latin and many other foreign languages. More words are constantly being added.

Teaching English therefore involves not only helping the students to use the form of English most suitable for his purposes, also exposure to regional and cultural styles, so that the students will be able to understand the meaning when the words grammar of pronunciation are different to the or English he or she is being taught to speak.

Our country has receded 30 or 40 years due to the neglect of English language in schools. All will agree that the standard of English has already fallen low and that it should not be allowed to detoriate further. The root cause is the introduction of mother tongue as the medium of instruction. Switching back to the old system create unwanted problems in the country. Yet we can improve the standard of English by introducing English as a compulsory subject in G.C.E. Ordinary level and a pass in English for university admission.

With the globalization the importance of English is felt. We can follow the method of other countries and give English its due place. Let us swing with the time and learn more and better English. Let us all say we can, we will, we must work for the goal of better English.

**Mrs. A.Vethanayagam**
Former Teacher

# சூரியனின் பிறப்பும் இறப்பும்

நாம் ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள உயிர்க்கோளான புவியில் வாழ்கின்றோம். எமது ஞாயிற்றுத் தொகுதியைக் கூறாகக் கொண்ட வெள்ளுடுத் தொகுதி (Galany) பால் வீதி எனப்படும். பால் வீதியில் சூரியன் போன்ற 100 பில்லியனிற்கும் அதிகமான உடுக்கள் உள்ளன. பால் வீதியானது சுழல் சக்கரம் போல் சுழற்சியடைந்தவாறு உள்ளது. வெள்ளுடுத் தொகுதிகள் சுருளி வடிவிலும் அல்லது நீள் வட்ட வடிவிலும் அல்லது ஒழுங்கற்ற வடிவிலும் காணப்படுகின்றது.

இனிநாம் எவ்வாறு சூரியன் போன்ற உடுக்கள் பிறக்கின்றன எனப் பார்ப்போம். அகிலத்தில் உள்ள மூலக்கூற்று ஒன்று சேர்ந்து கடினமடைவதிலிருந்து உடுக்களின் வாழ்வுக்காலம் ஆரம்பிப்பதாகக் கூறப்படுகின்றது. மூலக்கூற்று முகில் தூசிகளாலும், வாயுக்களாலும் ஆனது. ஈர்ப்பு விசையின் காரணமாக இம்முகில்கள் வேகமாகச் சுழன்று உயர் அடர்த்தியுள்ள தொகுதிகளாக ஒடுங்குகின்றன. இதன் போது பாரிய அளவிலான வெப்பம் வெளிவிடப்படுகின்றது. அப்போது ஒடுங்கிய முகில்கள் மேலும் சுருங்கி 150.000 கெல்வின் (K) வெப்பநிலையை அடையும் போது இம்முகில்களின் நடுப்பகுதி ஒளிர ஆரம்பிக்கின்றது. இவ்வாறான இடங்கள் முதல் உடு (Proto star) என்றழைக்கப்படும். முதல் உடு மேலும் ஒடுங்கி அதன் உட்புறப் பகுதி உடுவாகவும், வெளிப்புறப்பகுதி கோளாகவும் மாற்றமடைவதாக விஞ்ஞானிகள் நம்புகின்றனர். இந்தக் கோள்கள் உடுவை மையமாகக் கொண்டு சுற்ற ஆரம்பிக்கின்றன. இவ்வாறே எமது சூரியன், வெகா (Vega) சீரியஸ் (Sirius) போன்ற உடுக்கள் தோற்றம் பெற்றன.

சூரியனை ஆராய்ந்தால் சூரிய மத்தியில் உள்ள கரு கரோனா எனப்படும். கரோனாவில் இயங்கிக் கொண்டிருக்கும் பாரிய அணு உலையில் தான் தாக்கம் ஆரம்பிக்கின்றது. இங்கு ஒரு நேர் மின்னேற்றமும் (Proton) எதிர் மின்னேற்றமும் (Electron) சேர்ந்து ஒரு ஐதரசன் அணு ஆகின்றது. அவ் ஐதரசன் அணுவானது மற்றுமொரு ஐதரசன் அணுவுடன் ஒன்றி ஒரு ஈலியம் (Helium) அணுவாக மாறுகின்றது. இவ்வாறு சிறிய அணுக்கள் ஒன்று சேர்ந்து பெரிய அணுக்கள் தோன்றுகின்ற செயற்பாடு கரு ஒன்றல் (Nuclear Fusion) எனப்படும். இங்கு அனேகமாக ஐதரசன் அணுக்கள் ஈலியம் அணுக்களாக மாறும் செயற்பாடே நடைபெறுகின்றன. இச்செயற்பாட்டின் போது பாரியளவிலான வெப்ப சக்தி வெளியிடப்படுகின்றது.

இச் செயற்பாட்டின் போது அதிக சக்தி கொண்ட காமாக் கதிர்கள் தான் போட்டோன்களாக மாறி எமக்கு ஒளியைத் தருகின்றன. போட்டோன்களோடு சூரியத்துகள் நியூட்ரினோவும் வெளிவரும். போட்டோன் கதிர்கள் சூரிய மையப்பகுதியிலிருந்து வெளிப்பகுதிக்கு வர 10 ஆயிரம் முதல் 1.7 லட்சம் ஆண்டுகள் வரை எடுக்கும்.

நேர், எதிர் மின்னேற்றங்களால் அதாவது புரோத்திரனும் இலத்திரனும் சேர்ந்து உருவாகியவை தான் அண்டத்திலுள்ள அனைத்தும். சூரியக் கருவானது ஐதரசன், ஈலியம், ஒட்சிசன், காபன், நியோன், இரும்பு அகியவற்றால் ஆனது. இந்த அணு உலையில் உருவாகும் கூடுதலான சக்தியும் வெப்பமும் தான் சூரிய வெடிப்புக்களை உண்டாக்குபவை. அப்போது சூரியனிலிருந்து வாயுக்கள் பிளாஸ்மாவாக (Super heated gases) வெளியேறும் இவை பயங்கரமான மின் காந்தக் கதிர்களைக் கொண்டு வரும். பூமியின் வளிமண்டலம் தான் எம்மை இக்கதிர் வீச்சுத்தாக்கத்திலிருந்து காப்பாற்றுகின்றது. எனவே சூரியனின் இந்த கரோனாப் பகுதி தான் கோள்களின் அனைத்துச் செயற்பாட்டிற்கும் பொறுப்பாகவுள்ளது. சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை $6000^0C$ (செல்சியஸ்) ஆகவும் அதன் மையப்பகுதி 15 மில்லியன் $^0C$ ஆகவும் கொண்டுள்ளதாக நம்பப்படுகின்றது. சூரியக் கதிர்கள் புவியை வந்தடைய எடுக்கும் காலம் 8 நிமிடமும் 18 செக்கனுமாகும்.

மனிதர்களைப் போன்று உடுக்களும் பிறப்பு, இளமை, முதிர்வு, இறப்பு போன்ற நிலைகளைக் கடந்து செல்கின்றன. எனினும் உடுக்களின் வாழ்வுக்காலம் பல மில்லியன் அல்லது பில்லியன் ஆண்டுகள் நீண்டதாகும். எமது சூரியன் தனது வாழ் நாளில் பாதியைக் கடந்து விட்டதாகக் கருதப்படுகின்றது. தற்போது அதன் வயது ஏறத்தாழ 4500 மில்லியன் ஆண்டுகளாகும். அது இன்னமும் 4500 மில்லியன் ஆண்டுகள் செயற்படும் எனக் கருதப்படுகின்றது.

சூரியன் முதிர்வயதை அடையும்போது அது விரிவடைந்து பாரிய சிவப்பு நிறக் கோளமாக மாறும். இது செவ்வசுரன் (Red giant) எனப்படும். எதிர்காலத்தில் செவ்வசுரனாக எமது சூரியன் மாறும் போது, தற்போதுள்ள பருமனை விட 250 மடங்கு பெரிதாகி செவ்வாய்க்கோள் வரை விரிவடைந்து பின் வெடித்துச் சிதறி அகிலத்தில் விடப்படும். வெடித்துச் சிதறிய இதன் வெளிப்புறப்பகுதி, கோள் நெபியூலா (Planetary Nebula) ஆகமாறும். இதன் சிறிய உடு போன்ற மத்திய பகுதி வெண்ணிறக் குள்ளன் (White dwarf) எனப்படும். மேலும் 3000 மில்லியன் ஆண்டுகளின் பின் இவ்வாறான வெண்ணிறக் குள்ளன் உடுக்கள் குளிர்ச்சியடைந்து கருங்குள்ளன்களாக (Black dwarf) மாறும். இவ்வாறு சூரியனினதும் (ஏனைய உடுக்களினதும்) வாழ்வுக்காலம் முடிவடைகின்றதாகக் கொள்ளப்படுகின்றது.

உசாத்துணை நூல்கள்
தரம் 9 விஞ்ஞான நூல்
திருமதி. P.M.J. அன்ரனியின்
"விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்" நூல்

ஆக்கம்
திரு. அன்ரனி நிரஞ்சன்
யா/சென் யோசப்ஸ் வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

# நெஞ்சை நெருடும் வண்ணக் கோலங்கள்.....

"இளமையில் கல்வி சிலையிலெழுத்து"
செந்தமிழின் வாழ்வியல் கலையை நயம்படவுரைக்கும் தெளிவான செய்தி. இதன் உண்மையை அனுபவ வாயிலாக சுவைத்தவன் என்கின்ற அளவில் இக்கல்விக்கூடத்தின் சிறப்பை நன்றியுடன் மனதினில் ஏற்று இக்கட்டுரையை வரைகின்றேன்.

கடந்துபோன பலவிதமான காலத்தின் கோலங்களின் பாதிப்புக்களில் சிதைவுறாது சமகால தேவைகளில் கல்வித்துறைக்கு சென்ற காலத்தில் சிறப்பு, பெருமைகளுடன் பணியாற்ற வேண்டுமென்ற எம் புனித வளனார் பாடசாலையின் எண்ணக்கருத்துக்கள் நிறைவேற எம் ஒத்துழைப்புக்கள் குவியட்டும். இவ்வாசை என் நன்றிக்கடன். இதன் சென்றகால வரலாறு, இத்தாயின் மடியில் தவழ்ந்த செல்வங்களின் உயர்விற்கு அளித்த பங்களிப்பு மறக்க முடியாதது.

அருட்பணியாளர் கிறிஸ்தோப்பர் பொஞ்ஜின் அமதி அடிகளாரால் (யாழ். மாவட்ட ஆயராகவும், கொழும்பு உயர் மறை மாவட்ட பேராயராகவும் மிளிர்ந்த பெருந்தகை) 1861ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்விக்கூடம், காலத்தின் தேவைக்கேற்ப 1881ல் ஆசிரிய பயிற்சிக்களமாக சிறப்படைந்தது. இவ்வாறான சூழ்நிலையில் எனது ஆரம்பக்கல்வி, கீழ் அரிவரி, மேல் அரிவரி, தொடர்ந்து முதலாம், இரண்டாம், மூன்றாம் வகுப்புவரை இத்தாயின் மடியில் தவழ்ந்த செல்லப்பிள்ளையாகத் துளிர்த்து, இலை விட்டது. 1940இன் இறுதியிலும் 1950களின் முற்பகுதியில் தவழ்ந்த இப்பருவம் நெஞ்சை விட்டகலாததொன்று. எனது கல்வி வாழ்வின் அசைக்கமுடியாத அடித்தளம்.

காலம் குறுகியதாயினும், ஆரம்பகால கல்விக்கேற்ப அனுபவங்கள் ஆழ வேரூன்றின. ஆரம்பக்கல்வியின் சிறப்பு யாவரும் அறிந்ததே. இக்கால கட்டத்தின், வளர்ச்சிக்கேற்ற சூழல்,அமைவான திட்டங்கள், கற்பிக்கும் ஆசிரியப் பெருந்தகைகளின் அர்ப்பணிப்பு நிறைந்த பணி இக்கால கட்டத்தின் ஆதாரங்கள். மேற்கூறப்பட்ட விடயங்கள் அறிவு ரீதியாக மட்டுமன்று, இதயத்தின் உணர்வலைகளாக அமையுமிடத்து, வளர்ச்சி ஒன்றே பயனாக அமையும். அனுபவ ரீதியாக அந்தப் பிஞ்சுப் பருவத்திலேயே பெற்றுப் பயனடைந்தவர்களில் நானுமொருவன்.

பாடசாலை அமைந்திருந்த சூழல், காலங்கள் பல கடந்தாலும் இன்னமும் அப்படியே கண்முன் நிற்கின்றது. காற்றோட்டம் நிறைந்த கல்வி வளாகம், துப்பரவான வகுப்பறைகள், குளிர்மை தருகின்ற பக்கத்து கடற்கரையின் காற்றை

இதமாக அள்ளித் தெளித்த பசுமையான மரங்கள், வேம்பு, பூவரசு, கோணல்புளி, மகோக்கனி, தென்னஞ்சோலை, வானுயர்ந்த பனைகள், கமுக மரங்கள் இப்படிப் பலப்பல, ஓர் பரந்து வளர்ந்த ஆலமரம், இவைகளுடன் கூடிய முக்கனி அளித்திட்ட மா, பலா, வாழை, ஆசிரிய கலாசாலையின் சோலை சூழ்ந்த இருப்பிடங்கள். கைத்தொழில் வளாகப்பகுதியில் சிறப்புடன் அமைந்த கயிறு திரித்தல், தச்சுவேலை, சிற்ப வேலைக் கூடங்கள். எமது பிஞ்சு வயதினை உசுப்பிய, வியப்பில் ஆழ்த்திய சூத்திரக் கிணறு, நாற்பது வாலிபர்கள், அதனை இயக்கிய மாடுகள்- சுற்றியமைந்த மரக்கறித்தோட்டம். மறக்க முடியாத ஆனால் இப்போ காணமுடியாத வண்ணக் கோலங்கள்.

புறச்சூழல் இப்படி என்றால் அகச்சூழல் எப்படி அமைந்திருக்கும். மனித உள்ளங்களின் மாண்பினை நாங்கள் - மாணவர்கள் கண்டோம், மகிழ்ந்தோம் பயன் பெற்றோம். இத்தகைய அமைவினில் எமக்குக் கல்வியை ஊட்டிய ஆசான்கள் இன்றும் என் கண்முன்னே பளிச்சென நிற்கின்றார்கள். யாரும் இப்போ இங்கில்லை. அவர்கள் சமாதி கொண்டது எமது உள்ளங்களில். ஒவ்வொரு துறையிலும் மிளிர்ந்த பெருந்தகைகள். அறிவுத்திறனுடனும் ஆசிரியப் பணியின் பண்பாட்டின் விழுமியங்களைத் தாங்கிய நெஞ்சங்கள். எம்மை வருடாமல் என்ன செய்யும்?

ஆசீர்வாதம் மாஸ்டர் என்றொருவர், கணிதம் என்றால் கண்முன்னே நிற்பவர். மாணவருக்கான படிமுறைக் கணிதம் என்னும் பயன்தரும் ஏட்டின் ஆசிரியர். இந்நூலின் சிறப்பு என்னவென்றால் ஒவ்வொரு கணிதப் பயிற்சியும் மாணவர்களின் செயற்பாடுகளின் நிருபணமாகவே அமைந்தது. எமக்கு விளங்கினால் நூலில் காணப்படும் ஆக்கமா, ஆட்சேபனையா எதுவும் ஏற்றுக்கொள்ளப்படும். பிற்காலத்தில், ஆசீர்வாதம் அச்சகத்தை ஆரம்பித்து யாழ்நகரின் முதன்முதலாக சமஸ்கிருத, சிங்கள எழுத்துக்களையும் பிரசுரித்தவர் என எண்ணுகின்றேன்.

இன்னொரு கணித ஆசிரியர் லூக்கேஸ் மாஸ்டர். கணிதத்தில் அதைக் கற்பிப்பதில் புலி. மற்றைய பாடங்களிலும் வித்தகர். கண்டிப்பிலும், கற்பித்தல் ஆற்றலிலும் யாரும் மிஞ்சி விடமுடியாது. பாடங்களைத் தெளிய வைப்பதில் ஆர்வம் கொண்டவர். ஆற்றலை வளர்ப்பவர். கணித வாய்ப்பாடு மேலிருந்து கீழ், அத்துடன் கீழிருந்து மேல். யாரும் விதிவிலக்கில்லை. மொழியின் வரிவடிவம், ஒலி வடிவம், எண்களின் ஏறுமுகம், இறங்குமுகம், அச்சுப் போன்ற கையெழுத்து, பூமிசாஸ்திரம், சரித்திரம் இவைகளின் விடயதானங்கள் அனைத்தும் எமக்கு கைவந்த கலை. அன்னாரின் தெளிவான கற்பித்தலினால், அடி வலிக்கும். ஆனால் பாடங்கள் மனதில் ஆழமாகும்.

கண்டிப்பின், ஒழுக்கத்தின் காவலனாய் அமைபவர் எம்மை வளர்த்த ஆசான் மரியாம்பிள்ளை. நெடிய, கனத்த உருவம், கையில் நீளப் பிரம்பு. ஆனால் அடித்ததை நாம் கண்டதில்லை. தன் சிம்மக் குரலுடன் யாவற்றையும் அடக்கி ஆண்டவர். உருவத் தோற்றத்திற்கேற்ப பரந்த விசுவாசமான இதயம்.

ஏழை மாணவரின் திறந்த வீடு. கண்டிப்பு மிகுந்த பாசத்தினால் எம்மில் முத்திரை பதித்தவர்.

சின்னப்பு மாஸ்டர். பொருளுக்கேற்ப சிறிய உருவம், சாந்தம் சொரியும் முகம், மென்மையான குரல், ஆறுதலான ஆனால் நிச்சயமான நடை. அவரிடம் சரித்திரப்பாடம் கற்றதாக ஞாபகம். சரித்திரம் போன்று நிலையாக நிற்கின்றார் உள்ளங்களில். மதிய உணவிற்கு பொறுப்பானவர். சுவையுடன் கூடிய உணவு பாசத்துடன் அள்ளிக் கொடுக்கப்படும்.

அழகையா மாஸ்டர் என்கின்ற பெயருக்குப் பொருத்தமான ஆசிரியர். ஒரு பழுப்பு நிறத்தில் வேட்டியும், நஷனலும் பார்த்தாலே பரவசம். "பாலபோதினி" பாடப்புத்தகத்தில் படித்தவை, இல்லை கற்பிக்கப்பட்டவை எமக்குச் சொந்தமாயின. "நவமணி வாசகம்" என்றொரு புத்தகம். "கந்தசாமி நல்ல பையன் - காலை எழுந்தவுடன் கடவுளைத் தொழுவான்" இன்றும் ஞாபகம். அப்படி என்றால் இவரின் அழுத்தம் எப்படி இருந்திருக்கும்.

இன்னொரு அன்பின் பண்பாளர், கந்தையா மாஸ்டர், பின்னால் அருளானந்தம் என அறியப்பட்டவர். உருவத்தில் சிறிது குள்ளம், ஆனால் புன்சிரிப்பில் குன்றின் மேல் விளக்கு. குணத்தில் உயரம். பாசத்தில் பலாச்சுளை... புகழாரம் அல்ல. அனுபவத்தின் வெளிப்பாடு. கற்ற பண்புகள் எம்மை விட்டகலா.

இன்னொரு அருளானந்தம். சற்றே ஒல்லியான உருவம் அமைதியாகத் தன் பணிகளைச் செய்வார். பாடசாலை ஆக்கங்களில் எம்மை பளிச்செனஒளிரவைத்தவர். மதிய உணவின் பரிமாறலில் உற்றதுணை. அவர் உணவுத்தட்டுடன் வந்தாலே பசிதீரும். கேட்டுக் கேட்டு வயிறைக் குளிரவைத்தவர்.

அந்நாட்களில் மதிய உணவு என்பது எவராவது எறியக்கூடியதல்ல. சக்தியும் பலமும் தந்த உணவு. அன்புடன் ஆக்கம் பெற்று பாசத்துடன் பரிமாறப்பட்ட, அமுத சுரபியில் பொங்கி வழிந்த குறைவிலா விருந்து. யாவரும் இதற்கென அமைத்த பாய்களில் ஒன்றாக அமர்வோம். செபிப்போம் - திருப்தியுடன் உண்போம் - செபிப்போம் - எழுவோம். பலவிதமான பலகார உணவுகள், தொட்டுக்கொள்ள ஏற்ற அனுமானங்கள். இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட ஜாம் அள்ளித்தரப்படும். எப்படியென்றே இன்னமும் புரியவில்லை.

பெரிய மாணவர்களின் பங்களிப்பு அளப்பரியது. எதிலும் ஆர்வம், சுறுசுறுப்பு, உயரவேண்டும் என்ற துடிப்பு. உணவு பரிமாறும் வேளை இவர்களின் அள்ளிக்கொடுக்கும் இதயம் கைகளில் தெரியும். வளர்ந்து உயர்ந்தவர் பலபேர்.

அனைத்துக்கும் முத்தாய்ப்பாக, நடுநாயகமாக அமைந்தவர் பண்டிதர். யோசேப்பு ஐயா அவர்கள். புனித சூசையப்பரின் பெயருக்கேற்றவர். வீரமாமுனிவர்

தன் இன்பத் தேம்பாவணியில் சூசையை வளனார் என்று பெயர் சூட்டி மகிழ்கின்றார். அதன் மறுபிம்பம் பண்டிதர் யோசேப்பு அவர்கள். சான்றோர் வரிசையில் இடம் பிடித்தவர். பெருந்தகையாளர். உருவம் சற்று குள்ளம். ஆனால் குணத்தில் இமயம். வெண்ணிறம் வெளியும் உள்ளும் அப்படியே அனைவரையும் உள்ளத்தில் தாங்கி, கைகளில் பொதித்து, கால்களால் தேடி கல்விக் கூடத்தை வாழ்வியல் கலையில் உருவாக்கியவர். தன் சக ஆசிரியரை மதித்து கற்பித்தல் பணியில் சிறப்பாக ஆதரவு அளித்தவர். நிர்வாக சிறப்பில் ஆசிரியர், பெரிய மாணவர்க்கு பங்களித்து, வண்டியை நேர்முகத்துடன் செலுத்தியவர்.

ஆளுமை என்னும் விழுதை பெரிய மாணவரிடத்தில் ஆழப் புதைத்தவர். இவர் இளைப்பாறிய பின் எனது குருத்துவப் பணிக்காலத்தில் இவரது ஊராகிய சூராவத்தை - ஏழாலை சென்று சந்திப்பதுண்டு. எதையும் மறக்காது அளவளாவி தன் வீட்டுத் தோட்டத்தின் சுவைமிகு கனிகள் உவந்தளித்து அன்பைக் கொட்டியவர். வாழ்வோ இறப்போ இவருக்குப் பயம் காட்டியது கிடையாது. தன் இறுதிச் சடங்கிற்கு தானே முன்னேற்பாடும் கல்லறை அமைத்து, எது எப்படி நடக்கவேண்டும் என வகுத்தும், அதற்கான பணத்தையும் கையளித்து வாழ்ந்தாரென்றால்...

இக்கல்விக்கூடம் அடித்தட்டு மாணவர்களுக்கு ஆற்றிய பணி என் நெஞ்சம் அறியும். பண்டிதர் யோசேப்பு ஐயாவும், ஆசிரிய மணிகளும் இணைந்து மனமார்ந்த உயர்ந்த விழுமியங்களில் பணிபுரிந்தும், உதவியதால் ஏணிப்படிகளில் ஏறியவர் பலர்.

ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் ஆசிரிய மாணவர்கள் எமக்கு பாடம் எடுப்பார்கள். தகுந்த ஆயத்தங்களுடன், பராமரிப்புடன் கற்றுத்தரப்படும். நாம் பெற்ற பயன்கள் எழுத்திலடங்கா. அவர்களில் ஒருவர் டேவிட் ஆசிரியர். இவர் தமிழ் படிப்பித்தது இன்னமும் நெஞ்சத்தில் ஆழப்பதிந்துள்ளது. மற்றோர் ஆசிரியர் பெனடிக். அல்லேலூயா எனப் பெயர் பெற்றவர். தமிழ்ப்பற்றாளர். தமிழ் தான் மூச்சு, பேச்சு. தன்பெயரையும் தமிழாக்கம் செய்து "இறை புகழ் வாழி" என அறியப்பட்டவர். தமிழ் பண்பாட்டின் நலனுக்காக எதுவும் செய்யத் துணிந்த ஓர் தமிழ் பைத்தியம், படிப்பித்த வேளையில் "சிலேட் பென்சிலை" கற்குச்சி என்றும் "உஷ்ணவலயக் காடுகளை" சூட்டு வலயக் காடுகள் பெற்றும் தனித் தமிழை உணரவைத்தார்.

இப்பாடசாலையின் உயிர் நாடி, இதனை ஒட்டிய புனித சூசையப்பர். ஆலயமும், வழிபாடுகளும். இவ்வாலயம் மேற்கத்தைய கட்டடக் கலைக்கும், நேர்த்தியான கட்டட அமைப்பு வேலைக்கும் ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. வேலைப்பாடுகள், அளவுப் பிரமாணங்கள் இணைந்த ஓர் வழிபாட்டுக் கூடம். தொன்மையான இவ்வாலயம் இதன் வழிபாடுகளில் கலந்து பயன்பெற்ற பாடசாலை மாணவர், ஆசிரியர், பயிற்சிக்கல்லூரி பயிலுனர், பொது மக்களுக்கு இறை

கொடைகளை தன் குளிர்ச்சி மிக்க சூழலில் அள்ளிக்கொடுத்தது. தங்களுக்கென பயிற்சி பெறுகின்ற இருபால் பயிலுனர்களுக்கென தனி செபக்கூடங்கள் இருப்பினும் பல பொது வழிபாடுகளில் பங்கு பற்றியது இன்றும் கண்களில் நிறைந்துள்ளது. ஆண்பாலர் தூய வெள்ளை, பெண்பாலர் வெள்ளையில் ஓர் நிறக் கோட்டுடன் சேலை உடுத்தி வருவார்கள். இவர்களின் மேற்பார்வையாளர்களாக அதிபர் எல்.ஏ.சிங்கராயர் அமதி அடிகளாரும், மதர் மரியாவும் இணைவார்கள். யாவும் கச்சிதமாக நடைபெறும்.

பின் நவீனத்துவம், புதுமை என்கின்ற போர்வையில் தொன்மையானதை சாம்பராக்கி விடாது இத் தொன்மையான, அழகுக்கலைமிகு ஆலயத்தை, புனருத்தானம் செய்வது எமது பண்பாட்டின் விழுமியமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இதைக் கண்ணோக்குவோரின் தணியாத ஆசை இதுவே. உதவிக்கரம் நீட்ட பலபேர் முன்வருவார்கள் என்பது எனது திடமான நம்பிக்கை.

இவற்றையெல்லாம் நான் இப்போது யோசித்து எழுதுகிறேனா? அப்படித் தோன்றுகிறதா? இவையாவும் நெஞ்சத்தின் ஆழத்தில் புதையுண்டு அழியா வரம் பெற்ற எண்ணக்குவியல்களில் சில வெளிப்பாடுகள். உள்ளத்தில் ஆழத்தில் பதிந்தவை. அடிக்கடி சிலிர்த்தெழுந்து என்னை உறங்காமல் விழித்திருக்க வைப்பன. உசுப்பி துளிர் கொள்ள வைப்பன. எனது பாரிய நண்பன் பக்கத்து வாங்குக்காரன் பாலையாவுடன் மீட்டுக் கொள்வன. வாழ்வியல் கலைக்கு வித்திட்ட அன்னையின் பாசவலைக்குள் சிக்குப்பட்டால் மீளமுடியுமா?

ஒரு நெருடல் - சம காலத்தின் பாதிப்புக்குள்ளாகிய எமது பள்ளிக்கூடம் எழவேண்டும். வானத்தைத்தான் எல்லையாக வகுக்கவேண்டும். சிகரங்களை எட்டிப் பிடிக்க வேண்டும். முயற்சிகள் தவறலாம், ஆனால் முயற்சிகளைத் தவறவிடலாமா? என்ற கேள்விக் கணைக்கு வீரியமுடன் பதில் சொல்லியாக வேண்டும். சுமைகளுடன் மலையேறுவோர் நாங்கள். சுமைகள் மாறலாம், ஆனால் பயணம்..... தொடரத்தான் வேண்டும் தொடரட்டும் ... தொடரட்டும் .... தொடரட்டும்.

அருட்பணி. ஞா. எட்மன் மைக்கல் அ.ம.தி
புனித வளனார் அ.ம.தி குருமடம்
கொழும்புத்துறை.



2007 ஆசிரியர் தினம்



2007 யாழ் மாவட்ட
பாடசாலைக்கிடையில்
நடைபெற்ற 15 வயதுக்குட்பட்ட
போட்டியில் 2ம் இடம்
பெற்ற போது

குருளைச் சாரணர் சின்னம்
சூட்டுவிழா – 2008





2008ல் திரு அனுராஜ்
என்பவரால் வழங்கப்பட்ட
கால்பந்தாட்ட
அணிக்கான உடைகளை
தந்தை அல்போன்ஸ்
வழங்கியது




2009ல் பழைய மாணவன்
ம. பிராங்கிளினால்
வழங்கப்பட்ட நீர் இறைக்கும்
இயந்திரத்தை
தந்தை மரியதாஸ் வழங்கிய
போது



பாடசாலை பாதுகாவலர் தினம் - 2011
ஆசிரியர்கள் மாணவர்களுக்கு
வாழை இலையில் மதிய
உணவு பரிமாறிய போது

# மாற்றங்களும் மனித வளர்ச்சியும்



ஒரு சமூகம் வளர்ச்சி பெறுவதற்கு மாற்றங்கள் அவசியமானவையாகும். காலத்திற்குக் காலம் சமூகமானது மாற்றங்களைத் தன்னகத்தே ஏற்றுக்கொண்டே வருகிறது. நீண்டகாலத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களும் குறுகிய காலத்தில் ஏற்படும் புரட்சிகரமான மாற்றங்களும் சமூகத்தில் சாதகமான அல்லது பாதகமான தன்மைகளை ஏற்படுத்துகின்றன. பொருளாதாரம், கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றில் இம் மாற்றங்கள் ஏற்பட்டு மக்களைச் சென்றடைய வாய்ப்பேற்படுகின்றன. இம்மாற்றங்களை சமூக உறுப்பினர்கள் உடனடியாக ஏற்றுக்கொள்பவர்களாகவோ அல்லது ஏற்றுக்கொள்ளத் தயங்குபவர் களாகவோ உள்ளனர்.

கல்வி வளர்ச்சியானது நல்ல உறவுகளை உருவாக்க ஆவன செய்ய வேண்டும். குடும்பங்களின் குதூகல வாழ்வுக்கு கல்வி அடித்தளமிட வேண்டும். கல்வி மாற்றங்கள் காலத்தால் அழியாத காத்திரமான காரியங்களை ஆற்றவேண்டும். கல்வியின் நோக்கம் மாணவர்களை எதிர்கால வாழ்விற்கு ஆயத்தம் செய்வதாகும். வீட்டிற்கும், நாட்டிற்கும் நன்மை பயக்கும் துறையாக நற்பிரசைகளை உருவாக்குவதாகும். இக்கல்வி வளர்ச்சியில் அந்தந்த நாட்டுக் கலைத்திட்டங்கள் பெரும் பங்காற்றுகின்றன. இக்கலைத்திட்டங்கள் நாட்டின் தேவைக்கேற்ப மாற்றமடைவது அவசியமாகின்றது. தற்போதைய கல்வியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் கல்வியை வெறும் ஏட்டுக்கல்வி என்ற நிலையில் மாணவர்களை மையப்படுத்தி செயலாற்றுகின்ற துறையாக மாற்றமடைந்துள்ளது. ஏட்டுக்கல்வியுடன் தொழிற்கல்வியையும், பெற்றிருத்தல் மிகவும் அவசியமாகும். ஏனெனில் தொழிற்கல்வியானது. சமுதாயத்திற்கு நன்மைபயக்கும் துறையாக வளம் பெருக்கும். ஏட்டுக்கல்வியை மட்டும் பெற்று வெளியேறும் மாணவர்கள் வெட்டிப்பொழுது போக்கி மனமுடைந்து உளத்தாக்கத்திற்கு ஆளாகும் நிலை ஏற்படுகின்றது. விரக்தியின் விளிம்பிற்கு தள்ளப்பட்ட அவர்கள் தீய வழியில் செல்லவும், வாழ்வா? சாவா? என்ற மன உந்துதலுக்கும் ஆளாகும் துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படுகின்றது.


எமது தமிழ்ச் சமுதாயத்தின் கண்களெனக் கணிக்கப்படும் பல விழுமியங்கள் கால மாற்றத்தினால் கருத்திழந்து காணாமல் போயுள்ளமையை யாரும் மறுப்பதற்கில்லை. மாற்றங்கள் ஒரு பக்கம் நடந்தேறிவரினும் மாற்றங்கள் பல பாதகமான விளைவுகளை விதைத்துள்ளமை விந்தையானவையும் வியப்பானவையுமாகும். இன்று தமிழ்ச்சமுதாயத்திலுள்ள குறைபாடுள்ள விழுமியத் தன்மைகள் பற்றிச் சுட்டிக்காட்டப்படுகின்றன. அவைகள் முறையே தனிநபர் விழுமியம், சமூக விழுமியம், ஆன்மீக விழுமியம், பொது விழுமியம் எனப் பாகுபடுத்தப்பட்டு நோக்கப்படுகின்றன.

சுயநலம், புரிந்துணர்வின்மை, நம்பிக்கைத்துரோகம், பழிக்குப்பழி வாங்குதல், அதிகப் பிரசங்கித்தனம், குருட்டு நம்பிக்கை, பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்து நாசப்படுத்தும் தன்மை, தனிநபர் விழுமியங்களாக எம் மத்தியில் மத்தியப்படுத்தப்பட்டுள்ளன. மாற்றங்கள் எம் மக்களை மாற்றத்துக்குள்ளாக்கி மனித மாண்புகளை மங்கி மக்கிப் போய்விடச் செய்துள்ளன. ஒற்றுமையின்மை, நீதி பேணப்படாமை, மனித மாண்பு மதிக்கப்படாமை, காட்டிக்கொடுத்தல், பொது நலனில் அக்கறையின்மை, அடாவடித்தனம், அறத்திற்கன்றிப் பலத்திற்கு அடங்கிப்போதல், அயலான் வீழ்ச்சியில் அகமகிழும் தன்மை, பெரியோர், முதியோர், ஆசிரியர்கள் மதிக்கப்படாமை, அறநெறிக்கு ஒவ்வாத முறையில் பணம்தேடல், நீண்டகாலம் நிலவிவரும் சாதிப்பிரிவினை. சீதனப்பிரச்சனை, மனித உயிர்கள் மதிக்கப்படாமை, சமூகத்தின் பொது விதிகள் பொது ஒழுங்குகள் கடைப் பிடிக்கப்படாமை என்பன சமூகத்தின் கண் காணப்படும் பாதகமான மாற்றங்களாக இனங்கானப்படுகின்றன. சமூக மாற்றங்கள் சடுதியாக இடம்பெறினும் அதனால் ஏற்படும் பாதகமான விளைவுகள் சமூகச் சீரழிவை ஏற்படுத்துகின்றன.

இந்நிலையில் சமூக வளர்ச்சியில் மாற்றங்கள் அவசியமெனினும் மாற்றங்கள் மனித மாண்பினை மதிக்கும் மாற்றங்களாக மாறவில்லையெனில், மனித வாழ்வு தடம்மாறிச் செல்லும் பயணங்களாக மாறிவிடும் அபாயம் எதிர்நோக்கப்படலாம். எனவே மாணவ சமூக அமைப்புக்கள் இம்மாற்றங்களுடாக உயிருள்ள ஊட்டமுள்ள சமூகங்களாக மாறி மனித வளர்ச்சியை மேம்படுத்தல் வேண்டும். இல்லையெனில் மாற்றங்கள் வெறும் மாற்றங்களாக மாறி மனித வளர்ச்சியைத் தடை செய்யும் கருவிகளாகவே அமையுமேயன்றி வேறில்லை.

சமூக விழுமியங்கள் பல சந்தர்ப்பங்களினால் இன்று சாக்கடைக்குள் தள்ளப்பட்டுள்ளன. புனிதமான சேவைகள் இன்று பொருளீட்டும் தொழிலாக ஒரு சிலரால் அசிங்கப்படுகிறது. பணம் படைத்தோர், பதவியிலிருப்போர், பாசாங்கு புரிவோர்க்கு ஒரு நீதி, ஏழைகட்கு, ஏதிலிகளுக்கு, சாதிகளுக்கு ஒரு நீதியாக சமகால கல்வித்துறை இன்று செல்லரித்துப் போயுள்ளது. ஏன் சில மதக் கோட்பாடுகளும் சுயநலப் போக்கால் அழிவுற்றுப் போகின்றன. கண்ணியப்படுத்தப்பட வேண்டிய ஆசான்கள் ஏளனப்படுத்தப்படும் நிலையும் இன்று காணப்படுகின்றது. ஆசிரியர் மாணவர்கள் உறவுகள், எனும் போது ஆசிரியர், அன்புள்ள தந்தையாக, அரவணைக்கும் தாயாக, கல்வி கற்பிக்கும் வேளையில் கண்ணியம் மிக்க கனவானாக, மாணவர் தவறு செய்யும் வேளையில் ஒரு நண்பனாக இருந்து வழிப்படுத்துவதுடன் கல்விச் சீர்திருத்தத்தால் வளர்ச்சி ஏற்படும் போது ஆரோக்கியமான, ஆனந்தமான சமுதாயம் உருவாகும் என்பது மறைக்கவோ மறுக்கவோ முடியாத உண்மை.

ச. எ. பெர்னாண்டோ



# முயற்சியில் மகிழ்ச்சி அடையுங்கள்

நினைத்ததெல்லாம் நடக்கவில்லை. உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எதிர்பார்த்தவை எல்லாம் நிறைவாக்கப் படவில்லை. விளைவாக மனமுடைந்து கவலையில் மூழ்கிக் கிடக்கின்றீர்களா? வேண்டவே வேண்டாம்.

நடக்காத ஒரு சம்பவத்தை கட்டாயம் நடக்கும என்று எண்ணி ஒரு பக்கச் சார்பாக நடந்து கொள்வது கவலையை அளிக்கும் செயலாகும். உங்களுள் இருக்கும் ஆக்க சக்திகளை, நீங்கள் அன்றாடம் ஆற்றி வரும் நிறைவான செயற்பாடுகளை நினைவிற் கொள்ளுங்கள். இயலாமையையே சதா நினைத்து ஏக்கம் கொள்வதால் ஏற்படுவது கவலையே அன்றி வேறு எதுவாக இருக்கும்.

இல்லாதவை பற்றி எண்ணி ஏன் வீணாகக் குழப்பம் அடைகிறீர்கள்? உங்களிடம் உள்ளவற்றில் மட்டுமே கருத்தாயிருங்கள் கற்பனை செய்யுங்கள்.

உங்களுள் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர முற்படுங்கள்.

**உங்கள் ஆற்றல் திறனை அதிகரிப்பதற்கான உத்திகள்**

- ஒரு நேரத்தில் ஒரு வேலை என்ற கணக்கில் முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்
- எது அவசியமானதோ அதையே முதலில் தேர்ந்தெடுத்துச் செயற்படுங்கள்
- திட்டமிட்டு ஒழுங்குக் கிரமமாகச் செயற்படுவதில் ஊக்கம் காட்டுங்கள்
- உங்களுள் புதைந்து கிடக்கும் ஆற்றல்களைக் கண்டுணர்ந்து அவற்றிற்குச் செயல்வடிவம் கொடுங்கள்.
- பிறர் சிறப்பாக செயற்படுவதைக் கண்ணுற்று எரிச்சலோ, அன்றேல் மனவருத்தமோ அடையாதீர்கள்.
- உங்களதும் பிறரதும் வளர்ச்சியில், முன்னேற்றத்தில் மகிழ்ச்சியை அனுபவியுங்கள்

முடிவு பற்றிப் போதுமான அளவு சிரத்தை கொண்டாலே நீங்கள் அந்த முடிவை அடைவீர்கள்

நீங்கள் பணக்காரராக விரும்பினால் பணக்காரர் ஆவீர்கள். படிப்பாளியாக விரும்பினால் படிப்பாளியாவீர்கள். ஆனால் நீங்கள் உண்மையில் இந்த விஷயங்களுக்கு ஆசைப்பட வேண்டும்.

உலகிலேயே பெரும் பணக்காரரான கோடீஸ்வரர் ஜே.பால்கெட்டி தரும் வெற்றிக்கான இரகசியம் பின்வருமாறு:

கஷ்டப்பட்டு முயற்சி செய்யுங்கள், நிச்சயமாக நீங்கள் வெற்றியடைவீர்கள். தோல்வியை தோற்கடித்து முயற்சியில் முன்னேறுங்கள். கவலையைக் கலைத்து விட்டு முயற்சியில் மகிழ்ச்சியடையுங்கள்.

திரும்பவும் முயற்சி எடுப்பதிலேயே உங்களது உயர்ச்சி தங்கியுள்ளது. என்று எண்ணி ஏற்றம் பெறுங்கள்.....

“இலக்கை முன்வைத்து முயற்சி எடுங்கள்,
அதை அடைய ஆசைப்படுங்கள்,
அதில் வெற்றி நிச்சயமே”.

மே. மேரி ஜெயந்தா
தொண்டர் ஆசிரியர்,
யா/சென் ஜோசப்ஸ் வித்தியாலயம்



## இடைநிலைக்கல்வி, உயர்கல்வி என்பவற்றுக்கு அடி அத்திவாரம் ஆரம்பக்கல்வியே.

ஆரம்பக்கல்வி என்னும் பதம் குறிப்பது யாதெனில், ஐந்து வயது பூர்த்தியடைந்த பிள்ளைகள் ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு ஐந்து வரை பாடசாலையில் பெற்றுக் கொள்கின்ற கல்வியாகும். குழந்தையின் மனதில் கல்வி பற்றிய முதற்பதிவு ஆரம்பக்கல்வியிலேயே ஊட்டப்படுகிறது. "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்று ஔவைப் பிராட்டியார் வலியுறுத்தியுள்ளார். குழந்தையின் மனதில் இளமையில் படிக்கின்ற விடயங்கள் நன்கு பதிந்து விடும். நல்ல பயிற்சி பெற்ற ஆசிரியர்களே ஆரம்பக்கல்வியை வழங்குவதற்குப் பொருத்தமானவர்கள். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பதற்கிணங்க ஆரம்பக்கல்வி அமைதல் வேண்டும். குழந்தையின் கண்களாக எண்ணும் எழுத்தும் உள்ளன. எனவே இவற்றுள் திறனும், ஆற்றலும், விருத்தியும் ஆரம்பக் கல்விக்கு அவசியமானதொன்றாகும்.

ஆரம்பக்கல்வியைப் பொறுத்தவரை ஆசிரியர் வளம், இடவசதிகள், கற்றல் துணைச்சாதனங்கள், நூல் நிலைய வசதிகள் என்பற்றுடன் பெற்றோரின் ஊட்டமும் கவனமும் மாணவர்களின் கல்வி கற்றலுக்கு அவசியமானவையாகும். பெற்றார்களின் பின்னூட்டலில் தான் மாணவர்களின் ஆர்வமும் முன்னேற்றமும் மேலும் உயர்த்தப்படுகின்றது. "பிள்ளையினிடத்து யாதேனும் பாடத்தில் குறைபாடு காணப்படின் இதற்கான அடிப்படைக் காரணமாக மொழியைக் குறிப்பிடலாம்." எனவே மொழிக்கல்வியானது ஆரம்பக்கல்வியில் முக்கியத்துவம் பெறுதல் வேண்டும்.

ஆரம்பக்கல்வியில் கணிதத்திறனை வளர்ப்பதற்கு குழந்தைகள் வீட்டு முற்றத்தில் கடைபோட்டு விளையாடுதல், மண்சோறு கறி ஆக்கி விளையாடுதல் ஆகியன உதவியது. காணித எண்ணக்கருவை வளர்த்தும் வந்தது. இன்று பெற்றோர் குழந்தைகளை, 'மண்ணில் விளையாடினால் பூச்சி பிடித்து விடும்' என அடித்து விரட்டுவா். இதனால் இயற்கையுடன் இணைந்து கணித எண்ணக்கருவை வளர்க்கும் ஆற்றல் குழந்தைக்கு மட்டுப்படுத்தப்படுகின்றது.

இடைநிலைக் கல்வி, உயர்கல்விக்கு எந்தளவிற்கு அடி அத்திவாரமாக ஆரம்பக்கல்வி விளங்குகிறதோ, அதே போல ஆரம்பக்கல்விக்கு அடி அத்திவாரமாக பாடசாலைக்கு முந்திய பாலர் கல்வி முக்கியம் பெற்று விளங்குகிறது. ஆரம்பக்கல்வியில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியரும், பெற்றோர்களும் ஆவர். ஆரம்பக்கல்வியைப் பொறுத்தவரை பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் நெருங்கிய தொடர்பு பேணப்பட வேண்டும். இன்று எம்மத்தியிலுள்ள

பெற்றோர் வசதி படைத்த பாடசாலைகளையே பெரும்பாலும் விரும்பி நிற்கின்றனர். இதனால் எமது பாடாசலையில் மாணவரின் சேர்வு வீதம் குறைவடைகிறது. எமது பிரதேச பாடசாலையை முன்னேற்ற வேண்டுமானால் எம்மத்தியிலுள்ள பெற்றோருடைய மனப்பாங்கு மாறவேண்டும். எமது பிரதேசம், எமது பாடசாலை என்ற பற்று வளர வேண்டும். பெற்றோருக்கும், பழைய மாணவர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் விழிப்புணர்வு ஏற்பட்டால் பாடசாலை முன்னேற்றம் அடையும். இதனால் எமது பிள்ளைகளும் வளம் பெறுவார்கள்.

இப்பாடசாலை பழைய நிலையைப் போல உயர் நிலையில் வளர வேண்டுமானால், இப்பிரதேசமக்கள் அனைவரும் விழிப்புணர்வு பெற்று, தமது பிரதேசப் பாடசாலை என்ற உணர்வுடன், தமது பூரணமான ஒத்துழைப்பை வழங்கிப் பாடசாலை உயர்வு நிலை அடைய உதவி புரிபவர்களேயானால் பாடசாலை வளம் பெற முடியும்.

## ஆரம்பக்கல்வியின் நோக்கங்கள்

1. சுய மொழியில் சிந்திக்கும் ஆற்றலை வளர்த்தல்
2. நன்மை தீமைகளைப் பிரித்தறியும் மனப்பான்மையை விருத்தி செய்தல்
3. சுயமாக ஆக்கங்களின் ஈடுபடக்கூடிய ஆற்றலை வளர்த்தல்
4. ஒரு சமூகத்திற்கு ஏற்றவனாக ஒருவரை உருவாக்குதல்
5. சிறந்த சமூக பழக்க வழக்கங்களை ஏற்படுத்துதல்
6. நாட்டின் ஏனைய சமூகங்களின் பாரம்பரியங்களை மதிக்கும் மனப் பான் மையை ஏற்படுத்துதல்
7. தேசிய ஒற்றுமையைப் பேணுவதற்கான ஆற்றலை வளர்த்தல்
8. தொழிற் கல்வி பெற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
9. ஒழுக்க விழுமியங்களைக் கற்றுக் கொள்ளல்
10. மூதாதையரின் வரலாற்றை அறிந்து அவற்றை பின்பற்றப் பழகுதல்
11. செயற்பாட்டு முறைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தல்

மேற்படி நோக்கங்களுடன், வளர்ந்து வரும் சமூக விஞ்ஞான விருத்திக்கு ஏற்ற இயைபாக்கம் பெறும் உலகைக் கட்டியெழுப்பும் பணிக்கு தம்மை அர்ப்பணிக்கும் சிறந்த மனப்பாங்கையும் கல்வி உருவாக்குதல் வேண்டும்.

## ஆசிரியரின் கடமைகளும் பொறுப்புக்களும்

## நல்லாசிரியரில் மிளிரும் பண்புகள்

* அதிபரோடு ஒத்துழைப்புடன் பணி புரிவார்
* ஆசிரியர் குழாத்தோடு சிறந்த தொடர்பை வைத்திருப்பார்
* மாணவர்களின் நெருங்கிய ஆலோசகராகக் கருமமாற்றுவார்.

* கற்பித்தல் நடவடிக்கைக்காக நித்தம் ஆயத்தத்துடன் வருகை தருவார்.
* மாணவருக்கு உதவுவதில் களைப்படைய மாட்டார்
* பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையேயுள்ள தொடர்புகள் வாயிலாகத் திருப்தியடைவார்.
* பாடசாலைக்குப் புறம்பான கருமங்களின் போது முன்னணியில் நின்று செயற்படுவார்.
* நித்தம் புதியவற்றைத் தேடிய வண்ணம், அவற்றிற்கேற்ப மாற்றமடைவதற்கான சாத்திய வழிகளைத் தெரிந்தெடுப்பார்.

## நல்லாசிரியர் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள்

* பாடசாலை ஆரம்பமாகும் நேரத்துக்குக் குறைந்தது 15 நிமிடநேரமாவது முன்னதாக வருதல்.
* தமக்குரிய நேர சூசியைப் பெற்று, அதன்படி வகுப்புக்குச் சென்று, கற்பித்துப் பாடப்பதிவுகளை மேற்கொள்ளல்.
* தமக்குத் தேவையான பாடம் புத்தகங்கள், கைந்நூல்கள், கணிப்பீடு தொடர்பான வழிகாட்டல்கள் என்பவற்றைப் பெற்று வருடத்திற்குரிய வேலைத் திட்டங்களைத் தயாரித்து மேற்கொள்ளுதல்.
* வேலைத்திட்டங்களை உரிய காலத்தினுள் பூர்த்தி செய்தல். நிறைவேறாத திட்டங்களை மேலதிக வகுப்பு வைத்துப் பூர்த்தி செய்தல்.
* பாடக்குறிப்புக்கள், பாட மேம்பாட்டுத் திட்டங்கள், கணிப்பீட்டுக் கருவிகள் ஆகியவற்றை உரிய முறைப்படி தயாரித்து அதிபர்/பிரதி அதிபர்/பகுதித் தலைவர் ஆகியோரிடம் அங்கீகாரம் பெறுதல்
* மாணவர்களின் பயிற்சிக் கொப்பிகளைத் திருத்தம் செய்தல், ஒப்பமிடல், வீட்டுப் பயிற்சிகள் வழங்கி திருத்துதல்.
* வகுப்பில் நடைபெறும் அனைத்து வேலைகளையும் உரிய பதிவேடுகளில் பதிவு செய்தல்.
* ஆசிரியர்கள் லீவில் செல்ல நேரின் மாணவர்களுக்குரிய செயற்பாடுகளைப் பதிற்கடமையாளருடன் கலந்துரையாடி ஒழுங்கு செய்தல்.

* கற்றல் கற்பித்தல் செயற்பாட்டைப் பயனுறுதித்தன்மை வாய்ந்ததாக ஆக்குவதற்காகக் கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்துதல். பாடசாலைத் தர உள்ளீட்டுக்கான நிதி மூலம் மூலப்பொருள்களைப் பெறுதல்.

* வகுப்பில் உள்ள மாணவர்களின் குடும்ப விபரங்களைப் பேணுதல். மீத்திறன் மாணவர், மெல்லக் கற்கும் மாணவர் ஆகியோருக்கு ஏற்ப வேலைத் திட்டங்களைத் தயாரித்து பயன்படுத்துதல்.

* பாடங்களின் குறிக்கோளுக்கு ஏற்ப தேர்ச்சி மட்டங்களை வரையறை செய்தல், நியதிசார் கணிப்பீடுகளை மேற்கொள்ளல், புள்ளிகளை உரிய வகையில் பதிவு செய்தல்.

* கணிப்பீட்டுக் கருவிகளை முன்னரே திட்டமிடுதல், திறந்த வகையாக இருத்தல். மாணவர்களுக்கு முன்னரே கணிப்பீட்டு முறை பற்றி விளக்கத்தை வழங்குதல், இவை பற்றிய குறிப்புக்களைப் பேணுதல்.

ஆக்கம்
திருமதி. மெ. றொபின்சன்
ஆரம்பப்பிரிவு
யா/சென்.ஜோசப்ஸ் வித்தியாலயம்,
கொழும்புத்துறை.





பாடசாலையின் பாதுகாவலர் தினம்
2010.03.19



2008ல் அ. அனுராஜ் குணதீபன் கொடுத்த
J.C. யை வழங்கும் தந்தை அல்போன்ஸ்



பாடசாலை நூலகத்திற்கு அதிபரினால்
வழங்கப்பட்ட அன்பளிப்பு நூல்களை
கோட்டக்கல்விப் பணிப்பாளர் பொறுப்பேற்று
பாடசாலைக்கு வழங்கி உரையாற்றுகிறார்



2010ல் நடைபெற்ற இல்ல விளையாட்டுப்
போட்டியில் பிரதம விருந்தினர்



150வது வருட நிறைவு சிறப்பு
நிகழ்வுகளான கடல்சார்ந்த
போட்டிகளை ஆரம்பித்து வைக்க
வலக் கல்விப் பணிப்பாளர்
படகில் புறப்பட்ட போது

150வது வருட நிறைவு
இயந்திரப் படகுப் போட்டி
நடைபெற்றபோது






150வது வருட நிறைவு
மரதன் ஓட்டப் போட்டியை
அருட்பணி அந்தோனிமுத்து
ஆரம்பித்து வைத்தபோது

150வது வருட நிறைவு
சைக்கிள் ஓட்டப் போட்டியை
அருட்பணி அந்தோனிமுத்து
ஆரம்பித்து வைத்தபோது



# உன்னை நம்பு

கணனி யுகம் என்று கற்றோரால் பெயர் சூட்டப்பட்டுள்ள இந்த நூற்றாண்டில் மனித நேயம் என்பது மறைந்த பொருளாகி விட்டது. மாண்புகள் மரித்துப் போய்விட்டன. இந்தச் சூழலில் யாரை நம்புவது? என்ற வினா இந்த உலகம் முழுவதும் வியாபித்திருக்கிறது. முதலில் “உன்னை நம்பு” என்பதே இந்த வினாவிற்கான விடையாகும்.

‘உன்னை நம்பு, நீ வல்லவன் உன்னால் எதுவும் முடியும்’ என்கின்றார்கள் பெரியோர்கள். உன்னால் சாதிக்க முடியும் உன்னை நம்பு. சுய நம்பிக்கை மிகுந்து காணப்படுபவன் வெல்வான். உனக்காக யாரும் படிக்க முடியாது. எனவே உன்னை நம்பினால் தான் உலகத்தில் தலை நிமிர்ந்து வாழ முடியும்.

இன்றைய உலகில் ஏமாற்றுக்காரர்களும் வாழ்கிறார்கள் ஏமாற்றப்படுவோரும் இருக்கிறார்கள். நீ இரண்டையும் செய்யாதே. இன்று எமக்கு கிடைத்துள்ள இலக்கியங்கள் யாவையும் அதன் எழுத்தாசிரியர்களின் நம்பிக்கை மூலம் வந்தவை. விஞ்ஞான கண்டு பிடிப்புக்கள் யாவும் விடா முயற்சியோடும், தன்னம்பிக்கையாலும் விளைந்தவை. அன்று எடிசனும் நியூட்டனும் தம்மை நம்பியபடியால் இன்று நாம் இவர்கள் கண்டு பிடித்ததை அனுபவிக்கின்றோம். “வாழ்க்கை என்பது நம்பிக்கையின் அடித்தளமே” இதற்குச் சான்றாக எத்தனையோ பெரியோர்களின் வாழ்க்கை அமைந்துள்ளது. இந்த பெரிய தேசத்தை தன்னால் விடுவிக்க முடியும் என்று நம்பினார் காந்தி. அங்கு அவர் தன்னை நம்பினார். அன்று விடுதலை பெற்றது பாரதம். ஒரு தனி மனிதனின் நம்பிக்கையையே பாரத மாதாவின் விடுதலைக்கு வழிகோலிற்று. அன்று பாரதப் போரிலே அவ்வளவு பெரிய கௌரவ சேனையை தர்மத்தின் மூலம் வெல்லலாம் என்று நம்பினான் தருமன். இராமன் கேட்டவுடன் தன்னால் மலையை தூக்க முடியுமென்று தன்னை பலத்தை நம்பினான் கர்ம வீரன் அனுமான். கடைசியில் அது அவரால் முடிந்தது.

பண்டைய மனிதர்கள் தம்மை நம்பிய பொழுது நாம் ஏன் நம்மை நம்ப முடியாது? நாம் மலையை தூக்க வேண்டாம். கௌரவ சேனையை அழிக்க வேண்டாம் ஒரு சிறிய காரியத்துக்காவது நம்மை நம்புவோமா? படம் கீற வேண்டுமா? ஐயோ என்னால் முடியாது. எனக்கு வராது, ஏன் வராது? இந்த வராது என்ற வார்த்தை சாத்தானின் அகராதியில் உள்ளது. மாவீரன் நெப்போலியனைப் பாருங்கள். அவன், “முடியாது என்ற வார்த்தை என் அகராதியில் கிடையாது” என்று கூறுவானாம் அதனால் அவன் தன் படைவீரர்களுக்கும் உற்சாக மூட்டினான். பல நாடுகளை வென்றான். நெப்போலியனின் தன்னம்பிக்கை இன்று அவன் “வீரத்தின் கதாநாயகனாய்” மிளிர வழி செய்தது. காந்தியை “தேசப்பக்தராய்”

இனங்காட்டியது. தருமனை "தர்மத்தின் தலைவனாய்ப்" புகழ் பெற வைத்தது. இந்த புகழ் பெற்ற வீரர்களையும், தேச பக்தர்களையும் உருவாக்கியது அவர்களின் தன்னம்பிக்கையே.

"தன்னம்பிக்கையில்லாத மனிதன் தரிசு நிலம் போன்றவன்" என்பது பழமொழி. தன்னம்பிக்கை என்ற மூலதனமே வெற்றியின் பொற்காசுகள். இதனால் தான் பெரியோர்களும், சொற்பொழிவாளர்களும் "தன்னம்பிக்கை" என்பதை ஒரு கருப் பொருளாகக் கொண்டு கதைத்து வருகின்றனர். தங்களை நம்பியும் வருகிறார்கள். எனவே இன்றைய போரிடும் உலகம் வேரோடு சாய வேண்டுமானால் "நீ உன்னை நம்பு"

க. யூட்சியானி
தொண்டர் ஆசிரியர்,
யா/சென் ஜோசப்ஸ் வித்தியாலயம்

## கடலோரக் களிப்பு

இயற்கை அன்னையின் வனப்பு
புனித வளனாரின் வளர்ப்பு

பாமர மக்களின் படிப்பு
பார்ப்பவர் கண்ணுக்கு மதிப்பு


கல்வியும் கடலும் சந்திப்பு
கரையோர மாணவர் வசிப்பு

ஆடல் பாடல் விளையாட்டில் நயப்பு
அதிபர் ஆசிரியர் பொறுப்பு

கொலம்பகம் எனும் சிறப்பு
நூற்றைம்பது அகவை வியப்பு

ஆசிரியை
திருமதி. ஜோ. வி. கு. ஆ. ஜோர்ஜியானா
யா/சென் ஜோசப்ஸ் வித்தியாலயம்

# அழகு தரும் அறிவாலயம்



அழகிய ஊர், அன்புறவு கொண்ட சமூகம், ஆன்மீகத் தலங்கள், அறிவுச்சாலைகள், ஒவ்வொரு தனி மனிதனின் உயர்வுக்கும், அச்சமூகத்தின் அடையாளமாக பெருமைக்கும், கௌரவத்திற்கும் அதிக செல்வாக்கு செலுத்துவதை அன்றாடம் நாம் பிறர் தொடர்பாடலால் தெரிந்து கொள்கிறோம்.

எமது நாட்டில் தினசரி தொடர்பூடகங்களால் வரும் செய்திகள் நல்லவை, தீயவை நடப்பவைகளை மக்களின் மன நிலைகளில் கலந்துரையாட முற்படும் போது நல்லவற்றுக்கு உரிமை கோரும் மனம், தீயவை என்றால் அவற்றை எமதென ஏற்க முடியாது ஒதுங்க முற்படுகிறது.

"தம்பி எந்த ஊர்? உங்கட ஊரில தானே ............" "ஓம் அது எங்கட. பாஷையூரிலதான் இருக்கு. "யாழ்ப்பாணத்தில எங்கட கோயில் திருவிழா பெரிதாய் நடக்கும், வந்து பாருங்க ஒருக்கா"

"விளையாட்டுப் போட்டியில் சென். அன்ரனீஸ் வெற்றி பெற்றதாம்" "ஓம் அதில எங்கட அண்ணன்மார்தான் விளையாடினம். பல வருடமா எங்கட பாஷையூர் சென் அன்ரனீஸ் தான் வெல்லுறது." "சென் யோசப் பாடசாலை அங்கதானே இருக்கு" "அது கூட எங்கட ஊர் ஆக்கள் தான் படிக்கிறவையள். எங்கட அப்பா, அவையளிட அப்பு எண்டு பரம்பரையே படிச்ச பாடசாலைதான் அது." என அவர்கள் ஊர் பெருமைகளை சொல்லுவதில் அவர்கள் மனங்களில் எழும் மகிழ்வுக்கு அளவே இராது.

"கோவில் இல்லாத ஊரில் குடியிருக்காதே" என்றோர் பழமொழி உண்டு. கோவில் என்பது ஆன்மீக கோவில் மட்டுமல்ல, அறிவாலயங்களும் தான் அதற்குள் அடங்கும். ஆன்மீக தலங்கள், அறிவாலயங்கள் எந்த ஊருக்கும் பெருமை சேர்க்கும் அடையாள அணிகலன்களே.

அந்த வகையில் கடற்கரைப் பிரதேசமான பாஷையூர் யாழ் மாநகர எல்லைக்குள் ஆன்மீக, அறிவியல் சூழல் நிறைந்த மையத்தில் புனித சூசையப்பர் ஆலயம், முதியோர் இல்லம், குருத்துவக் கல்லூரி, அமலமரித்தியாகிகள் குருப்பயிலகம், வளன்புரம் என புனித சூழலின் மத்தியில் அமைந்தது தான் சென்.யோசப் மகா வித்தியாலயம். இன்று 150வது ஆண்டு நிறைவு காணும் அறிவாலயம்.

ஊர் எங்கும் பல்வேறுபட்ட கல்வித்தலங்கள் இருக்கின்றன. ஆனால் இவ்வாலயத்தின் சிறப்பு பல ஆண்டுகளாக பல்வேறு நிலை கொண்ட சிறப்பைப் பெற்றவையாகும். அதனால் பெருமைப்படும் பாஷையூர் மக்களின் அறிவாலயம், 150 ஆண்டு நிறைவை காண்பதில் பாஷையூர் மக்களோடு, பல்தேசத்தில் வாழும் பலரது மனங்களும், மீட்டுப் பார்க்க புதிய பல உறவுகளும் உரித்துக் கொண்டாடும். அதன் பெருமை பாஷையூர் மக்களுக்கு மகிழ்வை தரும் காரணங்கள் பலவாகும்.

150 ஆண்டுகள் பல்வேறுபட்ட மக்களின் கல்விக்கு வித்திட்ட இதன் சிறப்புகள் பல தலைமுறைகள் உயர் நிலையில் கல்வி, ஆன்மீக உலகிலும், வெளி உலகிலும், சமூக நிலையிலும், வாழ்ந்த பரம்பரைகளை வளர்த்த பெருமை, சிறந்த தலைமைத்துவ வழிகாட்டிகளைக் கொண்டதாகும். இச்சிறப்பில் அருட் சகோதரர்களால் ஆரம்பிக்கப்பட்டு முன்னாள் ஆயர் அமரர் தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆசிரியராக, அதிபராக இருந்தது போல், பல்வேறுபட்ட உயரதிகாரிகள் கல்விப்புலத்தில் இருந்து ஆசிரிய பயிற்சிக் கல்லூரியாக திகழ்ந்த வரலாறு வெளி மாவட்டங்களிலுமுள்ளோரின் கற்றவர்கள், கற்பித்தவர்களின் கூற்றுக்கள் பாஷையூர் மண்ணுக்கு பெருமை சேர்க்கும்.

இப்பெருமைகளை ஏற்கும் பாடசாலை, விளையாட்டுத் துறையிலும், அறிவியலிலும், ஆன்மீகத்திலும், பலரை உருவாக்கி யாழ்மாவட்டத்தின் சிறப்புக்கும் பலரை அறிமுகப்படுத்திக் கொடுத்து பெருமை கொண்டதை பலரது மனப்பதிவுகள் வெளிப்படுத்தும்.

இப்பெருமை, சிறப்புகள் பழங்கதை பேச்சுக்களாகி விடுமா? இக்கல்வித் தலத்தின் சிறப்பை எமது ஊர் சிறப்பு என உரிமை கோரும் ஒவ்வொரு உள்ளங்களும் அதன் வளர்ச்சிக்கு தளர்ச்சி ஏற்படாது காக்கும் பொறுப்பும் தமதானது என்பதை ஏற்று செயல்பட கல்வி விழிப்பூட்டலில் அதிக பங்காற்ற வேண்டிய தேவை இக்காலத்தின் கட்டாயமாகவே உள்ளது.

150வது ஆண்டு நிறைவைக் காண்பது ஓர் அசுர சாதனைதான். அதன் சிறப்பைப் பாதுகாத்து வளர்ப்பதில் தனிமனித முயற்சியாக இராது, எமது சமூக சமய, சூழலின் சிறப்பின் பங்காளர் என்ற வகையில் உணர்வுள்ள ஒவ்வொருவரது பங்களிப்பும் கட்டிடங்களை விட கல்வித்தரத்தை உயர்த்தவும், நல்ல தலைவர்களை உருவாக்கவும் வித்திடவைக்கும் என்பதில் ஐயமில்லை.

நவீன வளர்ச்சி கண்டு, மாறும் உலகில் நம்மிடம் இருக்கும் அரிய அறிவாலய வளர்ச்சியின் பங்காளர்களாக பாஷையூர் மக்களின் மன நிறைவான சிந்தனைகள், படிக்கும் பிள்ளைகளின் பெற்றோர் மட்டுமல்லாது சமூக, சமய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ஊர் மக்களும் தங்களின் அறிவாலயம் எமது சமூகப்பிரதிபலிப்பை உருவாக்கும் அடையாளச் சின்னம் என்பதில் பொறுப்புள்ள உணர்வுபூர்வமான பங்களிப்புக்களே சிறந்த பிரகாசமான அறிவூட்டும் ஒளித்தலமாக மாற்றவல்லது.

இம்முயற்சியின் பதிவுகளாக மீள்பார்வை செய்யும் 150வது ஆண்டு மலர் ஓர் வரலாற்று பதிவு ஆவணம் மட்டுமல்லாது இனிவரும் ஆண்டுகளில் புதிய பதிவுகளால் சமூக, சமய, விழுமியங்கள் மண்ணுக்கும் மக்களுக்கும் புத்தெழுச்சி காணும் அடையாளமாகத் திகழும்,

இப்பணியின் முயற்சியில் முன் நின்று உழைக்கும் சென்.யோசப் வித்தியாலய அதிபர், கலைஞன் வின்சன் அவர்களோடு துணை நின்று உழைக்கும் ஆசிரியர்கள், அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களோடு அறிவாலய பற்றுடையோரால் புனித யோசப் வித்தியாலயம் பல்துறையால் சிறந்து மிளிர வாழ்த்துவதில் மகிழ்வடைகிறேன்.

**யோசப் பாலா**
எழுத்தாளர்.

# அலங்கார மீன் வளர்ப்பு

மீன்களின் பொருளாதார முக்கியத்துவம் அவை உணவுக்காக பயன்படுத்துவதில் மட்டும் தான் தங்கியுள்ளது. எனும் கூற்று ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதல்ல. இன்றைய காலகட்டத்தில் வீடுகளிலும், பொது இடங்களிலும், சிறிய தொட்டிகளிலும் மீன்களும், தாவரங்களும் வளர்க்கப்படுவது ஒரு வகைப் பொழுது போக்காக மாறிவிட்டது. இவ்வாறு அலங்காரத் தேவைக்காக பல துறைகளும் விருத்தியடைந்து கொண்டு வருகின்றன. அதாவது மீன்கள் வளர்க்கப்படும் போது அதனுடன் தொடர்பான மீன் விற்பனை, இனம் பெருக்குதலும் இனக்கலப்பும், நோய்களை குணமாக்கல், உணவு, தொட்டியமைத்தல் தொட்டிக்குத் தேவையான உபகரணங்களின் உற்பத்தி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

15ம் நூற்றாண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் தொட்டியில் மீன் வளர்க்கும் முறையானது ஒரு வகை மனச்சாந்தியையும், சிலவகை நோய்களையும் குணமாக்கும் இயல்பைக் கொண்டுள்ளதென வைத்தியர்கள் கருதுகிறார்கள். மீன் தொட்டியில் வளர்க்கப்படும் மீன்களை மையமாக வைத்து மீன் தொட்டிகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

* குளிர்வலய நன்னீர் மீன்தொட்டி
* வெப்ப வலய நன்னீர் மீன்தொட்டி
* கடல் நீர் மீன் தொட்டி

ஒரு சாதாரண மீன் தொட்டியானது பின்வருமாறு அமைக்கப்படும். மூன்று பக்கமும் சீமெந்தினாலும் ஒரு பக்கம் கண்ணாடியினாலும் அமைக்கப்பட்டு ஒரு வகைப் பதார்த்தம் கண்ணாடியையும், சீமெந்துச் சுவர்களையும் ஒட்டப் பயன்பட்டது. இது ஒரு ஆரம்பகால முறையாகும். தற்காலத்தில் தொட்டியின் அடிப்பகுதி சீமெந்தினாலும் நான்கு பக்கமும் கண்ணாடி இடப்பட்டு விளிம்புகள் ஒரு வகை சிலிக்கன் கொண்ட பதார்த்தத்தால் ஒட்டப்பட்டு விற்பனைக்கு விடப்படுகின்றன.

பொதுவாக மீன் வளர்ப்பிற்கு செவ்வக வடிவான தொட்டிகள் நீண்டகாலப் பயனைத் தரக்கூடியவை. சாதாரண அலங்கார மீன் தொட்டியின் அளவு நீரின் தன்மைக்கேற்பவும், வசதிக்கேற்பவும் வேறுபடும். இதனுள் வெவ்வேறு அளவுள்ள சிறு கற்கள், தாவரங்கள் நிலைத்து ஊன்றுவதற்கு உதவுவதோடு சில மீன்கள் முட்டையிடுவதற்கு கூடு கட்டவோ புணர்ச்சிக்கான மறைவிடமாகவோ மாற்றியமைக்கக் கூடியது. அத்துடன் வடிகட்டி, நீரைத் தூய்மையாக்குவது, கழிவுப் பொருட்களை பிரிந்தழியச் செய்யும் செயற்பாடுகள் எல்லாம் நடைபெறும். இருளான நேரங்களில் தொட்டியை ஒளியேற்ற மின்குமிழ் பொருத்தப்படலாம். குளிர்வலய மீன் தொட்டியில் வெப்பமானி, வெப்பமேற்றி போன்றவை வெப்பநிலை

மாற்றத்தை அறிந்து சீர் செய்வதற்காக பாவிக்கப்படவேண்டும். ஆனால் எமது நாட்டின் அறை வெப்பநிலை $28^{0}C$ இல் ஆண்டு முழுவதும் மாறாமல் இருப்பதால் இந்த உபகரணங்களை தொட்டியில் வைக்க வேண்டிய அவசியமில்லை.

அடுத்து தொட்டியில் வளர்க்கப்படும் மீனினங்கள் பற்றி நோக்கும் போது அலங்கார மீன்கள் ஒரு மீனில் காணப்படக்கூடிய அடிப்படை அமைப்புக்களைக் கொண்டிருப்பதுடன் நிறம், செட்டைகளின் விசேட இயல்பைக் காட்டுவதால் அழகானதாக பல வண்ணம் கொண்டதாக காணப்படுகின்றன. இந்த அலங்கார மீன்களின் நடத்தைகள், சிறியவர்களின் ஆர்வத்தை கவருவனவாகும். அதாவது உணவு உட்கொள்ளும் முறை, முட்டையிடல், ஆண் பெண் புணர்ச்சிக்கு முன் காணப்படும் கவர்ச்சி நடனம், சண்டையிடல், வெளித் தூண்டுதலுக்கான தூண்டல்பேறு போன்றவையாகும்.

நன்னீர் மீன் தொட்டியில் வளர்க்கப்படும் மீனினங்களாக ஏஞ்சல், பைற்றர், மோலி போன்றவறை குறிப்பிடலாம். கடல்நீர் மீன் தொட்டியில் மீன்கள் கடற்தாவரங்கள், சிலெந்திரேற்றா, கடலனிமணி, கடல்விசிறி, கடற்பேனாக்கள் மற்றும் இறால், நண்டு, நட்சத்திரமீன் போன்றவை வளர்க்கப்படும் போது சிக்கல்கள் ஏற்படுகின்றன. கடல் நீரின் ஒட்சிசன் வாயுவின் கரையும் தன்மை நன்னீரை விட 1/5 பங்கு குறைவாக மீன்தொட்டிக்கு தொடர்ச்சியாக 24 மணிநேர மிகச் சிறந்த காற்றோட்டம் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு நடைபெறாவிட்டால் கடல்நீர் மீன் தொட்டி வளர்ப்பாளர்களுக்கு நட்டத்தை ஏற்படுத்தும். இலங்கையில் அழகான கடல்விலங்குகள் ஏற்றுமதிக்காக பிடிக்கப்படுகின்றன. இவ்வியாபாரம் இன்று வரை திருகோணமலையில் நடைபெறுகிறது. கடல்நீர் மீன் தொட்டியில் கடலினமணி மீன், கடற்குதிரை, மொரிஸ்மீன் போன்ற மீனினங்கள் வளர்க்கப்படுகின்றன.

தொட்டியில் வளர்க்கப்படும் தாவரங்களைப் பொறுத்தவரையில் அவை மீனினங்களின் வகைக்கேற்பவும், தொட்டியின் நீரிற்கேற்பவும் வேறுபடலாம். வளர்க்கப்படும் தாவரங்கள் நீரில் மிதப்பதாகவோ, வேரூன்றியதாகவோ, அமிழ்ந்து, மிதப்பதாகவோ இருக்கலாம். உதாரணமாக வலிசினேரியா, லெமனா போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை ஒளித்தொகுப்பில் வெளியிடும் ஒட்சிசன் வாயுவை மீன்கள் சுவாசிக்கின்றன. மீன்கள் சுவாசத்தின் போது வெளியிடும் காபனீரொட்சைட்டு தாவரங்கள் ஒளித்தொகுப்பிற்குப் பாவிக்கப்படுகின்றன. இத்தாரவங்கள் மீன்களுக்கும் உணவாகவும், மறைவிடமாகவும் காணப்படுகின்றன. மேலும் தொட்டியை அலங்கரிக்க நன்றாகக் கழுவப்பட்ட முருகைக்கல், கடற்சிப்பிகள் போன்றவற்றை பாவிக்கலாம்.


தொட்டியில் வளர்க்கப்படும் மீன்களின் உணவினை நோக்கும் போது வெள்ளைப் புழுக்கள், மண்புழு, நுளம்புக்குடம்பி ஆகியவற்றை இயற்கை உணவாகக் கொடுக்கப்படலாம். தற்போது நுண்துணிக்கைகளாக செயற்கை


மீனுணவுகள் கிடைக்கின்றன. இவற்றை மீன்களுக்கு வழங்கும் போது உணவினளவு, நேரம் என்பன மீன்களின் உணவுப் பழக்கத்திற்கேற்ப வேறுபடும்.

தொட்டியில் வளர்க்கப்படும் மீன்களுக்கு நோய்களும் ஏற்படலாம். எனவே சிறந்த முகாமைத்துவ முறை முக்கியமானது. வைரசு, பக்றீரியா, பங்கசு, நிமற்றோடா போன்றவை ஒட்டுண்ணிகளாக நோய்களை ஏற்படுத்துகின்றன. இவ் ஒட்டுண்ணித் தாக்கத்தினால் வெள்ளைப்புள்ளி நோய், வெல்வெற்நோய், செட்டை அழுகல், செதில் விழல் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

இருப்பினும் அலங்கார மீன்வளர்ப்பானது பொழுதுபோக்கிற்காகவும், அந்நியச் செலாவணியைப் பெற்றுத்தருவதாகவும் காணப்படுகிறது. இவ்வளர்ப்பின் வெற்றியானது மீன்களின் நடத்தை, இனப்பெருக்கம், உணவு, போசணைச்சத்து, நோய்களைக் குணமாக்குதல், போன்ற பல்வேறு அறிவுடன் கூடிய முகாமைத்துவம் இருக்கும் போது ஏற்படும். அத்துடன் கல்வி கற்கும் மாணவருக்கு அறிவூட்டும் பொழுதுபோக்காக இருப்பதோடு, எமது பிரதேச மீனவர்களின் மத்தியில் தொழில் வாய்ப்பைப் பெற்றுத்தரும் ஊடகமாகவும் பயன்படுத்த முடியும்.

ஆக்கம்
**செல்வி ஞா. ஜெயசுபாஜினி**
ஆசிரியர்
யா/ கொழும்புத்துறை சென் ஜோசப்ஸ்வித்தியாலயம்





# பாடசாலையும் பெற்றோரும் (ஒரு கண்ணோட்டம்)

யா/கொழும்புத்துறை புனித ஜோசப் வித்தியாலயம்! கல்வியுலகிலே தனக்கென ஒரு வரலாறு படைத்த நிறுவனம்! ஆளுமையை வளர்த்து மாணவர்களை ஆளாக்கி வைத்த அறிவாலயம்! புனிதவளனாரின் பிரசன்னத்தில், புகழின் ஏணியிலே ஏறி நின்ற இப்பாடசாலை நூற்றியைம்பதாவது வருட நிறைவைக் கொண்டாடுவதைக்கண்டு எம் இதயங்கள் விம்முகின்றன.

1950ஆம் ஆண்டு தைத்திங்கள் நான் 6ஆம் வகுப்பில் கல்வி கற்பதற்காக இப்பாடசாலைக்குள் நுழைந்தேன். அமைதியுறங்கும் களம், ஆற்றல் நிறைந்த ஆசிரியர்கள், அன்பான மாணவர் கூட்டம், இன்று நினைத்தாற் கூட என் சிந்தையணு ஒவ்வொன்றும் சிலிர்க்கின்றது. 600 மாணவர்களுக்கும் கூடுதலாகக் கல்வி கற்ற ஒரு பாடசாலையாக அது நிமிர்ந்த கல்விச் செருக்குடன் விளங்கிய காலத்தை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது.

புகழ்பூத்த அதிபர்கள், புலமைசான்ற ஆசிரியர்கள், பழகுதற்கினிய மாணவர்கள். இவர்களுடன் வாழக்கிடைத்த அந்தப் பொழுதுகளோ உன்னதமானவை.

பெற்றோரின் தாழாத பங்களிப்பினால் தான் பாடசாலை, முன்னேற்றத்தின் உச்சங்களை எட்டிப்பிடிக்கும் என்பதை மறுப்பதற்கு எவருமில்லை. ஆரம்ப நாட்களில் இத்தகைய பங்களிப்பு இப்பாடசாலைக்கு நிறைவாகவே கிடைத்தது. பாடசாலை அபிவிருத்திச்சங்கம் என்பது பாடசாலை வளர்ச்சியை மையப்படுத்தி ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பு. எந்தவொரு பெற்றோரும் இவ்வமைப்பில் உறுப்பினராக இருப்ப தோடமையாமல், “இது எங்கள் பாடசாலை” என்ற நினைவை உள்வாங்கிக் கொண்டு ஒத்துழைப்பு நல்கவேண்டும். காத்திரமான முயற்சிகளில் கருத்து முரண்பாடுகளைத் தூர எறிந்து அனைவரும் தோள் கொடுத்து உழைப்பதால் தான் பாடசாலை அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்ல முடியும். இதனாலன்றோ, “நாட்டையும், பாடசாலையையும் நேசிக்கத் தெரியாத ஒருவனால் முழுமை பெற்ற சேவையாளனாக முடியாது” என்பார் இந்திய சட்டமேதை கலாநிதி அம்பேத்கார்.

பாஷையூர், கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, பாண்டியன்தாழ்வு, கொய்யாத் தோட்டம், குருநகர் முதலிய அயற் கிராமங்களிலும், மண்டைதீவு, தாளையடி, செம்பியன்பற்று, கட்டைக்காடு, பலாலி, மயிலிட்டி முதலிய ஏனைய பகுதிகளி லிருந்தும் வசதி குறைந்த மாணவர்கள் பலர் இப்பாடசாலையை நாடி வந்து அறிவை வளர்த்ததோடு தங்களின் எதிர்காலத்தையும் அடையாளப் படுத்திக் கொண்டனர். பேராசான் சங். பி. பேதுருப்பிள்ளை, பண்டிதர் ஆ. யோசேப்பு,

ம. ஞானப்பிரகாசம் போன்ற அதிபர்களின் வழிபாட்டலிலே க.பொ.த (சா/த) பெறுபேறுகளில் தொடர்ந்து பல வருடங்களில் இப்பாடசாலை முன்னணி வகித்த தென்பது மனங்கொள்ளத்தக்கது.

கல்வியில் புலமை எய்துவதற்கு கலைகளும் கைகொடுக்குமென்பது உண்மையின் தரிசனம். கலையைக் கட்டியெழுப்புவதற்குரிய வளங்கள் அருகிக் காணப்பட்டாலும், ஆசிரியர், மாணவர்களிடையே தலையெடுக்கும் ஆர்வ மேலீட்டினால் நாடகம், கூத்து போன்ற நிகழ்வுகள். இப்பாடசாலையில் அவ்வப்போது அரங்கேறிக் கொண்டுதானிருந்தன. பேச்சு, பாடல், உரையாடல் என்பனவும் மாணவர்களிடையே முத்திரை பொறித்த நிகழ்வுகளாக இடம் பெற்றன. மாணவர் தோர்ச்சிச்சங்கம் இவற்றுக்குக் களமமைத்தது.

1948ஆம் ஆண்டு வீரத்துறவி (அருளப்பர்) என்ற நாடகமும், 1950ஆம் ஆண்டு யாக்கோபும் பன்னிரு புதல்வர்களும் என்ற நாடகமும். 1952ஆம் அண்டு ஊதாரிப்பிள்ளை என்ற நாட்டுக்கூத்தும் மாணவர்களால் அரங்கேற்றப்பட்டதைப் பார்த்து மகிழ்ந்தவன் என்ற பெருமை எனக்குண்டு. 2009ஆம் ஆண்டு வைகாசித்திங்கள் வன்னி மண்ணிலே கொத்துக் கொத்தாகத் தமிழ் உறவுகள் செத்தொழிந்த நிலையிலும், எமது மண்ணின் மைந்தர்கள் இக்கலைக்கு வாழ்வளிக்கத் தயங்கியதில்லை. சவால்கள் பலவற்றுக்கு முகங்கொடுத்த போதிலும், சலிக்காது எங்கள் பாடசாலை கலைப்போட்டிகளில் முன்னணி வகித்த தென்பதை யாவரும் அறிவர்.

தொடர்பாடலும் கல்வியை வளர்த்தெடுப்பதற்கு உறுதுணையாக விளங்குகின்றதென்பதில் இரு கருத்துக்கு இடமேயில்லை. கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் சென்று, வெளியுலகத் தொடர்புகளை மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதிலும் இப்பாடசாலை தடம் பதித்ததென்பதைச் சொல்லித்தானாக வேண்டும். 1950ஆம் ஆண்டு நிகழ்ந்த யாழ்.மாவட்டக்கல்விச் சுற்றுலாவில் மாணவர்கள் கலந்து கொண்டு மகிழ்ந்தது இன்றுங் கூட என் நினைவில் இனிக்கின்றது.

ஊர்காவற்துறை, கடற்கோட்டை, காரைதீவு மீன்பதனிடும் தொழிற்சாலை, வட்டுக்கோட்டை சவுக்குக் கடற்கரை, பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, தோலகட்டி ஆச்சிரமம், வல்லிபுரக்கோயில், செம்பியன்பற்று முதலிய இடங்களைத் தரிசித்த மகிழ்வை மாணவர்கள் முகங்கள் காட்டின. தகவல் தொடர்பினாலும், கேட்டல், காணல் முதலிய தொழிற்பாடுகளி னாலும், கல்வியின் உச்சப்பயனை மாணவர் பெற்றுக்கொள்வர் என்பது திண்ணம்.

அறிவுத்தேடலில் மட்டும் காலத்தை விரயமாக்காமல் மன வளர்ச்சியுடன், உடல் வளர்ச்சியையும் இலக்காகக் கொண்டு பெறுவது தான் பயனுள்ள கல்வி. சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், சமூகப்புரிந்துணர்வு என்ற மனித விழுமியங்களை

விளையாட்டு ஒன்றேதான் மாணவர்களின் மனப்புலத்தில் தூவி விதைத்து விடுகிறது. கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் முதலியவைகளிலும் பங்கு பற்றிய இப்பாடசாலை 1952ஆம் ஆண்டிலும், 1953ஆம் ஆண்டிலும் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் பல வெற்றிச் சாதனைகளை ஈட்டியுள்ளதென்பது தித்திப்பான செய்தியாகும்.

பாடசாலை வளர்ச்சி என்பது அதிபர், ஆசிரியர்கள், மாணவர் என்போரது அயராத உழைப்பில் மட்டும் தங்கியிருப்பதல்ல. மாறாகப் பெற்றோரின் தளராத முயற்சியிலும் தங்கியுள்ளது. அபிவிருத்திச்சங்கம் என்பது பாடசாலைக்கு ஆணிவேர் போன்றது. உறுப்புரிமை பெற்றவர்கள் தவறாது பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். இவ்வேளையில் "கூட்டமா, நேரமில்லையே கலந்து கொள்ள" என்று விபரங்கெட்டதன்மையாகக் கூறும் எத்தனையோ பெற்றோரை நாம் பார்க்கின்றோம். "இது உங்கள் பாடசாலை! இங்கு கற்பவர்கள் உங்கள் பிள்ளைகள்" என்ற உணர்வு உங்களை விட்டு நெடுந்தூரம் விலகிவிட்டதா? ஒரு சிலரின் இந்தத் தவறான போக்கு ஊக்கமுள்ள ஏனையோரின் வயிற்றில் புளியைக் கரைத்து விடுமல்லவா. தமிழர்களிடமுள்ள ஒரே பலவீனம் இதுதான். இவ்வேளையில் "விதியே! விதியே! தமிழ்ச்சாதியை என்ன செய்ய நினைத்தாய்?" என்ற பாரதியின் கவிதைவரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

பாடசாலை முன்னேற்றத்தின் உச்சியைத் தொடுவதற்கு நிர்வாகத்தினருடன் பெற்றோருக்கு இடையறாத்தொடர்பு இருந்தேயாக வேண்டும். வன்னித்திருநாட்டை இழவுக்காடாக்கிய வக்கிரத்தன்மை உலாவந்த வேளைகளில்கூட இப்பாடசாலை நிமிர்ந்து நிற்பதற்கு எம்மவர்கள் தோள் கொடுத்தது போல தங்கள் மேலான பங்களிப்பை எல்லோரும் தரவேண்டும். இங்கு கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவனும் எதிர்காலத்தில் சாதனையாளனாக உயரவேண்டும் என்ற எண்ணக்கருவை நாம் எல்லோரும் மனதில் பதிப்போமாயின் இப்பாடசாலை மேலோங்கி வளருமென்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை.


மு.சிங்கராயர்
(பழைய மாணவன்)



2010 இல்லப் போட்டி - கடலில் நடத்தல்




2011ல் யா/கொழும்புத்துறை சென். ஜோசப்ஸ் வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டியில் மாணவர்கள் அணிவகுப்பு நிலைக்கு வருகின்றனர்



2011 கணனி வகுப்பு ஆரம்பம்

# மாணவர் ஆக்கங்கள்

## 2007ல் சித்திரக் கண்காட்சி










# புனித சூசையப்பர் வித்தியாலயம்

1925ல் பிறந்தேன். முதுமை நன்றாகத் தெரிகிறது. எனது வீட்டு வளவுக்கும், புனித சூசையப்பர் வித்தியாலய வளவுக்கும் இடையே ஓர் ஓலை வேலிதான் இருந்தது. இப்போ உள்ள ஒழுங்கை இருக்கவில்லை. மாணவர் படிக்கிற, பாடுகிற சத்தம் நன்றாகக் கேட்கும். 1930ம் ஆண்டு பாலர் வகுப்பில் சேர்ந்தேன். பத்து வருடங்கள் படித்தேன். 1939ம் ஆண்டு முடிவில் சிரேட்ட தராதரப் பரீட்சையில் (S.S.C) சித்தியடைந்தேன். 14 வயது. அக்காலத்தில் தமிழ் கற்ற மாணவனுக்கு உயர்கல்வி வாய்ப்பு கிடையாது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலம். 17வது வயது கடந்தால் ஆசிரிய கலாசாலையில் சேர்ந்து பயிற்சி பெறலாம். அல்லது படிப்பை நிறுத்தி விட்டு பரம்பரைத் தொழிலைத் செய்யலாம். நான் ஆங்கிலக்கல்வி கற்க விரும்பி புனித சம்பத்திரியார் கல்லூரிக்குப் போனேன். அங்கு வண பிதா லோங் என்பவர் அதிபராக இருந்தார். அவர் ஒரு வெள்ளைக்காரர். ஆரம்பப்பாடசாலை அதிபராக வண. பிதா அகஸ்தீன் என்பர் இருந்தார். அவர் "தம்பி, நீர் படிக்க விரும்புகிறீர். உம்மை தமிழ் தெரியாத ஒரு பறங்கியரின் வகுப்பில் சேர்க்கிறேன். அவர் ஐந்தாம் வகுப்பு ஆசிரியர். அங்கிருந்து கொண்டு நாலாம் வகுப்பு ஆங்கிலத்தையும் படிக்கலாம்." என்றார். ஆசிரியர் பெயர் C.W.W. அல்வினஸ் என்பவர். இந்த ஏற்பாடு எனக்கு மிகப் பயன்தருவதாய் அமைந்தது. வண. பிதா அகஸ்தீனை நன்றியோடு நினைவு கூருகிறேன்.

யாழ்ப்பாணத்தை முன்பு மணற்றி என அழைத்தனர். இங்கு கி.பி 5ம் நூற்றாண்டளவில் பாகியன் என்கிற சீன யாத்திரிகன் வந்தான் எனத் தெரிகிறது. (ஆதாரம் : Island செய்தித்தாள், 12 யூலை, 1989, "Sri Lanka's Buddhist connections through the Ages" சில பெறுமதி மிக்க ஆவணங்கள் இருந்தன. யுத்தகால இடப்பெயர்வின் பின்னர் அவை தொலைந்து விட்டன) அப்போது கொழும்புத்துறைக்கு அவர் வந்துள்ளார். இவ்விடம் யம்புக்கோலா என அழைக்கப்பட்டதாம். துறைமுகம் மிக ஆழமாகவிருந்ததாம். பல பாய்க்கப்பல்கள் நங்கூரமிட்டு நின்றனவாம். அவை இங்கிருந்து யானைகள், யானைத்தந்தங்கள், சங்குகள், சாயமிடும் அவுரிகள் முதலான பொருட்களை ஏற்றிக்கொண்டு, ஆனையிறவுக்கடலூடாக, கிழக்கே உள்ள பர்மா, சீயம், கம்போடியா, யாவா போன்ற நாடுகளுக்குப் போய் விற்றுவிட்டு, பர்மாவிலிருந்து தேக்கு, அரிசி வகையை ஏற்றிக்கொண்டு இங்கு வருமாம். பர்மா தேக்கு மிகப் பிரசித்தமானது. முதிர்ந்த பெரிய தேக்கு மரங்கள் கப்பல் செய்யப் பயன்படும். இலகுவில் உக்க மாட்டா. வேலை செய்ய சுகமானவை. பாரம் குறைந்தவை. பர்மா அரிசிகளில் முத்துச்சம்பா, சீரகச் சம்பா, அரிக்கன் அரிசி போன்றவை மிகச் சுவையானவை. நறுமணம் உள்ளவை.

கி.பி 13ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை விஜய கலிங்கத்து அரசன் ஆட்சி செய்தான் இவனை கூழங்கைச் சக்கரவர்த்தி எனவும் அழைப்பர். இவர், தேவை கருதி, தமிழ் நாட்டிலிருந்து பல தொழில்சார் மக்களை அழைத்து வந்து இங்கு குடியேற்றினார். சைவ ஆலய வழிபாட்டுக்காக பிராமணர், பண்டாரிகள், மடப்பள்ளியார், ஓதுவார், மேளக்காரர் எனப்பலரையும் கொண்டு வந்தார். பஞ்சகர்மா என அழைக்கப்பெற்ற கொல்லர், தச்சர், தட்டார், கன்னார், சிற்பிகள் என்பவர்களையும், நெசவுத் தொழில் செய்வோரையும் இங்கு குடியேற்றினார்.

கொழும்புத்துறை மேற்கில் சைவ வேளாண் செட்டிகள் என அழைக்கப் பெற்ற ஒரு சாதியினரைக் குடியேற்றினார். இவர்களில் சிலரை நல்லூர், சுழிபுரம், மட்டுவில் போன்ற இடங்களிலும் குடியேற்றினார். இவர்களின் தொழில் விவசாயம். இங்கு குடியேறியோரின் வயல்கள் பெரிய அளவில் பூநகரியில் இருந்தன. இன்று சாமியார் வீதி என அழைக்கப்படும் வீதி முன்பு செட்டிய தெரு என்றும், பின்னர் அனாதைகள் விடுதி வீதி எனவும் அழைக்கப்பட்டது. இம்மக்கள் தமிழ் நாட்டின் தஞ்சை மாவட்டத்தில், சீர்காழி என்கிற தலத்துக்கு தெற்கேயுள்ள திருமருங்கூர் என்கிற ஊரிலிருந்து வந்தவர்கள். இவ்விபரங்களைத் தரும் தோம்புகள் இன்றும் உள்ளன. இங்கேயுள்ள விநாயகர் ஆலயத்தை 1621இல் இங்கு வந்த போர்த்துக்கேய தளபதி பிலிப் ஒலிவியரா என்பவர் இடித்து விட்டார் என்றும், ஆலய அர்ச்சகர் கொல்லப்பட்டார் என்றும் வரலாறு உண்டு.

இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த எந்து முன்னோரைச் சேர்ந்த சதாசிவம் என்பவர் சூசையப்பர் ஆலய வளாகம், பத்து ஏக்கர் நிலத்தை, திருச்சபைக்கு விற்றார் என பரம்பரையாகப் பேசுவர். அவரின் வீடு புனித சூசையப்பர் ஆலயத்துக்கு எதிரே இருந்தது. அங்கே கத்தோலிக்க அருட்சகோதரர் இருந்தார்கள். இவர்கள் தான் பாடசாலை வளாகத்தை நிர்வகித்து வந்தார்கள். இவர்கள் மிகவும் சேவை மனப்பான்மை கொண்டவர்கள்.

1930 வரை இங்கு பங்குத்தந்தையராய் வெள்ளையர் இருந்துள்ளார்கள். கடைசியாக கோட்டியர் என்பவர் இருந்தார். அதன் பின் நம்மவர் பங்குத்தந்தையராய் இருந்தனர். வண பிதாக்கள் நல்லையா, ஆசீர்வாதம், எமிலியானுஸ்பிள்ளை, சிங்கராயர், யோசெப், தியோகுப்பிள்ளை என்பவரும் பின்னர் பிஷப் ஆண்டகைகளாகச் சென்று விட்டார்கள்.

அருட்சகோதரர்களுள் போல், பற்றிக், இக்னேசியல், எட்வேட், ஜெறாட் என்போர் மடத்தில் இருந்தார்கள். மரியதாஸ் என்பவர் ஆசிரிய கலாசாலையில் ஆசிரியராகவிருந்தார்.

புனித சூசையப்பர் பாடசாலை முன்பு சாதாரண பாடசாலையாக இருந்தது. இங்கே அருட் சகோதரர் சிலர் ஆசிரியர்களாக சேவை செய்தனர். தலைமை ஆசிரியராக பேதுருப்பிள்ளை என்பவர் இருந்தார். நல்ல தோற்றமானவர். அவரோடு கூடவே பிரம்பொன்று இருக்கும். ஆனால் அவர் அடித்ததை நான் காணவில்லை. பார்வையால் பயப்படுத்தி விடுவார். ஸ்ரானிஸ்லஸ் என்பவர் (கட்டை பிரதர்) மிக நல்லவர். மாணவரின் சுகாதாரத்தைக் கவனித்தார். பேர்னாட் என்பவரும் மேரியோசெப் என்பவரும் ஆசிரியராக விருந்தனர். மேரியோசெப் என்பவர் ஆங்கில ஆசிரியர். பின்னர் பிரம்மச்சாரியத்தை விட்டு விட்டார். ஆசிரியர்களாக நீக்கிலாப்பிள்ளை (பொது விஞ்ஞானம்) இம்மனுவல் (கணிதம், கல்விப்பணிப்பாளராக விருந்த சிமியாம் பிள்ளை என்பவரின் அண்ணர்) பிரான்சிஸ் (குருவிமாஸ்ரர்) மனுவல் பிள்ளை மரியாம்பிள்ளை என்போரும் இருந்தனர். ஆசிரிய முத்துக்கள். இவர்களின் தகைமை எனக்குத் தெரியாது. ஆனால் கடமை உணர்வு மிக்கவர்கள். ஒழுக்கக்கல்விக்கு மிக உயர்ந்த இடம் கொடுத்தவர்கள். மனிதரை மனிதராக்கியவர்கள். இவர்களிடம் படித்தவர்கள் புண்ணியம் செய்தவர்கள். தெய்வ நெறியில் வாழவைத்தவர்கள்.

## தொழில்சார் கல்வி

இப்பாடசாலை வளாகத்துள் தச்சுவேலை, அச்சுவேலை, நெசவு வேலை ஆகியன இருந்தன. சப்பாத்துச் செய்கிற தொழிலும் சிறிதளவு இருந்தது. இவைகளுக்கு ஒரு வெள்ளைக்கார அருட்சகோதரர் பொறுப்பாக இருந்தார். தமிழ் நன்றாகப் பேச மாட்டார். செயல்வீரர். எல்லோரையும் அன்பாக நடத்துவார்.

மாட்டுப்பண்ணை, கோழிப்பண்ணை, பன்றிப்பண்ணை, முயல்பண்ணை என்பனவும் இருந்தன. இவற்றுக்கு தோலகட்டியில் பயிற்சி பெற்றவர்கள் பொறுப்பாக இருந்தார்கள். வளாகத்தின் கிழக்கே வயல் இருந்தது. பெரிய இரு கட்டிடங்களுக்குமிடையில் மரக்கறித் தோட்டமும் இருந்தது.

1938ஆம் ஆண்டு, சற்பிரசாத மகாநாடு பெரும் எடுப்பில் நடந்தது. 75ம் ஆண்டு யூபிலிவிழா, பெரிய பந்தல், அனேக குருமார், ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கு பற்றினார்கள்.

நாங்கள் பிரிட்டிசாருக்குக் கீழே இருந்தபடியால் அரச குடும்பத்தினரின் முக்கிய தினங்களையும் கொண்டாடினோம். இனிப்பு வகை கிடைக்கும். யூனியன் யாக் கொடிகளை ஏந்தி பவனி வருவோம்.

1935ம் ஆண்டளவில் சாதாரண பாடசாலை மாணவர்களும் வகுப்பறைகளை விட்டு வெளியே ஓடினோம். ஆசிரியர்களும் ஓடினார்கள். பெரும் இரைச்சல் வானத்தில் கேட்டது. ஒரு வெள்ளைப் பருந்து போல் மிக உயரத்தில் ஆகாய விமானம் வடக்கேயிருந்து தெற்கு நோக்கி பறந்து சென்றது. அதுதான் நான் கண்ட முதல் விமானம்.

நாடகங்கள் போடுவார்கள். நானும் பங்கு பற்றினேன். நடிக்க வராது என்றாலும் பாராட்டினார்கள். தும்பிகளைத் துரத்திப் பிடித்து விளையாடினோம். ஒரு கோணல் புளி மரம் நின்றது. பெரிய பாவம். ஒரே கல்லெறி. தெற்குப் பக்கத்தில் உயர்ந்த படிக்கட்டு. அதில் சறுக்கி விளையாடினோம்.

எனது பாடசாலை வாழ்க்கையை எப்படி மறக்க முடியும்!
"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறென்றும் அறியேன் பராபரமே"
"தீதும் நன்றும் பிறர்தரவாரா"

**மு. கனகசபை**
ஓய்வு பெற்ற கல்வி அலுவலர்

# பூக்கள்



வண்ண வண்ணப் பூக்கள்
வடிவான பூக்கள்
சிவப்பு மஞ்சள் வெள்ளை
எங்கள் வீட்டுப் பூக்கள்

செ. யூட்சாம்சன்
தரம் -1

# மரம்



உணவு தருகிறது
நிழல் தருகிறது
விறகு தருகிறது
பறவைகள் வாழ இடம் தருகிறது

செ. கஜேந்திரன்
தரம் -1

# எனது அம்மா



இன்பமாய் வாழ
இனிய வழிகாட்டும் - அம்மா
குதூகலம் கொண்டு
குறைகள் பல பொறுத்திடுவாள்

காலையில் எழுந்து
கருமங்கள் செய்து
உணவை ஊட்டி
ஊர் போற்ற வளர்த்திடுவாள்

நோய் என்று அழுதால்
நொடிப் பொழுதில் போக்கி
காலம் எல்லாம் எனக்காய்
காத்திடுவாள் - எனது அம்மா

**உ. நிதர்சன்**
தரம் - 2

## அறிந்து கொள்ளுங்கள்

| | | |
|---|---|---|
| பிறந்த அன்றே இறக்கும் உயிரினம் | - | ஈசல் |
| இனிப்புச் சுவையை அறிய முடியாத விலங்கு | - | பூனை |
| உப்பு நீரை விரும்பிப் பருகும் உயிரினம் | - | ஒட்டகம் |
| பறவைகள் கூடு கட்டாத மரம் | - | இலந்தை |
| பூக்காத கனியாக காய்க்காத மரம் | - | அரசமரம் |

**ப. விதுஷன்**
தரம் -2

## இல்லை! இல்லை!! இல்லை!!!

சவூதி அரேபியாவில் நதிகள் இல்லை.
ஆப்கானிஸ்தானில் ரயில்கள் இல்லை
ஆபிரிக்காவில் புலிகள் இல்லை.
சந்திரனில் வாயுமண்டலம் இல்லை.
மண்ணுண்ணி பாம்புக்குக் கண்கள் இல்லை.
வடதுருவத்தில் நிலப்பரப்பு இல்லை.
வண்ணத்துப்பூச்சிக்கு வாய் இல்லை
முதலைக்கு நாக்கு இல்லை
பாம்புக்கு செவி இல்லை
வௌவாலுக்கு பார்வை இல்லை

**அ.அருள்ராஜ்**
தரம் - 2

## வித்தியாலயத்தின் 150வது ஆண்டு நிறைவில் கௌரவிக்கப்பட்ட வளன்சோலை கலைஞர்கள், மெய்வல்லுனர்கள், சமூகப்பணியாளர்கள்



திரு. செபஸ்ரியாம்பிள்ளை அன்ரனி றூமன்
(சமூக சிற்பி)



திரு. ஜோசவ் அன்ரன் வெனான்சியஸ்
(கலைச் சுடர்)



திரு. ஜேம்ஸ்சிங்கம் மிக்கோர்சிங்கம்
(கலைச் சுடர்)



திரு. சூசைப்பிள்ளை யேசுதாஸ்
(கலைச் சுடர்)



திரு. ஜோசப் வின்ஸ்லோ
(சமூக சிற்பி)



திரு. ஆசைத்துரை அமிர்தநாதர்
(மெய்வல்லோன்)



திரு. சிவசம்பு தியாகராசா
(சமூக சிற்பி)



திரு. கிறேசியன் டேமியன்
(சமூக சிற்பி)





திரு. மிக்கோர்சிங்கம் அமிர்தவாசகம்
(சமூக சிற்பி)



திரு. செபஸ்ரியாம்பிள்ளை கனியூட்
(மெய்வல்லோன்)



திரு. அருளப்பு தோமாஸ்
(சமூக சிற்பி)



திரு. பறுனாந்து எட்மன் பீரீஸ்
(மெய்வல்லோன்)



திரு. மிக்கோர்சிங்கம் தவப்பிரகாசம்
(சமூக சிற்பி)




150வது வருட சிறப்புக் கல்விச் சுற்றுலா 2011



வித்தியாலய
150ம் ஆண்டு
நிறைவுத் திருப்பலி
08.09.2011

## எனது பூந்தோட்டம்

இயற்கையின் அழகு வெளிப்படும் சிறந்த இடம் பூஞ்சோலை ஆகும். எனவே அழகிய பூக்களை எமக்குத் தரும் பூஞ்செடிகளை வளர்க்க நான் முடிவு செய்துதேன். இதன் படி ஒரு சிறிய பூந்தோட்டத்தை அமைத்தேன்.

இங்கு றோசா, செவ்வந்தி, மல்லிகை, செவ்வரத்தை, எக்சோரா போன்ற பல செடிகளும், கொடிகளும் உள்ளன. தினமும் பல வகைப் பூக்கள் மலர்கின்றன. பூந்தோட்டத்தை நோக்கி வண்ணத்துப்பூச்சி, தேனீ, சிறிய வண்டுகள், சிட்டுக்குருவிகள் போன்றவை வருகின்றன. இப் பூந்தோட்டம் சிறியதாக இருந்தாலும் அழகானது. செழிப்பானது, கவர்ச்சியானது. தோட்டத்தில் மலர்கின்ற பூக்களைப் பார்க்கும்போது ஒவ்வொன்றும் ஒவ்வொரு அழகைத் தருகின்றன. பூந்தோட்டம் மிகவும் செழிப்புடன் வளர தினமும் பராமரித்துப் பார்வையிடுவேன். பூந்தோட்டத்தில் இருந்து கிடைக்கின்ற பூக்களை இறைவனுக்கு காணிக்கையாகப் படைக்கின்றேன்.

பூந்தோட்டத்தால் பல நன்மைகள் உள்ளன. வீட்டிற்கு அழகையும் மகிழ்வையும் தருகின்றது. சுவாசிக்க சுத்தமான காற்றையும் தருகிறது. பூக்கள் தினமும் புதுப் புது மணம் வீசும், உடல் புத்துணர்வு பெறும். கண்ணுக்குக் குளிர்ச்சியையும், கவர்ச்சியையும் கொடுக்கிறது.

இப் பூந்தோட்டம் எனது அன்றாடத் தேவைக்கான பூக்களையும், பாடம் சம்பந்தமான கேள்விகளுக்கு விடைகளையும் தருகின்றன. பூந்தோட்டத்தால் நான் பல நன்மைகளைப் பெறுகிறேன். நீங்களும் நன்மை பெறவும், இயற்கையை நேசிக்கவும் என்னைப் போல் பூந்தோட்டத்தை அமையுங்கள். உங்கள் சுவாசம் புத்துணர்வோடும். சுத்தமாகவும் இருப்பதற்கு பூங்கன்றுகளை நாட்டுங்கள். நமது வாழ்வு மலர்கின்ற பூக்களைப்போல் பிரகாசிக்க பூந்தோட்டத்தை அமைத்து வாழ்வை இனிமையாக்குவோம்.

ச. அனிஸ்ரன் - தரம் -03 மாணவன்

## நான் பெரியவனானால்...

'அரிது அரிது மானிடராதல் அரிது' என்றார் ஔவை மூதாட்டி. எனவே மனிதப்பிறவி எடுத்துள்ள நாம் நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது முதுமொழி எனவே என்னைப் பெற்றெடுத்து எனக்குரிய தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும் தெய்வங்களான பெற்றோரை என்றுமே கனம் பண்ணல் வேண்டும். அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியது ஒவ்வொரு பிள்ளைகட்கும் உரிய பொறுப்பாகும்.

அடுத்து எம்மை கல்விக் அறிவில் வளர்த்தெடுத்து சமுதாயம் விரும்பும் ஓர் நல்ல பிரஜையாக உருவாக்கும் ஆசான்களை என்றுமே மதிக்கும் பண்பினை வளர்ததுக் கொள்ள வேண்டும். சமுதாய நலனில் அக்கறை கொள்ளல் வேண்டும். ஏழை எளியவர்களை தேடிச்சென்று உதவும் மனநிலைதயை வளர்த்து செயற்படுத்தல் வேண்டும்.

சமூகப்பற்றுடன் சமயப் பற்றினையும் என்னகத்தே கொண்டு, கல்வியை நிறைவுறக் கற்று இறைவனின் போதனைகளை மக்கள் மத்தியில் பரப்பும். தூய்மையான மதகுருவாக என்னை ஆக்கிக் கொள்வதே எனது உயரிய இலட்சியமாகும்.

யே. அன்ரனிதாஸ் - தரம் - 04 மாணவன்

## காலைக்காட்சி

சூரியன் தனது ஏழு குதிரைகள் பூட்டிய தேரிலே தன் பொற் கிரணங்களை அள்ளி வீசியபடி உதயமாகினான். அந்த உதய சூரியனின் வருகையால் பூரிப்பு அடைந்த வானம் எனும் நீல நிற மெல்லியலாள் வெள்ளைவெளேரென வெளுத்து தோன்றினாள். கிழக்குத் திசையும் வெளுத்துத் தோன்றியது. இரவு முழுவதும் பூமியைப் பகலாக்கிக் கொண்டிருந்த நட்சத்திரங்கள் எல்லாம் எங்கோ மறைந்து போயின.

ஆலயங்களிலே கண்டா மணியோசை 'கணீர், கணீர்'' என ஒலித்தது. சேவல்கள் கூவின. காகங்கள் கரைந்தன பறவைகள் இன்னிசை பாடின. வீதியோரங்களில் இராப்பொழுது முழுவதும் நாட்டுக்கும், மக்களுக்கும் ஒளியைத் தந்த ஒளி விளக்குகள் அணைந்தன. மலர்களுக்கு ஒளியைத் தந்த ஒளி விளக்குகள் அணைந்தன மலர்களின் மகிழ்ச்சியினால். இதழ்கள் விரிந்தன. குளத்தினிலே மலரும் தாமரை தனது நாயகனின் வரலால் இதழ்களை மெல்ல மெல்ல விரித்துச் சிரித்தது. மலர்களிலே உள்ள நறுஞ்சுவையான தேனைசுவைப்பதற்கு. ஆயத்தம் என வண்டுகள் ரீங்காரம் செய்தன. மரங்களிலும் புற்களிலும் தாவரங்களிலும் வீழ்ந்திருந்தன. பனித்துளிகள் மெல்ல மெல்ல அகன்றன.

உயிர் பெற்றது போல மாந்தரெல்லாம் துயில் விட்டு எழுந்தனர். அவரவர் தமது காலைக்கடன்களை முடித்து இறைவணக்கம் செய்து கொண்டு அவரவர் தொழில்களுக்குச் சென்றனர். விவசாயிகள் "செய்யும் தொழிலே தெய்வம்" என்பதற்கு இணங்க சூரியனை நமஸ்கரித்துக்கொண்டு வயல்களுக்குச் சென்று தங்கள் வேலைகளைக் கவனித்தார்கள், மாணவர்கள் பாடசாலைக்குச் சென்றார்கள், போக்குவரத்து வசதிக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் வாகனங்கள், இசைச்சலுடன் வீதி வழியிலே சென்றன. கடற்கரையை அண்மித்து நின்ற கதிரவன் அழகாகச் சுடர்விட்டு பிரகாசித்துக் கொண்டிருந்தான் இந்த வேளையிலே மீனவர் தத்தம் படகுகளில் "ஏலோலோ ஏலோலோ" என்ற பாடலைப் பாடிக் கொண்டு மீன் பிடிக்கச் சென்றனர். ஆகா! என்ன அற்புதம். எல்லாம் இயற்கையாக அமைந்து விட்ட இறைவனின் படைப்பின் அற்புதந்தான் என்ன!

பி. அன்ரனி பிரசன்னா - தரம் - 05 மாணவன்

## சுனாமியின் சுயசரிதை

சுனாமி என்ற என்னுடைய பெயர் ஜப்பானிய வார்த்தையாகும் எனது பெயரின் பொருள் துறைமுக அலை என்பது. நான் துறைமுகத்தை அதிகமாக தாக்குவதால் எனக்கு துறைமுக அலை என்று அதாவது சுனாமி என்று அழைத்தார்கள். நான் பல நூற்றாண்டிற்கு முன் பிறந்தவன். என்னுடைய விளையாட்டாலும், வருகையினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் ஜப்பானியர்கள் தான்.

நான் கடலில் இருப்பவன். தரையைத்தேடி வரும்போதுதான் எனக்கு சுனாமி என்று பெயர் தருவார்கள். எனக்கு அதிகம் பிடித்த இடம் ஜப்பான். எனவே நான் அடிக்கடி ஜப்பானை பார்வையிட செல்வது வழக்கம். இதுவரை நான் நூற்றெழுபது தடவை ஜப்பானை பார்வையிடச் சென்றிருக்கிறேன். நான் தரையை நோக்கி வரும் போது கடல் அமைதியாகக் காணப்படும் கடலின் கரையோர நீர் மட்டம் மிகக் குறைவாக இருக்கும். அதனைத் தொடர்ந்து தரையே நோக்கி அதிவேகத்தில் வருவேன். அப்போது எனக்குத் தடையாக உள்ள அனைத்தையும் தாக்கி எனது பயணத்தை மேற்கொள்வேன். அது வீடாகவும் இருக்கலாம். மரமாகவும் இருக்கலாம். ஏன் மனிதனாகக் கூட இருக்கலாம். எனக்கு உயிர் உள்ளவை உயிர் அற்றவை என்ற பாகுபாடு தெரிவதில்லை. அனைத்தையும் என் உடலால் மூடி நினைத்த இடம் வரை சென்று வருவேன்.

நான் கடைசியாக இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு டிசம்பர் இருபத்தி ஆறாம் திகதி தரையை நோக்கிப் பயணித்தேன். இந்தோனேசியா, இந்தியா, இலங்கை, மாலைதீவு, மலேசியா போன்ற புதிய இடங்களுக்கு சென்று வந்தேன். என்னால் பலர் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். சொத்துக்களை சேதமாக்கினேன். உயிர்கள் பலவற்றைப் பறித்துக் கொண்டேன். அதனால் என்னை யாரும் விரும்புவதில்லை. என்னை யாரும் அரவணைப்பதும் இல்லை. மனிதர்களின் மனதை நோகடித்து மீண்டும் எனது இருப்பிடத்திற்கு செல்கின்றேன். எனது பொறுமைக்கும் எல்லை உண்டல்லவா? எல்லை மீறும் போது மீண்டும் வருவேன். என்பதை உங்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ச. ஜெனிபர் - தரம் - 06 மாணவன்

## கணனியின் பயன்கள்

விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக இன்றைய உலகு கணனி மயமாகி விட்டது. எங்கு பார்த்தாலும் கணனியின் ஆதிக்கமே காணப்படுகின்றது. அலுவலகம் என்றாலும்சரி வங்கிகளாயினும்சரி வணிக நிறுவனங்களாயினும்சரி ஒரே கணனி மயமாகவே உள்ளது. இன்றைய காலத்தில் கணனி இல்லையென்றால் மனிதன் இல்லை என்ற நிலை உருவாகி விட்டது. எனவே கணனி மனிதனுக்கு எவ்வளவு அவசியமானது எனவும் அதனுடைய பயன்பாட்டையும் நோக்குவோம்.

கணனியில் தொலைக்காட்சி போன்ற திரையமைப்பு உண்டு. இது கணனித்திரை என அழைக்கப்படும். ஏற்கனவே கணனிக்கு கொண்டு வரப்பட்ட தகவல்களை வெளிக்கொண்டுவருவதற்கு இத்திரை பயன்படுத்தப்படுகின்றது. கணனியின் அடுத்த பகுதி தட்டச்சுப் பொறி போன்று பல பொத்தான்களைத் தன்னகத்தே கொண்ட விசைப்பலகையாகும். இப்பலகை எழுத்துக்களையும் இலக்கங்களையும், குறியீடுகளையும் கொண்டிருக்கும். அவற்றைப் பொறிப்பதன் மூலம் எமக்குத் தேவைப்படும் விடயங்களை நாம் கணனியில் பதிவு செய்யலாம்.

இவை தவிர நகர்த்தக் கூடியதாகவும் எலி (Mouse) போன்ற தோற்றத்தைக் கொண்டதாகவும் ஒரு பகுதி காணப்படுகின்றது.

இதனை "மவுஸ்" என்று அழைப்பர். தமிழில் சுட்டி எனக் கூறுவர். இது கணனித் திரையில் காணப்படும் அட்டவணையில் எமக்குத் தேவையான பகுதிகளைத் தெரிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. கணனித்திரைக்கு அருகில் பெட்டி போன்றதொரு வேறுபடுத்திப் பார்க்கக் கூடிய பகுதி ஒன்றுள்ளது. இது கணினியின் மையச் செயலகமாக விளங்குகின்றது. இது மனிதனுடைய மூளைக்கு ஒப்பான ஒரு பகுதியாகும். இதுவே கணனியின் பகுதிகளின் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தவும் தேவைப்படும் கட்டளைகளைப் பிறப்பிக்கவும் உதவுகின்றது. கணனியின் மற்றொரு பகுதியாக அச்சுப்பொறி காணப்படுகின்றது. கணனியிலுள்ள இப்பொறி மூலம் அச்சுப்பதித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

கணனி மூலம் நாம் மேலும் பல்வேறு பயன்களைப் பெற்றுக்கொள்ளலாம். கடிதங்களை அச்சுப் பொறித்துப் பிரதிகள் எடுக்கலாம். தூரப் பிரதேசங்களில் வாழ்பவருக்கு மின் அஞ்சல் மூலம் எமது ஒளிப்படங்களையும் தகவல்களையும் அனுப்பலாம். பல்வேறு விளையாட்டுக்களையும் விளையாடலாம். இறுவட்டு மூலம் படங்களையும், பாடல்களையும் பார்த்தும் கேட்டும் மகிழலாம்.

இவை யாவற்றையும் விட உலகையே கிராமமாக்கி ஒவ்வொருவரையும் இணைக்கின்ற இணையத்தின் ஊடாகப் பல தகவல்களையும் பெற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் எமக்கு வேண்டிய நூல்களிலே தேவைப்படும் பகுதிகளைப் பெற்றுப் படிக்க முடியும். இனிவரும் காலங்களில் கணனியின் பயன்பாடு மேலும் துரிதமாக விரிவடையும் என்பது உறுதியாகின்றது. கணனி விசேடமாக மாணவர்களின் கல்வியில் முக்கியம் பெறுகின்றது. எனவே மாணவர்களாகிய நாமும் கணனியைக் "நீரை நீக்கிப் பாலை அருந்தும் அன்னப்பறவை போல" நல்ல முறையில் கற்று அதனூடாகப் பல பயன்களைப் பெறுவோம்.

சி. துவாகரன் - தரம் - 08 மாணவன்

## கல்வி

கல்வி என்னும் செல்வம் நம்மில் வளர வேண்டும்
நாளைய உலகம் இதனால் வளர்ச்சி அடையவேண்டும்
பாடும் குரல்களில் பாடுங்கள்
பாடத்தை தினமே படியுங்கள்
கல்வி கற்கவே நாமும் இங்கு வந்தோம்
மனமே மனமே கல்வியை என்றும் வளர்த்திடு
தினமே தினமே கல்வியால் என்றும் வளர்ந்திடு
ஒற்றுமையாக வாழ்ந்திட
நட்புறவுடன் வாழ்ந்திட
ஆசான் சொல்லும் அறிவுரையை நாம்
அன்பாய் ஏற்றுக் கொள்ளுவோம்
ஆசான் பணி தொடர்ந்திட
மாணவர் அறிவும் பெருகிட
கல்வி என்னும் பயிருக்கு - நாம்
கண்ணீர் மழையை சிந்துவோம்

பி. ஜோன் மில்ரன்
தரம் - 09 மாணவன்

# மீண்டும் உயர்வோம்

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து"

"கல்வி என்னும் பயிருக்கு கண்ணீர் என்னும் மழை வேண்டும்"

தொழில்நுட்ப சாதனங்கள் அதிகரித்து நவீன இயந்திரயுகமாக மாறியுள்ள இக்காலத்திலே தொலைத்தொடர்பு சாதனங்களும் அதிகரித்து உலகமே சுருங்கி சிறு புள்ளியாக காட்சியளிக்கின்றது. இவற்றிற்கெல்லாம் காரணம் எமது கல்வியே. இக் கல்வியின் மூலம் நாம் அழிவை நோக்கிச் செல்லாது மீண்டும் மீண்டும் முன்னேற்ற பாதையில் உயர்வடைய எம்மைத் தயார் செய்வோம். நாம் வாழ்வது அறிவியல் தொழில்நுட்பயுகம். அல்லது கல்வி யுகம் என்றே அழைக்கப்படுகிறது. இவ்வறிவியலும் தொழில்நுட்பமும்தான் தொழிற்புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனைத் திறமையாகப் பயன்படுத்தியதன் மூலம் முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

அதாவது இயற்கை வளங்களான நிலம், நீர் என்னும் நிலையிலிருந்து கனியவளம், எண்ணெய் வளம் போன்றவற்றினை நாம் பயன்படுத்த முடிந்தது. மனிதன் தன்னுடைய முயற்சியினாலும் நிலக்கரி எண்ணெய், எரிவாயு, மின்சாரம் போன்றவற்றின் ஆற்றலாலும் தனது அன்றாடப் பணிகளை முடிக்கும் நிலைக்கு வளர முடிந்தது. இது மனிதனின் முன்னேற்றத்தை எண்ணிப் பார்த்திராத அளவிற்கு விரிவாக்கியது.

கல்வியில் அறிவியல் மனிதனது முயற்சியினை வளர்ப்பதுடன் நம்மை செயற்படத் தூண்டுகின்றது. சிறுவயதில் நாம் பெற்றுக் கொள்ளும் கல்வியே எதிர்கால சந்ததியினரையும் முன்னேற்றப் பாதையில் வழிநடத்திச் செல்கின்றது. மனிதன் தனது வாழ்வில் எடுக்கும் முடிவுகளில் பகுத்தறிவினைப் பயன் படுத்துகின்றான். பற்பல ஆய்வுகளை மேற்கொண்டு தொழில்நுட்ப வசதிகளைப் பெருக்கியுள்ளான். "இளங்கன்று பயமறியாது" என்னும் பழமொழிக்கேற்ப இன்றைய சிறார்கள் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக்கொள்ளும்போதே துணிந்து ஆராய்ச்சி செய்து பல சாதனைகளை அடைகின்றனர். தொலைத்தொடர்பு சாதனங்கள், விளையாட்டுப்பொருட்கள் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன.

"கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன்?" என்பது பழமொழியா யிருந்தாலும், இம்மொழியானது மனிதன் கிணற்றுத்தவளையாக இல்லாமல் அறிவியலில் வளர்ந்து செயல்பட அறிவுறுத்துகின்றது. அணை கட்டியுள்ள நீர் தேங்கியிருந்தால் எதற்கும் பயன்படாது அது பெருக்கெடுத்துப் பாயும்போது நிலம் செழிப்படைகின்றது. இதனைப்போன்றதே மனித அறிவும். இவ்வறிவு பல்கிப் பெருகியதால் தான் சாதனைகளை அடைய முடிந்தது. கணினியுகமாகி தொலைத்தொடர்பு சாதனங்கள், செய்மதி, இணையம் போன்றன வளர்ச்சிய டைந்துள்ளன. இன்று மின்னஞ்சல் மூலம் விரைவாக தகவல்களை பரிமாறவும் சகல விதமான கோப்புக்களையும் இணைத்து அனுப்புவதற்கும் உரையாடல்களை பதிவு செய்தும், படங்களை அனுப்புவதற்கும் பயன்படுகின்றது. தொலைபேசி மூலம் ஒருவர் எந்த இடத்தில் இருந்தாலும் தொடர்புகளை இலகுவாக மேற்கொள்ள முடிகின்றது.

கல்வி மூலம் அறிவியல் வளர்ச்சியும் தொழில்நுட்பமும் முன்னேற்றத்தைப் பெற்றுள்ளன. இவை உலக அழிவுக்கான செயற்பாடுகளைத் தவிர்த்து, முன்னேற்றத்தை நோக்கிச் செல்ல முயற்சிகளை மேற்கொய்ய வேண்டும். முன்னேறுவோம். இவ்வறிவியலை அழிவுக்குட்படுத்தாது முன்னேற்றப்பாதையில் வளர்ச்சியடைய வழிவகுப்பது நம் எல்லோரின் தலையாய கடமையாகும். "முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்." "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்". என்பதை உணர்ந்து உயர் வடைவோம்.

பி. ஸ்ரீபன் - தரம் 10 மாணவன்

# நன்றி நவில்கின்றோம்

* எமது யா/சென் ஜோசப்ஸ் வித்தியாலயத்தின் 150 ஆவது அகவை நிறைவு விழாவின் சிறப்பு வெளியீடான 'வளன்சோலை' என்னும் மலரானது மொட்டரும்பி இதழ் விரித்து மலர்ந்து மணம் வீசும் வரை இம்மலரின் செழிப்பிற்கும் வளர்ச்சிக்கும் உரமாக நின்று வளர்த்து விட்டவர்கள் பலர்.

* வளன் சோலை சிறப்புற மலர்வதற்கு ஆசிச் செய்திகளை வழங்கிய ஆயர், அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், ஆளுநர், வலயக்கல்விப் பணிப்பாளர், கல்வித்திணைக்கள அதிகாரிகள்.

* இச்சிறப்பு மலரானது நிறைவுடையதாக வெளிவர வேண்டும் என்ற பேரவாவுடன் எம்மை உற்சாகமூட்டிச் செயற்பட வைத்தும் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் வழங்கி நெறிப்படுத்தியும், மலரின் ஒவ்வொரு இதழ்களையும் கூர்ந்து அவதானித்து இம்மலர் சிறப்புற, அயராது பாடுபட்டு எம்மை வழிப்படுத்திய எமது வித்தியாலய அதிபர்.


* இம்மலர் மலர்வதற்கு ஆக்கங்களைத் தந்து பல்வேறு வகையிலும் ஒத்துழைத்து வழிப்படுத்திய எமது பெருமதிப்பிற்குரிய பேராசிரியர்கள்.

* இம்மலரை அலங்கரிக்கும் காத்திரமான கட்டுரைகளைத் தந்துதவிய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள்.

* இம்மலரானது தரமாக அமைவதற்கு வேண்டிய நிதியுதவிகளை வழங்கி ஒத்துழைத்த உள்நாட்டு வெளிநாட்டு நல்லுள்ளங்கள்.

* பல்வேறு இடர்களுக்கு மத்தியில் இம்மலரை அச்சிட்டுத் தந்துதவிய பிரதான வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அன்னை அச்சக உரிமையாளர் மற்றும் ஊழியர்கள்.

* இவ்வாறாக எமது வித்தியாலயத்தின் 'வளன்சோலை' ஆனது சிறப்பாக மலரவேண்டும் என்ற பெருவிருப்புடன் பல வழிகளிலும் உழைத்த இத்தகைய அன்பு நெஞ்சங்கள் அனைத்திற்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதில் இறும்பூதடைகின்றோம்.



வணக்கம்

-மலர்க்குழு-



அன்னை அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.